www.tamilarangam.net

Registered as a News Paper in Sri Lanka

UK-PRICE-90 P

දිනමුරසු වාරමලර්

பக்கம் 20

மே.28-ஜூன.03,1995

ரூபா 10/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 103

# புலிகளுக்கு அமெரிக்க உதவி?







இலக்கிய நயம்

சினிவிசிட்

எக்ஸ்ரே ரிப்போர்ட் —நாரதர்

## திக்-திக் புதிய தொடர் ஆரம்பம்

ராஜேந்திரகுமார்

அரசியல் தொடர்

## சிறை உடைப்பு நிர்மலா தப்பினார்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முரசம்

## நம்பிக்கையே உரம்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.
எடுத்துச் சொல்வதெல்லாம்
எவர் செவியிலும்
ஏறாது போனால்
நம்பிக்கைகள் காணாமல் போய்விடும்.

கிழக்கில் மனிதர்கள்
தற்காப்புக் கேடயங்களாகப்
பயன்படுத்தப்படும் செய்தி
பாராளுமன்றம் வரை எட்டியிருக்கிறது.

எட்டியிருக்கிறதே தவிர
தட்டிக்கேட்டு தடுத்து நிறுத்தும்
நடவடிக்கைகள் மட்டும்
மந்தகதியில்தான் இருக்கின்றன.

திருகோணமலையில்
அவசரமாய் ஊர்காவல் படை
அமைத்தார்கள் பொலிசார்.

நினைத்தது போலவே
'தடி எடுத்தவன் சண்டப் பிரசண்டன்'
நிலை உருவாகியிருக்கிறது.
அப்பாவித் தமிழர் ஒருவர்
ஊர்காவல் படையால்
சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்.

தமிழ்-முஸ்லிம் சமூகங்களது
பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்.
ஆனால், பாதுகாப்பின் பேரால்
எரிகிற வீட்டில் பிடுங்குவது லாபமென்று
நினைப்போரிடம்-
ஆயுதங்களை அள்ளித் தரக்கூடாது.

ஊர்காவல் படை விடயத்தில்
இன முரண்பாடுகளையும்
சமூக முரண்பாடுகளையும்
தோற்றுவிக்கும் விதமான போக்குகள்
உடன் நிறுத்தப்பட வேண்டும்.

பெண்களைக் கைது செய்யும்
விடயத்தில் நிதானமும்
அத்துமீறல் தவிர்ப்பும் அவசியம்.

பல நூற்றுக் கணக்கில்
தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு
கடும் சிறைகளில் அடைக்கப்பட்ட
கடந்த கால நடைமுறைகள்தான்
ஆயுதப் போருக்கு
நெய்வார்த்தன என்பதை
நினைவில் வைத்திருப்பது நல்லது.

பெண்கள் புலிகளில்
இருக்கிறார்கள் என்பதற்காக
தமிழ் பெண்கள் யாவரும்
புலிகள் என்ற கோணத்தில்
நோக்கப்படுவதும்
மனம் நோக வைக்கும் செயல்களும்
இடம்பெறாமல் தடுக்க வேண்டியது
பாதுகாப்பு அமைச்சின் பொறுப்பாகும்.

மக்கள் நடமாடும் பகுதிகளில்
மிதி வெடிகளை விதைக்கும்
புலிகளது உத்திகள்
வரவேற்கப்படக்கூடியதல்ல.

இரு தரப்பிலும்
உதைபடும் பந்தாக
வதைபடும் மக்கள்
விரக்திகொள்ள காரணமாவதில்
யாருக்கும் லாபம் இல்லை.

□□

தமிழ் மக்கள்
வகை தொகையின்றி கைதாவதை
தடுத்து நிறுத்த
குழுக்கள் அமைப்பதாக
ஜனாதிபதி கூறியிருப்பது நல்லது.

ஆனால்-கடந்த அரசின் காலத்திலும்
தமிழ் கட்சிகளை கொண்ட
இவ்வாறான குழுக்கள் அமைக்கப்பட்டன.
பின்னர் அவை கண்டுகொள்ளப்படவில்லை.

தமிழ் கட்சிகள்
புலிகளுக்கும் சிபாரிசு செய்து
விடுவித்துவிடுவார்கள் என்று
சந்தேகங்கள் எழுந்தனவோ தெரியாது.

இனி உருவாக்கப்படும்
செயலணிக் குழுக்கள் என்றாலும்
சீராக இயங்க
பாதுகாப்பு தரப்பின் ஒத்துழைப்பும்,
அக்குழுக்கள்
அப்பாவிகள் என்று சிபாரிசு செய்வோரை
துரிதமாக விடுவிக்கும் நிலையும்
ஏற்படவேண்டும்! ஏற்படுமா பார்க்கலாம்.

சாதாரண மக்கள்
சிரமங்களையும், சோதனைகளையும்
எதிர்நோக்குவதை இல்லாதொழிப்பதில்
அரசு காட்டும் அக்கறைதான்
நடைமுறை நம்பிக்கைக்கு உரம்.

□□

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை-

என்றென்றும் அன்புடன்
-ஆசிரியர்-

# ஆன்மீகம்

## பிள்ளைகளை வழி நடத்துவோம்.

சிறு பிள்ளைகளை வளர்ப்பதில் பெற்றார் பெரும் கவனமாய் இருக்கவேண்டும். நல்லொழுக்கமும் நல்லியல்புகளும் சிறுவயதிலேயே அவர்களின் மனத்தில், நன்கு பதிக்கபடவேண்டு. அப்பொழுதுதான் அவைகள் மனத்தில் பசுமரத்தாணி போல் பதிந்துவிடும். பிறகு என்று மறவார்கள்.

"பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர் வயதிலும் அதை விடாதிருப்பான்." இந்த வாக்கை மனதிலிருத்திக் கொள்வது நல்லது. (நீதி 22:6)

'ஆன்மீக' வாழ்க்கையிலே பிள்ளைகளை இட்டுச் செல்வது பெற்றார்களின் பெருங்கடமை. கீழ்க்காணும் மேற்கோள்களை நன்கு சிந்தித்துப் பார்ப்பது நமது கடமை.

"நீங்கள் என வார்த்தைகளை உங்கள் இருதயத்திலும், உங்கள் ஆத்மாவிலும் பதித்து, அவைகளை உங்கள் கையின் மேல் கட்டி, உங்கள் கண்களின் நடுவே ஞாபகக் குறியாக வைத்து, அவைகளை உங்கள் பிள்ளைகளுக்கு உபதேசித்து, நீங்கள் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியிலே நடக்கிற போதும் அவைகளைக் குறித்துப் பேசுவீர்களாக" (உபா 11:19,20)

ஆம், பிள்ளைகளை ஆன்மீகத்தில் வழிநடத்த நேரம் காலம் என்று ஒன்றில்லை. ஆனால், காலத்துக்குக் காலம் நேரத்துக்கு நேரம் போதனையில் வழிநடத்த வேண்டும். ஏனெனில் வாழ்க்கை என்பது ஒரு தொடர் காவியம் போன்றது.

எனவே, "உன் மகனை சிட்சை செய். அவன் உனக்கு ஆறுதல் செய்வான். உன் ஆத்மாவிற்கு ஆனந்தத்தையும் உண்டாக்குவான்" எனவே, பெற்றார்களே வேதம் சொல்வதை ஓதி அதன்வழி நடவுங்கள்.

ஏ.பி.வி.கோமஸ்

## வாக்குறுதியை நிறைவேற்றல்

ஒரு முறை இஸ்லாத்திற்கும், முஸ்லிம்களுக்கும் எதிராக பல அட்டூழியங்கள் புரிந்த ஹுர்முஸா கைது செய்யப்பட்டு கலீபா உமர் (ரலி) முன் கொண்டுவரப்பட்டான். அப்போது.....

"மூஸாவே! எமக்கெதிராக ஏன் கொடுமைகள் புரிந்தீர்? அதற்கான காரணத்தை விளக்கும்" என கலீபா வேண்டிய போது "எனக்கு தாகமாக இருக்கின்றது. முதலில் தண்ணீர் கொஞ்சம் தாருங்கள்" எனக்கேட்டான் ஹுர்முஸா.

அவ்வாறே அவனுக்கு தண்ணீர் கொடுக்கப்பட்ட போது....அதை அவன் பருகாமல் பார்த்துக் கொண்டிருருப்பதை அவதானித்த கலீபா அவர்கள்...

"மூஸாவே! முதலில் நீரைப்பருகும். அப்புறம் ஆறுதலாகச் சொல்லும். அது வரை உம்மை நாம் ஒன்றும் செய்ய மாட்டோம்." என்றார்.

அதற்கு அவன்....

"நான் நீரை பருகிக்கொண்டு இருக்கும் போது கொல்லப்படுவேனோ எனப் பயப்படுகிறேன்" என்றான். அதற்கு கலீபா அவர்கள்... "நீர் நீரைப் பருகி முடிக்கும் வரையில் கொல்லப்பட மாட்டீர்" என உறுதியளித்தார். உடனே ஹுர் மூஸா நீரைப் பருகாமல் அதனை நிலத்தில் ஊற்றினான்.

"கலீபாவே! நான் நீரைப்பருகவில்லை. எனவே நீங்கள் உங்கள் வாக்குறுதியை காப்பாற்றுங்கள் என வேண்டினான். கலீபா அவர்களின் தேகம் நடுங்கியது. கண்கள் இரத்தச்சிவப்பேறின. "ஹுர் மூஸாவே! இதோ இங்கிருக்கும் வாளால் உம்மை இரண்டு துண்டமாக வெட்டி இருப்பேன். ஆனால் கொடுத்த வாக்கை காப்பாற்றுதலே ஓர் முஸ்லிமின் கடமையாகும். அதனால் உம்மை மன்னித்தேன்." என்றார்.

எனவே, நாம் அளிக்கும் வாக்குறுதி வாய்க்காற்றாக மட்டும் இருந்து விடாமல்; அது எத்தகைய இடையூறுகளை ஏற்படுத்தினாலும் அவற்றை நிறை வேற்றுதலே ஓர் மனிதனின் கடமையாகும். அதன் வழி நாமும் நடப்போமாக.

ஏ.பீ.எம். ஜிப்ரி-பேருவளை.

## கவிதைப்போட்டி இல-100

### வியக்கவைத்த கவிதைகள்

### குறும்பு

"ஆடையின்றிப் பிறந்தோம் ஆனால்
ஆசைகளைத் துறந்தோமில்லை"-இக்
கோடைக்கு இதுவே குளிர்ச்சி எங்கள்
குறும்புத்தனத்திலும் ஒரு தனிக்கவர்ச்சி!

அமிர்த-சந்திரபாலன்-திருகோணமலை.

### உள்ளமற்ற மானிடனே!

"உடுக்கத்தான் உடை இல்லை
உறங்கத்தான் இடம் இல்லை
உருவத்தைப் பார்த்த பின்னும்
உதைத்துத்தான் துரத்துகிறாய்
உள்ளமற்ற மானிடனே.

மெ.இராமவேலு-உடபுசலாவ.

### ஆழிக்குள் ஆபத்து

ஆழிக்குள் செல்ல வேண்டாம்
அங்குமிப்போ ஆபத்து
என்றுரைத்த ஆசானின்
அறிவுரையை மறந்திப்போ
அவரடிக்குத் தான் பயந்து
ஆடையின்றி ஓடுகிறோம்.

இ.உஷாநந்தினி-கல்முனை.

### அடிமை விலங்கு

"நிர்வாணக் கோலமுடன்
நிம்மதியும் தாமிழந்து
கர்ம வினை சூழ்ந்து உடல்
கசையடியும் வாங்கி நொந்து
அடிமை விலங்குடனே
அவதியுறும் மழலை வாழ்வு
விடிவு கண்டு வளம் பெறவே
வீறு கொண்டு எழுந்திடுவீர்"

மும்தாஜ் ஜெஸ்மின் முஸ்தபா-ஏறாவூர்-06

## கவிதைப் போட்டி இல-103



### கவனியுங்கள்

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 03.06.1995

-முகவரி-

கவிதைப் போட்டி இல: 103
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772,
கொழும்பு.



### தடையா

மீன்பிடிக்கத்தானே
தடை!
குளிக்கவும் தடையா?
கடலில்
இறங்கத்தானே
தடை!.
கரையில் நிற்கவும்
தடையா?

என்.சிவநேசராஜா,
பெரிய போரைதீவு.

### "இறுமாப்பு"

உரிமைகள்
இழக்கப்படும் போது
உடைகளை
இழந்தாலென்ன-எனும்
சிறுவர்களின்
இறுமாப்போ.....?

செ.சுகுமார்-மாங்கேணி.

### விளைவு.

அரும்புகள் நிர்வாணம்!
அதிரடி நிர்வாகம்!!

ஏ.என்.எம்.ஜவாத்-புத்தளம்.

### யாரோ துரோகி..!

தேசத்தை
நிர்மூலமாக்கியவரை
விட்டுவிட்டு.....
தேகத்தை
நிர்வாணம் காட்டியவரை
ஏன் விரட்டுகின்றீர்...?

எஸ்.சுகிர்தராஜன்-கல்முனை.

### முடிவு

அடிமைத் தளையினை
அறுத்தெறிவோம்
கொடுமைக் கினியொரு
முடிவெடுப்போம்.

சக்றா யூஸுப்-கொலன்னாவ.

### புரட்சி மூளும்

ஆளுக்கு ஆளை
அடிமையாய் ஆக்கினால்
மூளுமே நெஞ்சினில்
மூர்க்கப் புரட்சியது!

ச.மகாலிங்கம்-வெலிமடை.

### பாதுகாப்பு

தண்ணிரிலும்
'கன்னி' வைப்பதால்
தற்காலிக
தடுப்போ!???

எஸ்.மௌனேஷ்-மட்டக்களப்பு.

### பரிசுக்குரிய கவிதை

### "ஜீவநீர்க் கரைதேடி"

யுத்தப் புயல் உதிர்த்த பிஞ்சுகளாய்
சொத்து, சுக, சுதந்திரங்களில்லாத
அகதிச்சிறை அடிமைகளாய்,
காரிருள்போல், கல்நெஞ்சு
கைக்கோலால் துரத்திவர
பொறுப்போடொன்றுபட்டு ஏது உலகு
காணபதற்கு
ஜீவ நீர்க் கரைதேடி ஓடுகிறோம்
நிர்வாணிகளாய்.

வாழையூர்-வைரமுத்து

### அடிமேல் அடி

"அடி மேல் அடித்தால் அம்மிதானே
நகரும்
ஆனால் இங்கு ஆடைகளும்
நகர்ந்தனவோ"

சோ.நிர்மலாதேவி-கருவாஞ்சிக்குடி.

### நிர்வாண ஓட்டமிது

ஐயா பெரியவரே
கவிதையின் கருவென்று
யாரை ஏய்க்கப் பார்க்கின்றீர்
அன்றோரு நாள்
அயல்நாட்டு எயாபோட்டில்
அகதிகளாய்ப் போன
எம்நாட்டு வாலிபரின்
நிர்வாண ஓட்டமிது.

வி.கோகிலன்-துறைநீலாவணை.

### கோள்

கோல் கொண்டு கலைக்க
கோள் சொன்னவர் யார்

கவிச்சுந்தர்-தெஹிவளை.

### ஏன்?

போர் நிவாரணம் கேட்டு
போனார் சிறுவர்தான்.
ஏன் நிர்வாணமாக
விரட்டுகின்றார் கிழவர்தான்!

பூண்டுலோயா மெய்யன் நடராஜ்.

### படிப்பினை

ஐம்பதில் வளையாது
என்பதற்காக...
ஐந்தில்-இப்படியா..!
வளையவைப்பது..!!

ஆர்.சாந்தசீலன்-பொத்துவில்.

### ?

ஆதாம் ஏவாள்
பரம்பரையோ?

திருமதி இராமலக்ஸ்மி
-பொகவந்தலாவ.

### கடல் தடை

இடையை மறைக்கும்
உடை கூட இல்லாமல்,
கடல் குளிப்பில் கண்ட
சுகம்
கணநேரம் நிலைக்குமுன்,
கடல் வலயத் தடை
எழுந்து துரத்தும்
காட்சியிதோ?

பூ.இதயரெத்தினம்-ஆரையம்பதி-03.

## மூச்சுத் திணறியதோ ?

என்னய்யா நீங்கள் வைரமுத்துவைப் பற்றி முத்துக் குளிப்பது போல் மூழ்கி அலசிய நீங்கள் ஏனைய கவிஞர்களை மேலோட்டமாக ஆராய்ந்து ஒய்ந்துவிட்டீர்களே. ஏன், வைரமுத்துவிடம்-மூழ்கியதில் மூச்சுத்திணறி விட்டதோ உங்களுக்கு.

கருத்து உள்ளடக்கத்தோடு வலுவான வார்த்தைகளில் புதுக்கவிதை அமைந்தாலும் அண்மைக் காலத்தில் வெளிவரும் புதுக்கவிதைகள் பல புரியாமலே இருக்கின்றதே. இது பற்றியும் கொஞ்சம் அலசுங்களேன்.

ஜெயந்தி ஜெய்சங்கர், கொழும்பு - 13

### கண்கொள்ளாக் காட்சி

தமிழ் திரையின் நவரச ஜோடிகள் எம்.ஜி.ஆரையும் , ஜெயலலிதாவையும் நீங்கள் பிரசுரித்த விதம் திலக ரசிகர்களுக்கு கண்கொள்ளாக் காட்சி சார்.

'கலைநேசன் ஜவாத்,
புத்தளம்.

□□

முரசே எமக்கு நீ தரும் அத்தனையும் அருமை. வாரம் தோறும் நீ கிடைக்காவிட்டால் ஏது பொறுமை.?

உன்னைக் கண்டவுடன் தோன்றும் என் மனதில் இனிமை.

எஸ். புஷ்பா-வத்தேகம.

□□

எங்கள் குடும்ப அன்பு தினமுரசே,

உண்மைச் சம்பவங்களை எடுத்துரைக்கும் உன்மீது சிலர் பொறாமையும் கொள்ளக்கூடும். அதற்காக நீ அசைந்துவிடாது உன் சேவையை துணிந்து செய். வரவேற்போம்.

கல்லடி மூர்த்தி,-மட்டக்களப்பு.

□□

முத்தான முரசே,

உன் சத்தான படைப்புக்கள் சந்தன சாகசங்கள். அதிலும் அரசியல் ஆய்வுகளில் உண்மை, நடுநிலை மாறாது , தீர்க்கத்

## வாசகர் சாலை

தரிசனமான செய்திகளையும் துல்லியமாய் துணிந்து வழங்கிடும், முரசே, உனக்கு நிகர் நீதான்.

செல்வன் எம்.அகிலன்,
என்பில்ட்எஸ்டேட், டிக்கோயா.

அன்பு முரசே!

தமிழுக்கு அமுதென்று பெயர். அந்த அமுதான தமிழை எங்கள் விழிக்கு விருந்தாக நீ சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் எங்கள் இதயங்களை கொள்ளையடித்துச் செல்கின்றது. வாழ்த்துக்கள்.

எம்.எம்.றிஸ்வி ரிபாய், இனிகலை
கட்டுகஸ் தோட்டை.

□□

என் ஆசை முரசே ,

நீதரும் வாரம் ஒரு நாடு, முரசம், தேன்கிண்ணம், அரசியல் தொடர் அனைத்தும் சூப்பர்! சூப்பர்!!

எஸ்.சிவராசா,-சந்திவெளி.

□□

இந்தியப்படை வருகிறது டும். டும் என்பது போல ஆங்கில பத்திரிகைகள் எழுதியிருந்தன. எக்ஸ்ரே ரிப்போர்ட் மட்டுமே படை வராது. உதவிகிடைக்கும் என்று முன்னறிந்து கூறியது. இப்போது அது உறுதியாகிவிட்டது. முரசு சொன்னால் அது நடக்குமய்யா நடக்கும்.

ஏ. விஸ்வநாதன், கொழும்பு-06.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வடமராட்சியை கைப்பற்ற படையினர் திட்டம்!

## பெரும் தாக்குதல் ஒன்றுக்கு புலிகளும் ஆயத்தம்!

## கிளாலிக் கடலில் புலிகளின் கரும்புலிப் படகு

(நமது நிருபர்)

வடக்கில் தமது நடவடிக்கைகளை பாதுகாப்புப் படையினர் ஆரம்பித்துள்ளனர். வடமராட்சிப் பகுதியை தமது பூரண கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்கு படைகள் திட்டமிட்டுள்ளதாக நம்பப்படுகிறது. இதேவேளை புலிகளும் வடக்கில் பாரிய தாக்குதல் ஒன்றுக்கு ஆயத்தமாகி வருகின்றனர்.

### திட்டத்தின் ஒரு கட்டம்

வடக்கில் பாரிய தாக்குதல் ஒன்றுக்கான முஸ்தீபுகளில் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

வடக்கில் தற்போதுள்ள படைமுகாம்களை விஸ்தரிப்பது, முக்கிய கடற்கரைப் பகுதிகளை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது ஆகியவை உடனடி நோக்கங்கள் என்று தெரிகிறது.

வடக்கில் உள்ள படைமுகாம்களுக்கான விநியோகப் பாதையை புலிகளது இடையூறு இல்லாமல் சுத்தம் செய்வதுதான் படையினரின் முதற்கட்ட நடவடிக்கையாக அமையும் என்று கருதப்படுகிறது.

புலிகளது முக்கிய தளங்களில் ஒன்றாக கருதப்படும் வடமராட்சியை தமது கட்டுப்பாட்டில் கொண்டுவரும் திட்டமும் படையினரிடம் இருக்கலாம் என்று நம்பப் படுகிறது.

இத்திட்டத்தின் ஒரு கட்டமே தொண்டமானாறு பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையாகும்.

இதேவேளை கடந்த வாரம் ஆனையிறவு இராணுவ முகாம் பகுதியில் புலிகள் அமைப்பின் உறுப்பினர்கள் அதிகளவில் காணப்பட்டனர்.

19.5.95 அன்று ஆனையிறவின் தென்பகுதியில் இருந்து இராணுவத்தினர் முன்னேற முயன்றனர்.

ஆனையிறவு முகாமை நோக்கி புலிகள் நெருங்கி வந்து பதுங்கு நிலை அமைப்பதை தடுப்பதற்காகவே இராணுவத்தினர் முன்னேறிச் சென்று நோட்டம் பார்த்தனர்.

இராணுவத்தினரை நோக்கிப் புலிகள் தாக்குதல் நடத்தினார்கள். 20 நிமிடம் நடைபெற்ற மோதலில் புலிகள் தரப்பில் இருவர் மாண்டனர். இராணுவத்தின் தரப்பில் 7 பேர் கொல்லப்பட்டதாகப் புலிகளின் செய்திக் குறிப்பு தெரிவித்தது.

தொண்டமானாறு பகுதியிலும் அடிக்கடி மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

### வேட்டுச் சத்தங்கள்

பலாலி இராணுவத் தளத்தில் இருந்தும் பல முனைகளாலும் முன்னேறிச் செல்ல படையினர் முயன்று வருகின்றனர். இதனால் அப்பகுதியில் அடிக்கடி துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டுக்கொண்டிருக்கின்றன.

இலங்கை விமானப்படையின் 'சுப்பர் சோனிக்' விமானங்களும் தாக்குதல்களை நடத்தியுள்ளன. புலிகள் ஏவுகணைகளால் தாக்கக்கூடும் என்பதால் அதிக உயரத்தில் பறந்தே குண்டுவீச்சுக்கள் மேற்கொள்ளப் பட்டன.

பூநகரி இராணுவ முகாம் புலிகளால் சுற்றிவளைக்கப்பட்டு விட்டதாக கடந்த வாரம் கொழும்பில் வெளியான செய்திகளில் உண்மையில்லை.

இச் செய்தி எழுதப்படும்வரை பூநகரி முகாம் மீதான முற்றுகை எதுவும் புலிகளால் மேற்கொள்ளப்படவில்லை.

ஆயினும் பூநகரி முகாமை அண்டியுள்ள பகுதிகளில் புலிகளின் நடமாட்டம் காணப்படுகிறது.

### தாக்குதல் திட்டம்

பூநகரி முகாமை அண்டியுள்ள பூவசரம் தீவு, கௌதாரிமுனை போன்ற பகுதிகளுக்கு பனை மட்டைகள் சேகரிக்கச் செல்லும் மக்கள் புலிகளால் தடுக்கப் பட்டுள்ளனர்.

கேரதீவுப் பகுதியில் புலிகள் இயக்க உறுப்பினர்கள் பெருமளவில் காணப்படுவதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன.

முட்டை, மா, இலட்டு போன்றவற்றை தயாரித்து தருமாறும் யாழிலுள்ள சனசமூக நிலையங்களை புலிகள் கேட்டுள்ளனர்.

பாரிய தாக்குதல் ஒன்றுக்கு புலிகள் தயாராவதையே இந்த நடவடிக்கைகள் வெளிப்படுத்துகின்றன.

இதேவேளை கிளாலி கடலேரிப் பாதையில் புலிகளது கடற்புலிகளின் படகுகள் பயணிகளுக்கு பாதுகாப்பு வழங்கி வருகின்றன.

50 கலிபர் ரக துப்பாக்கி பொருத்தப்பட்ட படகு ஒன்றுபயணிகளுக்கு பாதுகாப்பு வழங்கி வருகிறது. கடற் கரும்புலிகளைக் கொண்ட, வெடிமருந்துகள் நிரப்பப்பட்ட மற்றொரு படகொன்று கிளாலி கடல் ஏரியில் தயார் நிலையில் காத்திருப்பதாகத் தெரியவருகிறது.

இதே சமயத்தில் மோதல் நடைபெறும் பகுதிகளில் ஷெல் தாக்குதல்கள் நடத்தப் படுவதால் பொதுமக்கள் தம் வீடுகளை விட்டு இடம்பெயர்ந்து செல்கிறார்கள்.

தொண்டமானாறு பகுதியில் ஷெல் தாக்குதல்களாலும், குண்டு வீச்சுக்களாலும் பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவ மனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அச்சுவேலிப் பகுதியில் மேற்கொள்ளப் பட்ட இராணுவ நடவடிக்கை ஒன்றின் பின்னர் கட்டைக்காடு, விளான் பகுதிகளைச் சேர்ந்த ஒன்பது பேரைக் காணவில்லை என்று புலிகளின் செய்திக் குறிப்பு தெரிவிக்கிறது.

வடமாராட்சியில் தனியார் பேருந்து ஒன்றின் மீது ஷெல் விழுந்து வெடித்ததில் பதினொரு பயணிகள் காயமடைந்தனர் என்றும் அச் செய்திக் குறிப்பு மேலும் தெரிவிக்கிறது.

# சமஷ்டி ஆட்சி முறைக்கு எதிர்ப்பு!

## கொழும்பு சிங்கள தினசரி கண்டனம்

தமிழ் அரசியல் கட்சிகள் இனப் பிரச்சனை தீர்வுக்கு சமஷ்டி அமைப்பு முறையே தீர்வு என்று வலியுறுத்தி வருகின்றன.

இது தொடர்பாக கொழும்பில் இருந்து வெளியாகும் சிங்கள தினசரியான 'திவயின' தனது முதற்பக்கத்தில் எதிர்ப்பு தெரிவித் துள்ளது.

அப்பத்திரிகை தெரிவித்துள்ளதாவது: "சமஷ்டி ஆட்சி முறை பற்றி சில தமிழ் அமைப்புக்களோடு அரசு பேச்சு நடத்துகிறது. அதே நேரத்தில் புலிகளுடன் யுத்தமும் செய்கிறது.

புலிகள் பலாத்காரமாக கைப்பற்றிய பகுதிகளை மீட்கவே இராணுவம் போராடுகிறது. அப் பிரதேசங்களில் சட்ட ரீதியான அதிகாரத்தை நிலை நிறுத்துவதே நோக்கமாகும்.

ஆனால் அரசு தமிழ் அமைப்புக்களோடு பேச்சு நடத்துவதோ அப் பிரதேசங்களில் அரசு கொண்டுள்ள அதிகாரத்தை அவர்களிடம் கையளிப்பதற்காகவாகும்.

இதனால் கடைசியாக ஏற்படப்போகும் பெறுபேறு யாதெனில், பலாத்காரமாக கைப்பற்றப்பட்ட பிரதேசங்களை சட்டரீதியாக ஒப்படைக்க இராணுவத்தினர் உயிர்த்தியாகம் செய்வதாக அமைந்துவிடும்.

புலிகள் ஆயுதம் மூலம் பெற நினைப்பதை ஏனைய தமிழ் அமைப்புக்கள் பேச்சுவார்த்தை மூலம் பெற முயற்சிப் பார்கள்.

சிங்கள மக்களைப் பொறுத்தவரை கடைசித் தீர்ப்பு ஒன்றுதான். பேச்சுவார்தைக்கு முன்னர் தமிழ் பயங்கரவாதத்தை அழிக்க வேண்டும்.

அப்படியில்லாவிட்டால் ஏனைய தமிழ் அமைப்புக்கள் புலிகள் கேட்பதைவிட அதிகமாகக் கேட்பதை தவிர்க்க முடியாது.

வடமாகாணத்தில் ஆனையிறவில் இருந்து வவுனியா வரை வெற்றுக் காணிகள் இருக்கின்றன. இக் காணிகளின் அதிகாரம் யாருக்கு அளிக்கப்படும்?

அதிகாரப் பரவலாக்கத்தில் இருந்து- இருக்கும் அதிகாரத்தை கைவிடுவது வேறு பட்டதாகும்.

உடைந்து செல்லும் பகுதிகளை ஒன்றிணைத்து நாடுகளை ஒன்றுபடுத்தி கட்டியெழுப்ப ப்பயன்பட்டது சமஷ்டி முறை. அதனை நமது நாட்டில் மட்டும் துண்டாடுவதற்கு பயன்படுத்துவது ஏன்?"

இவ்வாறு 'திவயின' பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், தமிழ் அமைப்புக்களோடு நடத்திய பேச்சிலோ அல்லது வேறு எங்குமோ சமஷ்டி அமைப்பு முறை குறித்து ஜனாதிபதி வெளிப்படையாக எதுவும் பேசவில்லை.

சமஷ்டிக்கு ஜனாதிபதி தயாராக இருக்கக்கூடும் என்ற ஊகத்தில் 'திவயின' மேற்படி கட்டுரையை வெளியிட்டுள்ளது.

# "அதிகாரம் என் கையில் இல்லை"

## ஆளுநர் காமினி வருத்தம்

(நமது நிருபர்)

வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் காமினி பொன்சேகா மனம் நொந்து இருப்பதாகத் தெரிகிறது.

சமீபத்தில் தன்னைச் சந்தித்த தமிழ் கட்சி ஒன்றின் பிரதிநிதிகளிடம் அவர் தனது வருத்தத்தை பகிர்ந்து கொண்டாராம்.

கிழக்கில் நடைபெறும் காணிக் குடியேற்ற விவகாரம் ஒன்று குறித்து அவரிடம் தெரிவிக்கப்பட்ட போது, தன்னிடம் அதிகாரம் இல்லையே என்று அவர் வருத்தம் தெரிவித்தாராம்.

மாகாண சபைகளுக்கு உள்ள அதிகாரங்கள் தொடர்பாக ஜனாதிபதியை சந்தித் துப் பேசவுள்ளதாகவும் ஆளுநர் காமினி பொன்சேகா தெரிவித்துள்ளார்.

திருமலையில் லிங்க நகரில் குடியிருக்கும் மக்களை வெளியேற்றும் முயற்சிகளில் அரசாங்க அதிபர் ஈடுபட்டிருந்தார்.

இது தொடர்பாக ஆளுநர் காமினி பொன்சேகா பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் லிங்கநகர் குடியிருப்பாளர்களை வெளியேற்றும் முயற்சி உகந்தது அல்ல. உடனடியாக அந்த முயற்சியைக் கைவிடுமாறு ஆளுநர் தனது கடிதத்தில் கூறியுள்ளார்.

யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் லிங்கநகர் விடயம் குறித்து ஆளுநரின் கவனத்திற்கு கொண்டுவந்திருந்தார். அதனையடுத்தே ஆளுநரால் மேற்படி கடிதம் எழுதப்பட்டிருந்தது.

# மட்டக்களப்புக்கு ஆயிரம் புலிகள்!

## தொடரும் மோதல் -துவளும் மக்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்ள யாழ்ப்பாணத்தில் இருந்து ஆயிரம் பேர் வரை புலிகள் அமைப்பு உறுப்பினர்கள் அனுப்பி வைக்கப்பட்டதாகத் தெரிகிறது.

வடக்கில் படையினரின் நடவடிக்கை தீவிரமானால் கிழக்கிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் பரவலான தாக்குதல்களை புலிகள் நடத்தலாம் என்று நம்பப்படுகிறது.

இதனையடுத்து கொழும்பிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத் தப்பட்டுள்ளன.

கடந்த 22ம் திகதி (22.5.95) மட்டக்களப்பு ஜயந்திபுரம், இருதயபுரம் பகுதிகளில் நடைபெற்ற மோதல்களின் இடையில் பொதுமக்களும் மாட்டிக் கொண்டனர்.

மோதல்களில் சிக்கி காயமடைந்த பொதுமக்கள் பதினெட்டுக்கு மேற்பட்டோர் உடனடியாக மருத்துவமனையில் சேர்க்கப் பட்டனர். பொதுமக்களில் இருவர் பலியானார்கள்.

கிழக்கில் புலிகளது தாக்குதல்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவது குறித்து படை வட்டாரங்கள் ஆராய்ந்து வருகின்றன.

கிழக்கில் 200 ற்கு மேற்பட்ட இராணுவ முகாம்களும், மற்றும் பொலிஸ் நிலையங்களும் உள்ளன.

இவ்வாறான நிலையிலும் புலிகளின் பரவலான தாக்குதல்கள் தொடர்வது குறிப்பிடத்தக்கதாகும்.

23.05.95 அன்றும் பனிச்சங்கேணியில் இராணுவத்தினர் மீது புலிகள் தாக்குதல் நடத்தியிருந்தனர்.

### ரெலோ உறுப்பினர் கொலை

ரெலோவின் பிரதேச சபை உறுப்பினர்கள் புலிகளது தாக்குதல்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

23.5.95 அன்று காலை ரெலோ உறுப்பினர் ஒருவர் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

வாகரை பிரதேச சபை உறுப்பினரான சின்னத்தம்பி குகதாசன் என்பவரே புலிகளால் ஏறாவூரில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

# இலங்கை-இந்திய உறவு தமிழருக்கு ஆபத்தாம்

## வெளியுறவுக் கொள்கை மீது விமர்சனம்!

இலங்கை அரசு தற்போது இந்தியாவோடு நெருக்கமான இராஜதந்திர உறவுகளை வைத்திருப்பது பற்றி புலிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

புலிகளது 'ஈழநாதம்' தினசரியில் வெளியான கட்டுரையில் பின்வருமாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

"கொழும்பும், புதுடில்லியும் கைகுலுக்கிக் கொள்ளும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தமிழர்களது நலன்கள் பலியாக்கப்பட்டே வந்துள்ளன.

கொத்தலாவல-நேரு ஒப்பந்தமாயினும் சரி, சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தமாயினும் சரி, மற்றும் சிறிமா-இந்திரா ஒப்பந்தமாயினும் சரி, ராஜீவ்- ஜே.ஆர் ஒப்பந்தமாயினும் சரி இதற்கு விதிவிலக்கல்ல.

ஐம்பதுகளில் செய்யப்பட்ட நேரு-கொத்தலாவல ஒப்பந்தம் மலையக மக்களின் வாக்குரிமை, குடியுரிமை பறிக்கப்பட மறைமுக ஒப்புதல் அளித்தது.

ஆறுபதுகளில் செய்துகொள்ளப்பட்ட சிறிமா- இந்திரா ஒப்பந்தம் பாக்குநீரிணையில் இலங்கை கடற்படை பலம்பெற வழி வகுத்தது.

எண்பதுகளில் கைச்சாத்தான ஜே.ஆர்-ராஜீவ் ஒப்பந்தம் தமிழ் மக்களின் அரசியல் வேட்கைக்கு அணை போட முனைந்தது.

ஆக,கொழும்பு,புதுடில்லியும் கைகுலுக்கிக் கொண்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அந்த விரலிடுக்குகளில் தமிழர்களது நலன்கள் நசிபட்டுப்போனமை கண்கூடு.

இந்த நிலையில் காலம்சென்ற தனது தந்தையாலும், பின்னர் தமது தாயாராலும் கட்டி வளர்க்கப்பட்ட இந்திய உறவை மீண்டும் ஏற்படுத்தப் போவதாக ஜனாதிபதி சந்திரிக்கா கூறியுள்ளார்.

கடந்த கால நிகழ்ச்சிகள் எதிர்காலம் பற்றிய கணிப்புகளுக்கு துணைபுரியும் எனின் திருமதி சந்திரிக்கா எந்தத் திசையில் செல்ல முனைகிறார் என்பதை ஊகிப்பது சிரமமானதாக இருக்காது."

இவ்வாறு ஈழநாதம் தெரிவித்துள்ளது.

# சோதனை மேல் சோதனை!

மலைநாட்டில் இருந்து ஒரு ஆசிரியை தனது தாயைப் பார்க்க மட்டக்களப்புக்கு வந்து கொண்டிருந்தார். மஹாஓயா இராணுவ சோதனைச் சாவடியில் அவ்வாசிரியையைப் பரிசோதனை செய்த பெண் இராணுவ உத்தியோகத்தர்கள் கேள்விகள் கேட்ட விதம்;

**இராணுவ உத்:** நீ எங்கே போகிறாய்?

**ஆசிரியை:** என் தாயிடம்-மட்டக் களப்புக்கு.

**இராணுவ உத்:** அடிக்கடி போவீரா?

**ஆசிரியை:** ஆம்-லீவு கிடைக்கும் போதெல்லாம்.

(உடனே கைப்பையைப் பார்த்து அதனுள் பண நோட்டுக்களைக் கண்டவுடன்)

**இராணுவ உத்:** இது என்ன நிறையப் பணம்? புலிகளுக்கு கலெக்ஷனா?

**ஆசிரியை:** இல்லை-இது எனது சொந்தச் செலவுக்கு.

**இராணுவ உத்:** திருமணம் முடித்து விட்டீரா?

**ஆசிரியை:** ஆம்.

பின்பு அவ்வாசிரியையைக் கூட்டிச் சென்ற பெண் இராணுவ உத்தியோகத்தர்கள் பரிசோதனைக் கருவி கொண்டு நன்கு பரிசோதித்தனராம்.

# மூதூரில் பதட்டம். நான்கு பேர் கொலை!

## வதந்திகளால் தோன்றிய பீதி!

20.05.95 அன்று மூதூரில் கபீர்கந்தப் பொடி என்பவர் புலிகள் இயக்க உறுப் பினரால் சுடப்பட்டார்.

கபீர் கந்தப்பொடி இராணுவத் தினரோடு தொடர்புடையவர் என்று தெரிகிறது.

இவரைக் கொல்வதற்காகத் திட்டமிட்ட புலிகள் தமது உறுப்பினர் ஒருவரை இவரோடு நட்புக்கொள்ள வைத்தனர். அவ்வாறு நட்பாக நடித்தவரே 20.05.95 அன்று கபீரைச் சுட்டு விட்டு ஓடினார். ஆயினும் கபீர் உயிர் தப்பிவிட்டார்.

இதனை அடுத்து 20.05.95 அன்று மாலையில், சேனையூரைச் சேர்ந்த ஐந்து தமிழர்கள் பாலைநகரில் வைத்து கபீர் கந்தப் பொடியின் ஆட்களால் பயங்கர ஆயுதங்களால் அடித்தும் வெட்டியும் தாக்கப்பட்டனர்.

தாக்கியவர்களிடம் இருந்து சின்னையா ராசு என்பவர் படு காயங்களோடு தப்பியோடி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார்.

ஏனைய நால்வரின் கதி என்னவானது என்று தெரியவில்லை. அவர்கள் நால்வரும் கொல்லப்பட்டிருக்கலாம் என்றே நம்பப் படுகிறது.

இச் சம்பவத்தை அடுத்து பல்வேறு வதந்திகள் பரவி பதட்டத்தை ஏற்படுத்தின.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# புலிகள் சரணடையக் காலக்கெடு!



**(இந்திய நிருபர் ஏழுமலை)**

கடந்த பெப்ரவரி மாதம் தமிழ் நாட்டின் தலைநகரான சென்னை மத்திய சிறையில் இருந்து புலிகள் தப்பிச் சென்றனர்.

தப்பியோடியவர்களில் ஆயுதக் கடத்தல் கப்பலில் கைதுசெய்யப்பட்ட புலிகளும் உள்ளனர்.

'டொங்கோவா' என்னும் கப்பலில் இந்தியா வழியாக இலங்கைக்கு ஆயுதம் கடத்த முயன்றதாக புலிகள் அமைப்பைச் சேர்ந்த மூவருக்கு எதிராக வழக்கு நடந்து வருகிறது. விசேஷ நீதிமன்றத்தில் விசாரணைகள் நடக்கின்றன.

வழக்கில் சம்பந்தப்பட்ட மூன்று புலிகளும் தப்பியோடியுள்ளதால் விசேஷ நீதிமன்றம் அவர்கள் மூவருக்கும் 'காலக்கெடு' விதித்துள்ளது.

இம்மாதம் 29ம் திகதிக்கு முன்னர் (மே 29) விசேஷ நீதிமன்றத்திலோ அல்லது செங்கல்பட்டு மாவட்ட புலனாய்வு பிரிவு பொலிஸ் துணைக் கண்காணிப்பாளர் முன்னிலையிலோ மூவரும் சரணடைய வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. விசேஷ நீதிமன்ற நீதிபதியே அந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

ராஜ்குமார், விக்கி, பொம்மி ஆகிய மூவருமே அவ்வாறு 'காலக்கெடு' விதிக்கப் பட்டவர்கள்.

# மூத்த செய்தியாளர்களை கௌரவிக்க முடிவு!

## விரைவில் நடக்கும் பாராட்டு விழா!

**('தினமுரசு' நிருபர்)**

அம்பாறை மாவட்ட கரையோர செய்தியாளர் சங்கத்தின் அங்குரார்ப் பணக்கூட்டம் அண்மையில் அம்பாறை நகரசபை வாடி வீட்டில் நடைபெற்றது.

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசத்தில் உள்ள பத்திரிகை, வானொலி, தொலைக் காட்சி செய்தி யாளர்களின் நலன்பேணவும், அவர்களது மேம்பாட்டுக்காக உழைக்கவும்நோக்காகக் கொண்டு ஆரம்பிக்கப் பட்டுள்ள இச்சங்கம் சமூகப் பணிகளிலும் தமது செயல்பாட்டை விஸ்தரிக்கவுள்ளது.

இந்த அங்குரார்ப்பணக்கூட்டத்தில், சங்கத்தின் தலைவராக கிழக்கிலங்கையின் சிரேஷ்ட பத்திரிகையாளர்களுள் ஒருவரும், நிந்தாவூரைச் சேர்ந்தவருமான ஜனாப் ஏ.எல்.எம்.சலீம் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மேலும், அம்பாறை மாவட்டத்திலுள்ள சிரேஷ்ட பத்திரிகையாளர்களான திரு.வீ.பி. சிவப்பிரகாசம், ஜனாப் ஏ.எல். காரியப்பர், முன்னாள் 'திலகம்' "தமிழ் நேசன்" ,ஆசிரியர் டாக்டர் ஜனாப் ஏ.பீ.எஸ்.குட்டி ஆகியோருக்கு பாராட்டு விழா ஒன்றை விரைவில் நடாத்தி, அன்னவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதெனவும் கூட்டத்தில் முடிவு செய்யப் பட்டது.

# தமிழ் சேவை தருகிறது வாய்ப்பு

## வானொலி நாடக எழுத்தாளருக்கு வரவேற்பு

வானொலி தமிழ் நாடகப் பிரிவின் முன்னோடியான 'சானா' அவர்களது நினைவாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவை- வானொலி நாடகப் பிரதிப் போட்டி ஒன்றையும் - வானொலி நாடக விழாவையும் நடத்த ஏற்பாடுகளைச் செய்துள்ளது. இப்போட்டியில் இங்கையில் உள்ள எவரும் கலந்து கொள்ளலாம்.

45 நிமிடங்கள் ஒலிபரப்பத்தக்க நாடகப் பிரதிகள் இப்போட்டிக்காக எதிர்பார்க்கப் படுகின்றன. தட்டெழுத்தில் பொறித்ததும் 20 பக்கங்களுக்குள் அடங்கக்கூடியதாக பிரதிகள் புல்ஸ்காப் தாளில் எழுதப்பட வேண்டும்.

வானொலி நாடகத்தின் கருப்பொருள் எதுவாகவேனும் அமையலாம்.

இந்த வானொலி நாடகப் பிரதிப் போட்டியில் சிறந்ததாகத் தேர்ந்தெடுக்கப் படும் முதல் மூன்று பிரிவுகளுக்கும் முறையே 7.500/- ரூபா, 5,000/- ரூபா, 2,500/- ரூபா பரிசுகளாக வழங்கப்படும். இந்தப் பரிசுகளை - ஈஸ்வரன் பிரதர்ஸ் உரிமையாளரான பிரபல தொழில் அதிபர் தெ.ஈஸ்வரன் அவர்கள் வழங்க முன் வந்துள்ளார். முதல் 7 இடங்களையும் பெறும் நாடகங்கள் வானொலியில் ஒலிபரப்பப்படும். வானொலி நாடகப் பிரதிப் போட்டி முடிவுத் திகதி ஜூன் மாதம் 16ம் திகதியாகும். பிரதிகளை அனுப்பும் கடிதஉறையின் இடதுபுற மேல் மூலையில்-'சானா' நினைவு நாடகப் போட்டி எனக் குறிப் பிடுங்கள். ஜூன் 16ம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வையுங்கள்.

**முகவரி,**

இயல் நாடகக் கட்டுப்பாட்டாளர்,<br>
தமிழ்ச் சேவை,<br>
இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்,<br>
த.பெ.எண் 574,<br>
கொழும்பு.

# நிற்க நிழல் இன்றி பயணிகள் அவதி!

கல்முனை, மருதமுனை, சாய்ந்த மருது போன்ற இடங்களின் பிரதான வீதிகளில் பஸ் பயணிகள் தரிப்பிடம் இருந்தும் அவைகள் பயனற்றதாகவே உள்ளது.

கடந்த கால வன்செயல்களால் இத்தரிப் பிடங்களும் தாக்கப்பட்டு வெறும் தூண்களும் சுவர்களுமாகவே இப்போது காட்சியளிக்கிறது. இதனால் பஸ் பிரயாணிகள் பலவித அசௌகரியங்களுக்கு உள்ளாக வேண்டியுள்ளது.கானல் நீர் தெரியும் கடும் வெயிலிலும் அடுக்கடுக்காய் பெய்யும் அடைமழையிலும் செய்வதரியாது திழைத்து, பாதையோரங் களில் பயணிகள் பஸ்சுக்காக காத்து நிற்கின்றனர்.

முன்பு பஸ் தரித்துச் செல்லும் இடங்களில் பஸ்ஸின் மாதிரிப்படம் வரையப்பட்ட கம்பிகள் நாட்டப்பட்டு இருக்கும். உரிய முறையில் பஸ் பயணிகள் தரிப்பிடம் பேணப்படும். இப்போது அவைஎல்லாம் அற்றுப் போய் விட்டன.

எனவே இவ்விடயத்தில் கிழக்கு பிராந்திய போக்குவரத்துச் சபையும் நலன் விரும்பிகளும் கரிசனை கொண்டு உடன் நடவடிக்கை எடுக்குமாபறு பயணிகள் சார்பாக பணிவன்புடன் கேட்கிறேன்

எம்.சி. கலீல்,ஹனீபா வீதி,<br>
கல்முனை - 05

# கவனித்தேன்- ப்பேன்

திங்களது ஏப்ரல் 30 - மே 6ம் திகதிய இதழில் வெளியான "இன்று போய் நாளை வா" என்னும் தலைப்பிலான செய்தியின் பால் எனது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இக்குறைபாடு பற்றி விசாரித்து நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

உண்மையில் இவ்வாறான விடயங்கள் ஏதும் ஒரு பொதுமகனுக்கு நிகழும்போது அவ்விடயம் பற்றி தெளிவாகக் குறிப்பிடப்பட்டு என்னோடு நேரடியாக தொடர்புபடுகையில் இன்னும் இலகுவாக நடவடிக்கை எடுக்கக் கூடியததாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஏ.எல்.எம். பளீல்,<br>
பிரதேச செயளாலர், கல்முனை.

## விளம்பரப் பகுதி


**BRIGHT ன் கல்வித்திட்டம்**

**90 DAYS SPOKEN ENGLISH & SINHALA**

**3 ஒலிப்பதிவு நாடாவுடன் கூடிய தபால் மூலக்கல்வி**<br>
**POSTAL TUITION WITH THREE AUDIO CASSETTES**

ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க மூன்றே மாத காலத்துள் இலகுவாக எளிய நடையில் மாணவர்களின் விருப்புக்கு ஏற்றமுறையில் நவீன உளவியல் முறையில் ஆங்கில/சிங்கள பேச்சு மொழி கற்றுத்தரப்படும்.

எமது பாடத்தொகுப்புடன் ஒவ்வொரு மாதமும் ஒரு கசெட் ஆக 3 ஒலிப்பதிவு நாடாவும் இணைவதனால் உங்களை ஓர் ஆங்கில/சிங்கள சூழலிலேயே இருப்பவர்கள் போன்ற இயல்பை உருவாக்கி, உங்களின் வெட்கம், பயப்பாடு ஆகியவற்றை அகற்றி ஒளிமயமான எதிர்காலத்திற்கு வழி காட்டுகின்றது.

**METHOD OF BOOK KEEPING**<br>
**கடைக் கணக்கு எழுதும் முறை**

கடைக்கணக்கு முதல் கம்பனி கணக்குவரை எவ்வாறு பேணப்பட வேண்டும் என்பதை மிக இலகுவான முறையில் ஆரம்பத்திலிருந்து கற்றுத் தரப்படும். இது ஆறுமாத கால டிப்ளோமா பயிற்சியாகும். இப் பயிற்சிநெறியை மேற்கொள்வது மூலம் Book-Keepers, Accounts Clerk, Audit Clerks, Bank Clerks, Cost Clerks ஆகிய தொழில்களை பெற்றுக்கொள்ளக் கூடிய தொழில்நுட்பகல்வி நெறியாகும். இப்பயிற்சியை திறம்பட முடிப்பவர்கட்கு நற்சான்றிதழும் வழங்கப்படும்.

**G.C.E. (O/L) முன்னோடி பயிற்சி - 1000 வினாவிடை**<br>
**ஆண்டு 5 புலமைப்பரிசில் முன்னோடிப்பயிற்சி – புதியபாடத்திட்டம்**

பரீட்சை எடுக்கும் மாணவர்கட்கு சிறப்பு சித்தியை (D) பெற்றக்கொடுக்கும் பாடப்பொழிப்பு, விளக்கம் ஒவ்வொரு பாடத்திற்கும் 1000 வினாவிடை கொண்ட பாடத்திட்டம். ஆண்டு 5 மாணவர்களுக்கு புதிய பாடத்திட்டத்திற்கேற்ற முறையில் அதிக புள்ளியை பெற்றுத்தரும் முன்னோடிப் பயிற்சித் திட்டம். பரீட்சையில் சித்திபெறும் அனைத்து மாணவர்களுக்கும் BRIGHT ன் வெகுமதி வழங்கப்படும்.

**இத்தோடு வெளிவந்துவிட்டன**<br>
**ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான**

| | | | |
|---|---|---|---|
| ஆரம்ப பொதுவிவேகம் ஆண்டு 4,5 குரிய பாடநூல் | 75/= | ஆரம்ப பொதுவிவேகம் ஆண்டு 5 செயல்முறைப் பயிற்சி | 60/= |

800 மாதிரி வினா, 500 பொது அறிவு கேள்வி பதில், 250 விவேக கணக்குகள் 9 பாடங்களை உள்ளடக்கிய கேள்வி களுடன் கூடிய மாதிரி வினா நூல் **100/-**

(புத்தகங்களை 20/- பெறுமதியான முத்திரை அனுப்பி V.P.P யில் பெற்றுக்கொள்ளலாம்)<br>
மேலதிக விபரங்களுக்கு முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க.

**BRIGHT TRAINING CENTRE**<br>
S 27, FIRST FLOOR, P. O. BOX - 162,<br>
COLOMBO CENTRAL SUPER MARKET COMPLEX,<br>
COLOMBO 11 T.P 434770





**அற்புத மலையாள மாந்திரீகம்**

மலையாள மாந்திரீக ஆவி உச்சாட்டங்களைக் கொண்டு வியாபாரத்தில் செல்வ விருத்தியா? அன்னியோர் நட்பா? வாழ்வில் நிந்திப்பா? வறுமையினால் கிலேச மனப்பான்மையா? பொன் பொருள் கையில் தங்கவில்லையா? பொறாமையினால் எதிர் நீச்சலா? சரியே வராது என முடிவெடுத்த தீரா ஆஸ்மாவா? தீரா நோயா, அல்லது தீரா மர்மநோயா, மனநோயா, பேயா, பில்லியா சூனியமா?

எவையென அச்சொட்டாக தெரிந்து அதற்கேற்ப நிவர்த்தி பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ?

இனி இல்லற வாழ்வு சிறப்பின்மையா?

கணவன் மனைவி பிணக்கா? காதல் தோல்வியா? காதலில் பிரச்சனையா? சவால் விடும் காதலா? விரும்பியவரை விரும்பியவாறு திருமணம் செய்விக்க வேண்டுமா? திருமணங்கள் கைகூடுவதில்லையா? அல்லது திருமணம் தடைக்கான திட்டவட்டமாக பரிகாரம் தேவையா? இனி கை கால் அசதியா? கையில் பணம் தங்கவில்லையா? கல்வி ஞான கவசமா, மகாலக்சுமி வாசம் செய்வதற்கான வலம்புரி சங்கு, நவரத்தினம், இத்துடன் தங்கம் கலந்த பெரிய அளவிலான மகாலக்சுமி இயந்திரம் தேவையா? ஞான திருஸ்டியில் ஜனன ஜன்ம கேள்வி பதில் தேவையா? காண்ட சாஸ்திர அடிப்படையில் ஆயுள் பூராகவும் புத்தக வடிவில் ஜாதகம் கணித்து அனுப்ப உள்நாட்டவரோ வெளிநாட்டவரோ ரூபா 700.00 அனுப்பினால் போதுமானது.

எம்மாதமும் என்னை 20 முதல் மாதக்கடைசிவரை கொழும்பு இல்லத்தில் சந்திக்கலாம். வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

தேவைகளுக்கு—

மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே.சாமி (J.D.G.A.N.)<br>
P.K.SAAMY ASSOCIATE (PVT) LTD<br>
162, கொட்டாஞ்சேனைவீதி- கொழும்பு 13<br>
T.P. 342463, 342464<br>
FAX 0094l342463 EXT 25

**தலைமையகம்**

மளையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே. சாமி<br>
(J.D.G.A.N.)<br>
P.K. SAAMY ASSOCIATE (PVT) LTD<br>
இல 31,32,33<br>
தினச்சந்தை கட்டிடம்<br>
நு வெரலியா.<br>
T.P. 052 2508 3093,<br>
FAX 0094523093 EXT 28



**விற்பனை முகவர்கள் தேவை**

உக்குவெல, வெலிமடை, இரத்தினபுரி, நானுஓயா, பசறை, பெல்மதுல்ல முதலான ஊர்களுக்கு தினமுரசு விற்பனை முகவர்கள் தேவைப் படுகின்றார்கள்.

முற்பணம் செலுத்தக் கூடிய முகவர்கள் விண்ணப்பிக்கவும்.



**ரிஷி அஜமாமிச லேகியம்**<br>
(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 175/=,95/=<br>
தங்க பஸ்பம் கலந்தது 975/=<br>
வெள்ளி பஸ்பம் கலந்தது 875/=

**ஞான சுந்தர வைத்தியசாலை**<br>
187, செட்டியார் தெரு,<br>
கொழும்பு 11,<br>
போன்: 421398<br>
Fax: 431604




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

# புலிகளுக்கு அமெரிக்க உதவி?

நாரதர்

இந்தியப் படை நேரடியாக தற்போதைக்கு வராது என்று 'எக்ஸ்ரே ரிப்போர்ட்'டில் கணித்துச் சொன்னது இப்போது உறுதிப் படுத்தப் பட்டு விட்டது.

சமீபத்தில் இலண்டன் பி.பி.சி.வானொலியில் ஒரு தகவல் சொல்லப்பட்டது.

"புலிகளை எதிர்த்துப் போராட இலங்கை அரசுக்கு உதவுமுகமாக இந்தியா திட்டம் ஒன்றை தயாரித்துக் கொண்டிருக்கிறது." என்பதுதான் அந்தத் தகவல்.

ஆக, போர் முனையில் நேரடியாக இறங்காமல், போர்த்தந்திர திட்டத்தை வழங்குவதுதான் இந்தியாவின் தற்போதைய நோக்கம்.

கடல் ரோந்து விடயத்தில் இலங்கைக்கு உதவ இந்தியா முன்வர




லாம். கடலில் தனது விழிப்பை இந்தியா அதிகரிக்கலாம் என்று சொல்லியிருந்தேன் அல்லவா?

இப்போது அவைதான் நடந்து கொண்டிருக்கின்றன. பாக்கு நீரிணையில் இந்திய கடற்படை போர்க் கப்பல்களின் ரோந்து அதிகரிக்கப்பட்டுள்ளது. இலங்கை கடற்படை கப்பல்கள் வடக்கேயுள்ள முகாம்களுக்கு சென்று வரும்போது இந்தியக் கடல் எல்லைக்கு சமீபமான கடல்பாதையைப் பிடித்துத்தான் பயணம் செய்கின்றன.

இந்திய கடற்படை கப்பல்கள் கூட கடற்கரும்புலிகள் தொடர்பாக விழிப்பாக இருப்பதாகத் தான் தகவல்.

இதே நேரத்தில் சமீபத்தில் பரவலாக அடிபட்ட ஒரு விடயம், புலிகளுக்கு அமெரிக்கா இரகசியமாக உதவுகிறது என்ற ஊகங்கள்தான்.

புலிகள் அமைப்பின் பிரமுகர் லோரன்ஸ் திலகர் ஃபிரான்ஸ் நாட்டின் தலைநகரான பாரிசில் இருக்கிறார்.

இவரது பேச்சுக்களும், அறிக்கைகளும், பேட்டிகளும் சில வருடங்களுக்கு முன்பு அடுத்தடுத்து வந்து கொண்டிருந்தன.

சில சமயங்களில் அவரது அறிக்கைகளுக்கும் யாழ்ப்பாணத்தில் உள்ள புலிகளது தலைமையின் கருத்துக்களுக்கும் இடையே முரண்பாடுகள் காணப்பட்டன.

இதற்கு முன்னரும் லோரன்ஸ் திலகர் அமெரிக்கா செல்ல அனுமதி கேட்டிருந்தார்.

"பின்னர் பார்க்கலாம் இப்போது வேண்டாம்." என்று அமெரிக்க இராஜாங்க திணைக்களம் மறுத்திருந்தது.

இப்போது மீண்டும் திலகர் முயற்சித்தார். அமெரிக்காவில் உள்ள தமிழர் அமைப்புக்களும் திலகரை அமெரிக்காவுக்கு அழைக்க பலத்த முயற்சியில் ஈடுபட்டன.

அமெரிக்காவில் இருந்து கொண்டு புலிகளுக்காக வேலை செய்பவர்களில் முக்கியமானவர்கள் இருவர். ஒருவர் ருத்ரகுமாரன். இன்னொருவர் செல்வகுமார்.

இதில் ருத்ரகுமாரன் முன்னாள் யாழ் நகரபிதா விசுவநாதனின் மகன். திரு. விசுவநாதன் கூட்டணியின் தூண்களில் ஒருவராக இருந்தவர். அப்பா பசு. மகன் புலி.

ருத்ரகுமாரன் போன்றவர்களது முயற்சியால் இம் முறை திலகரை சந்திக்க சம்மதித்தது அமெரிக்க இராஜாங்க திணைக்களம்.

சந்திப்புக்குச் சம்மதித்தார்களே தவிர திலகருக்கு அமெரிக்கா வரலாம் என்று உடனடியாக விசா கொடுக்க யோசித்தார்கள்.

அமெரிக்க இராஜாங்க திணைக்களம் உத்தியோக பூர்வமாக ஒருவரைச் சந்திப்பதென்றால் அது சுலபமாக நடக்கக் கூடிய காரியமல்ல.

தம்மைச் சந்திப்பவர் எப்படிப்பட்டவர்: சந்திப்பை எவ்வாறு பயன்படுத்திக் கொள்வார்: குறித்த சந்திப்பு ஏற்படுத்தும் அரசியல் விளைவுகள் என்ன? என்பன பற்றியெல்லாம் இராஜாங்க திணைக்களம் அலசி ஆராயும்.

திலகரின் சார்பில் விடுக்கப்பட்ட கோரிக்கையையும் அலசி ஆராய்ந்த அமெரிக்க இராஜாங்க திணைக்களம் திலகரின் நோக்கத்தை முதலில் நாடிபிடித்தறிய நினைத்தது.

"திலகர் அமெரிக்காவுக்கு வரவேண்டாம்: எமது திணைக்கள அதிகாரி ஒருவர் திலகரை அமெரிக்காவுக்கு வெளியே வைத்து சந்திப்பார்" என்று இராஜாங்க திணைக்களம் தெரிவித்தது.

இதனையடுத்து கடந்த ஏப்ரல் மாதம் 4ம் திகதி அமெரிக்க வெளிநாட்டு அமைச்சு திணைக்கள அதிகாரியான திரு. ரொன் லோட்டனும், திரு. லோரன்ஸ் திலகரும் சந்தித்துப் பேசினார்கள்.

அந்தச் சந்திப்பை அடுத்து திலகருக்கு அமெரிக்க 'விசா' வழங்கப்பட்டது.

'விசா' கொடுக்க முன்னர் இலங்கையின் வெளிநாட்டமைச்சரிடம் ஒரு வார்த்தை கேட்டுவிட்டுத்தான் கொடுக்கப்பட்டதாகத் தெரிகிறது.

திலகர் அமெரிக்காவுக்குள் நுழைய அனுமதிக்கப்படுவதை இலங்கை அரசு சந்தேகக் கண்ணோடு நோக்கிவிடக்கூடாது என்பதில் அமெரிக்கா கவனமாக இருந்திருக்கிறது.

பேச்சுவார்த்தை மூலம் பிரச்சனையைத் தீர்க்குமாறு புலிகளிடம் வலியுறுத்தவேண்டும் என்று அமெரிக்காவிடம் முன்னர் வேண்டுகோள் விடுத்தவர் இலங்கையின் வெளிநாட்டமைச்சர்.

அவ்வாறு வேண்டுகோள் விடுத்தவர் திலகரோடு பேசவேண்டாம் என்று அமெரிக்காவிடம் சொல்லியிருக்க மாட்டார்.

மே மாதம் 4ம் திகதி அன்று அமெரிக்காவில் வைத்து நடந்த சந்திப்பில் இராஜாங்க திணைக்களத்தின் சார்பில் தென்னாசிய பிராந்திய விவகாரத்துக்குப் பொறுப்பான திருமதி ரொயின் ரஃபாயேயின் உதவியாளரும், பிரதி உதவிச் செயலாளருமான ரிமொத்தி கார்ணே, திலகரோடு பேசினார். அவரோடு இலங்கை, இந்தியா, நேபாள விவகாரங்களுக்குப் பொறுப்பான திரு. ரொன் லோட்டன், இலங்கை 'மேசைப்' பொறுப்பாளர் திரு. டான் லோட்டன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இச் சந்திப்பை அடுத்து அமெரிக்க இராஜாங்க திணைக்களம் ஒரு அறிக்கை வெளியிட்டிருந்தது.

"இலங்கையில் பிரதேச ஒருமைப்பாட்டை அமெரிக்கா விரும்புவதோடு அதற்கு பாதகமில்லாத வகையில் கௌரவமான அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். அதனை திலகரிடம் தெளிவாக தெரிவித்தோம்" என்கிறது அந்த அறிக்கை.

புலிகள் போரை ஆரம்பித்தது குறித்து தனது கண்டனத்தையும் அமெரிக்க அதிகாரி திரு. கார்ணே நேரடியாகவே திலகரிடம் தெரிவித்திருந்தார்.

இச் செய்திகள் இலங்கை அரசுக்கு திருப்தியைக் கொடுத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஆனால், புலிகளைப் பொறுத்தவரையிலும் சாதகங்கள் இல்லாமல் இல்லை.

அமெரிக்க அரசின் இராஜாங்க திணைக்களம் திலகரை சந்தித்ததும், அச் சந்திப்பு குறித்து பகிரங்கமாக அறிக்கை வெளியிட்டதும் புலிகளுக்கு கிடைத்த அங்கீகாரம் என்றே கருதலாம்.

இந்தியாவைத் தவிர வேறொரு வெளிநாடு புலிகளின் உத்தியோக பூர்வ பிரதிநிதியை சந்தித்து பகிரங்கமாகப் பேசியது இதுவே முதற்தடவை எனலாம்.

இதன் பின்னர் புலிகளது தலைவரிடம் இருந்து என்னமாதிரியான உத்தரவு போனதோ தெரியவில்லை; திலகர் மௌனமாகியிருந்தார்.

தற்போது மீண்டும் திலகர் சுறுசுறுப்பாகியிருக்கிறார். வெளிநாடுகளில் இலங்கை அரசுக்கு சாதகமான வகையில் தான் கருத்துக்கள் நிலவுகின்றன.

அக் கருத்துக்களை தமது சார்பில் எதிர்கொள்ளவே திலகரை மீண்டும் ஒரு 'ரவுண்ட்' வர பிரபாகரன் பச்சைக் கொடி காட்டியிருப்பதாகத் தெரிகிறது.

பச்சைக் கொடி காட்டப்பட்டதும் திலகர் செய்த முக்கிய காரியம், அமெரிக்க அரசோடு தொடர்பு கொண்டதுதான்.

பயங்கரவாத அமைப்பு என்று இந்தியா புலிகளை தடை செய்துள்ளதால் சர்வதேச அங்கீகாரத்தை புலிகள் பெறுவது கஷ்டம் என்றே கருதப்பட்டது.

ஆனால் புலிகளது அரசியல் நிலைப்பாடுகளை ஏற்கவில்லை என்று அமெரிக்கா கூறியுள்ளபோதும், புலிகளை பயங்கரவாத இயக்கம் என்று அமெரிக்கா கருதவில்லை என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

புலிகளை கணக்கில் எடுக்கத் தேவையில்லை என்றோ, பயங்கரவாதிகள் என்றோ கருதியிருந்தால் அமெரிக்காவின் விசா திலகருக்கு கொடுக்கப்பட்டிருக்காது.

அது மட்டுமல்லாமல் திலகரோடு நடந்த சந்திப்பை பகிரங்கப்படுத்தியிருப்பது மூலம் இலங்கை விவகாரத்தில் தனது கவனம் இருப்பதையும் அமெரிக்கா வெளிப்படுத்த நினைப்பது தெரிகிறது.

ஜே.ஆர். ஜயவர்த்தனா அரசுக்கு 1984ல் அமெரிக்கா அபயக்கரம் நீட்டியிருந்தது. இஸ்ரேலும் இலங்கைக்கு உதவ முன்வந்தது. இஸ்ரேலின் தூதரகம் கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்தில்தான் இயங்கியது.

ஆனால், அப்போது தமிழ் இயக்கங்கள் அனைத்தும் அமெரிக்காவை காரசாரமாக கண்டித்துக் கொண்டிருந்தன.

அப்போது உலகில் இரண்டு பிரதான முகாம்கள் இருந்தன.. ஒன்று, அமெரிக்க தலைமையிலான முதலாளித்துவ முகாம்: இரண்டாவது சோவியத் யூனியன் தலைமையிலான சோசலிச முகாம்.

இந்தியா அணிசேராக் கொள்கை பற்றி பேசினாலும்கூட சோசலிச முகாம் பக்கமாகவே அப்போது சார்ந்து நின்றது.

இந்தியா புலிகள் உட்பட தமிழ் இயக்கங்களுக்கு ஆதரவளித்தமையால் இலங்கை அரசு பாகிஸ்தானுடன் நட்புப் பாராட்டியது. அமெரிக்காவின் செல்லப் பிள்ளையாக இருந்த பாகிஸ்தானுடன் இலங்கையும் சேர்ந்துகொண்டது. அமெரிக்காவுக்கு தென்னாசியாவில் இரண்டு செல்லப் பிள்ளைகள் கிடைத்தனர்.

எனினும், இலங்கையில் தன்னை மீறிய மூன்றாவது சக்தி ஒன்று தலையிடுவதை இந்தியா விரும்பவில்லை. இயக்கங்கள் மூலம் இலங்கை அரசுக்கு பலத்த அடியைக் கொடுத்து ஜே.ஆர் அரசை தன்னை நோக்கி ஓடிவரவைப்பதே இந்தியாவின் தந்திரமாக இருந்தது.

ஆனால் இப்போது நிலவரம் தலைகீழாக மாறிவிட்டது. சோவியத் யூனியன் சிதறிய பின்னர் இந்தியாவும் அமெரிக்காவின் நட்பை நாடியிருக்கிறது. அமெரிக்காவும் இந்தியாவை முகம் சுளிக்க வைக்காமல் நடந்து கொள்கிறது.

ஆனாலும், தென்னாசிய பிராந்தியத்தில் இந்தியா நினைப்பதுபோலவே எதுவும் நடக்கும் என்ற நிலை இருப்பதை அமெரிக்கா விரும்பாது.

கட்டியணைக்கும் போதும் தனது காரியத்தில்- தனது நலனில் குறியாக இருப்பதில் அமெரிக்கா கில்லாடி.

இந்தியாவும் பாகிஸ்தானும் கீரியும், பாம்பும் மாதிரி உள்ள நாடுகள். இரண்டு நாடுகளோடும் அமெரிக்கா 'ஹலோ' சொல்லி கைகுலுக்கிக் கொண்டிருக்கிறது.

கைகுலுக்கிக் கொண்டாலும் அமெரிக்காவின் கரிசனம் பாகிஸ்தான் மீது அதிகமோ என்று இந்தியா சந்தேகப் பட்டுக் கொண்டுதான் இருக்கும்.

இந்த நிலையில் இலங்கை விவகாரத்திலும்: நிலமை முன்பு போல் இல்லை.

இலங்கையில் போரா-சமாதானமா? என்பதை தீர்மானிக்கும் இரு தரப்பில் ஒரு தரப்பு இந்தியாவை 'ஓரம்போ ஓரம்போ உனக்கென்ன வேலை. மூக்கை நீட்டாதே' என்கிறது.

அரசு மட்டுமே இந்தியாவின் உதவியை நாடியிருக்கிறது. ஆனால் இந்தியாவின் உதவியை மட்டுமே நாடவில்லை. "உதவி செய்பவர்கள் எல்லாம் செய்யலாம். இந்தியாவும் செய்யலாம்" என்றுதான் இலங்கை அரசு கூறுகிறது.

அமெரிக்கா, பாகிஸ்தான், பிரிட்டன் போன்ற நாடுகளிடமும் இலங்கை உதவி கோரியிருக்கிறது.

முன்பு போல் இல்லாமல் இலங்கை விவகாரத்தில் அமெரிக்கா பகிரங்கமாகவே கருத்துச் சொல்லவும், யோசனை கூறவும் ஆரம்பித்துவிட்டது.

***இலங்கை அரசு மட்டுமல்ல, புலிகளும் அமெரிக்காவின் நட்பை நாடிப்போயிருக்கிறார்கள்.***

***ஆக, இரு தரப்பையும் தனது கைக்குள் வைத்திருந்து இலங்கை விவகாரத்தில் சதுரங்கமாட அமெரிக்கா நினைத்தாலும் அதில் ஆச்சரியப்பட இடமில்லை.***

ராஜீவ் கொலை வழக்கில் ஆஜராக பிரபாகரனை கொண்டுவருமாறு இந்திய காங்கிரஸ் கட்சிக்குள் ஓயாத கோஷங்கள். பிரதமர் நரசிம்மராவ் தலையைப் பிய்த்துக் கொண்டிருக்கிறார்.

இது போதாது என்று ஜனாதிபதி சந்திரிக்கா இந்தியாவில் போய் "ராஜீவை கொன்றவர் பிரபாகரன்" என்று சொல்லி விட்டு வந்திருக்கிறார்.

இத்தனைக்கும் மத்தியில் அமெரிக்கா மறைமுகமாக புலிகளை அங்கீகரித்திருக்கிறது. நிச்சயமாக இந்தியாவுக்கு அது கவலைதரும் செய்திதான்.

புலிகளும் முன்புபோல் அமெரிக்காவை வெறுக்காமல் ஆதரவு நாடியிருக்கிறார்கள். அமெரிக்காமீது திலகர் நம்பிக்கை தெரிவித்து பேசியிருக்காவிட்டால் நிச்சயம் 'விசா' கிடைத்திருக்காது. புலிகள் தமக்கு எதிரானவர்கள் அல்ல என்பது ஏப்ரல் 4ம் திகதி திலகரோடு பேசி உறுதி செய்துவிட்டுத்தான், மே 4ம் திகதி அமெரிக்காவில் வைத்து இராஜதந்திரிகள் சந்தித்திருக்கிறார்கள்.

இலங்கையில் பிரிவினையை தாம் ஆதரிக்கவில்லை என்று அமெரிக்கா சொல்லியிருப்பது இலங்கை அரசுக்கு ஒரு ஆறுதலாக இருக்கலாம்.

ஆனால், இன்று அமெரிக்கா சொல்வதைத்தான் அன்று இந்தியாவும் சொன்னது. "இலங்கையின் பிரதேச ஒருமைப்பாட்டை சேதமாக்க இந்தியா விரும்பாது" என்றுதான் இந்தியாவின் இராஜதந்திர அறிக்கைகள் சொல்லிக் கொண்டிருந்தன.

அதே சமயம் போராளி அமைப்புக்களுக்கு இந்தியா ஆயுதங்களும் கொடுத்துக் கொண்டிருந்தது.

'அதேபோல இப்போது அமெரிக்காவும் புலிகளை மறைமுகமாக தட்டிக் கொடுக்காது என்பது என்ன நிச்சயம்?' என்பதுதான் அரசியல் அவதானிகள் சிலரது சந்தேகம்.

இன்னும் ஒரு படி மேலே போய் விமான எதிர்ப்பு ஏவுகணைகளையும் புலிகளுக்கு அமெரிக்கா கொடுத்திருக்கலாமோ? என்றும் சந்தேகிக்கிறார்கள்.

அந்த சந்தேகத்தில் ஆதாரமில்லை. ஆனால் இலங்கை விவகாரத்தில் இந்தியா மட்டுமே தனி ஒரு பொலிஸ்காரனாக செயல்படுவதை இனி அமெரிக்கா விரும்பாது என்பது மட்டும் உண்மை.

அதனால் புலிகளோடு தனது உறவை அமெரிக்கா பட்டும் படாமல் வைத்துக் கொள்ளும்.

இலங்கை அரசும் அமெரிக்காவை நட்போடு அணுகுவதால் புலிகளுக்கு ஆயுதரீதியில் உதவ அமெரிக்கா உடனடியாக முன்வரும் சாத்தியம் இல்லை.

இரு தரப்போடும் நட்பை வைத்திருப்பதே சதுரங்கமாட வசதி என்பது அமெரிக்காவுக்கு தெரிந்த அனுபவம்தான்.

அப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும் போது இரு தரப்பில் எந்தவொரு தரப்பையும் தன்னிடமிருந்து முற்றாகத் துண்டிக்கும் நடவடிக்கைகளை அமெரிக்கா மேற்கொள்ளாது.

ஆனால், ஒரு விடயம் தெளிவானது, புலிகளது இந்திய விரோத நிலைப்பாடு அமெரிக்காவுக்கு உள்ளூர மகிழ்ச்சிதான்.

---

## அதிரடி அய்யாத்துரை



தேனகத்திலை ரெண்டு எழுத்தார் 'ஹிற அண்ட றன்' செய்து கொண்டிருக்கினம். பதிலுக்கு மறுதரப்பார் திருவாளர் பொதுஜனத்தை புரட்டி எடுக்கினம். தேனக சிங்கத்தாரும் இப்பவெல்லாம் கர்ஜிக்கிறதை குறைச்சுப் போட்டார். சனத்தின் பாடு யாருக்குத்தான் தெரியுது?

வடக்கு-கிழக்கு மாகாண சபை காலத்திலை 'எரியிற வீட்டிலை பிடுங்கின' இயக்கம் மீண்டும் நோட்டம் பார்க்க வந்திருக்குதாம். இனிச் சரிப்பட்டு வராது எண்டு இலண்டனுக்கு ஓடினவரும் திரும்பி வந்திருக்கிறார். விலகிப் போய் நிண்டவர் தன்னை 'இலண்டன் பிரதிநிதி' எண்டு சொல்லுறதுதான் நல்ல சோக்கு. எரியத் தொடங்கினா யார் யாரெல்லாம் எட்டிப்பார்க்கினம் பாத்தியளோ? அந்த இயக்க முன்னாள் வெகுஜனப் பிரதிநிதி சீனியான வாசன் மன நோயாளராக இலண்டனில் இருக்கிறாராம். அவரையும் கூட்டிவந்திருந்தா ஒரு உதவியாக இருந்திருக்குமல்லோ.

திருவான மலை மடல் விநியோக ஊழியர்களுக்கு மேலதிக வேலைநேர ஊதியம் கிடைக்காமை பற்றி 'முரசு' செய்தி போட்டதல்லோ. தேனகத்தில் இருக்கும் கணக்கர் வந்து திருவான மலை 'மடலகத்திலை' துள்ளிக் குதிச்சவராம். யார் நிருபர் எண்டும் கேட்டவராம். அதை 'முரசி'டமே கேட்டிருக்கலாம் அல்லோ. "அண்ணர் கணக்கு விடாதேயுங்கோ."

மலையக தனித்துவ தலைவரை அயலகத்திலை கண்டிச் சனவையல்லோ. ரெண்டு எழுத்து தலைவரை பகத்சிங்கோடு எப்படி, ஒப்பிடலாம் எண்டதுதான் அவை கேட்கிற கேள்வி? எனக்கும் அது சரி எண்டுதான் படுகுது. ஏன் தெரியுமோ? பகத்சிங் ஆக ஒரே ஒரு குண்டுதானே எறிஞ்சவர்.

வான் பறவைக்கு எதனாலை அடிச்சது? எண்டு ரெண்டு எழுத்தாரிடம் கேட்டால் அவை என்ன சொல்லுகினம் தெரியுமோ? "நிலச் சீருடையாரிடம் எடுத்ததை வைச்சு அடிச்சனாங்கள்" எண்டு சொல்லிப் போட்டு நமட்டுச் சிரிப்பை உதிர்க்கினமாம். இரகசியத்தை பொத்திக் காக்கிற வேகத்தைப் பார்த்தா ஏதோ திட்டம் இருக்கிறமாதிரித் தெரியுதல்லோ.

வன்னியாலையும் அலசல், துருவல் எல்லாம் சூடுபிடிச்சிருக்காம். சீருடையினர் அலசல் நடத்த நிற்கிற இடங்களில் சைக்கிளில் வருவோரும் இறங்கித்தான் போக வேணுமாம். சைக்கிள் எண்டாலும் உருட்டலாம். மோட்டார் சைக்கிளில் வாற ஆட்கள் இறங்கித் தள்ளிக்கொண்டு போறதைப் பார்த்தால்தான் பரிதாபமாகக் கிடக்கு.

தமிழக சஞ்சிகைகளுக்கு ரெண்டு எழுத்தார் தடை விதிச்சுப் போட்டினம். வவுனியாவிலை வைச்சு வாசித்துப் போட்டு வாங்கோ. கொண்டு வரவேண்டாம் எண்டு சொல்லுகினமாம். ரெண்டு எழுத்தாரின் பத்திரிகை கிளிநொச்சியிலும் மறு பதிப்பாகிறதாலை. அதன் விற்பனை விசயத்திலும் கவனம் செலுத்தப்படுகிறதாம்.

திருவான மலையிலை நகரத்தின் தந்தை குடியேற்றத் திட்டம் ஒண்டுக்கு தயாரிப்பு செய்தவராம். மூவினக் கொள்கைப்படி அவர் திட்டம் போட்டும்கூட சீருடையினர் தடுத்துப் போட்டினமாம். மதகுரு ஒருவரும் தடுப்புக்கு பின்னாலிருப்பதாக ஒரு தகவல். முழுக்கவும் பெரும்பான்மை இனத்தவரை குடியேற்றத்தான் மதகுரு ஆசைப்படுகிறார் எண்டும் சிலர் பேசிக்கொள்ளுகினம். இதிலை எதுதான் மெய்ப்பொருளோ? என்ரை கோணேஸ்வரா நீயறிவாயோ.

தமிழ் நாட்டில் சட்டமன்ற சபாநாயகராக இருந்தவர் தமிழ் குடிமகன். நல்ல தமிழ் புலமை மனுசனுக்கு. காதலையும் விட்டுவைக்கேல்லை. பாருங்கோ இது அவர் எழுதிய கவிதைதான்.

"நோக்கொன்றில் என் நெஞ்சை நூறு சுக்காய்
நொறுக்குதற்கு பல்வேறு படைகள் வைத்து
தாக்குதலை செய்கின்ற நங்கை, நோவைத்
தருகின்றாள்; ஓர் நொடியில் அவளே மீண்டும்
நோக்கென்றால் நோவெல்லாம் போக்கிக் கோடி
நூறுகதை கூறுகிறாள் என்றால் வாயில்
பூக்கின்ற புன்சிரிப்பால் அன்றோ என்றன்
புலன் மாற்றிப் போட்டுவிட்டாள்: உண்மை சதே."



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

28

## அரசியல் தொடர்

அற்புதன் எழுதுவது

# மாயமாய் மறைந்த உண்ணாவிரதிகள்



தகர்க்கப் பட்ட இராணுவ வண்டி




1984 இல் ஐலன்ட் பத்திரிகையில் பிரசுரமான கார்டூன்

### மாணவர் போராட்டம்.

1984 இல் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகளில் ஒன்றான அலன் தம்பதி கடத்தல் சம்பவத்தை சென்ற வாரம் தெரிவித்திருந்தேன்.

1983 ன் இறுதிப் பகுதியில் ஆரம்பித்து 1984 ஜனவரி வரைதொடர்ந்த மாணவர் போராட்டம் பற்றி இடையிலே குறிப் பிட்டிருக்க வேண்டும். தவறிவிட்டேன்.

ஜுலை 83 இனப்படுகொலை தென்னிலங்கையில் தமிழர்களது பாதுகாப்பைக் கேள்விக்குள்ளாக்கியிருந்தது.

தென்னிலங்கையில் இருந்து வடக்கு -கிழக்கு நோக்கி ஆயிரக்கணக்கான தமிழர்கள் இடம்பெயர்ந்தனர்.

அவர்களில் தென்னிலங்கை பல் கலைக்கழகங்களில் கல்வி கற்ற மாணவர் களும் இருந்தனர்.

பேராதனை, கொழும்பு, மொரட்டுவ பல்கலைக்கழகங்களில் கல்வி கற்ற தமிழ் மாணவர்கள் தாம் மீண்டும் திரும்பிச் செல்ல முடியாது என்று கூறினார்கள்.

யாழ்ப்பாண, மட்டக்களப்பு பல்கலைக் கழகங்களில் கல்வி கற்கக்கூடியதாக மாற்றம் தருமாறு அந்த மாணவர்கள் கோரினார்கள்.

இட மாற்றம் கோரிய மாணவர்களது கோரிக்கையை அரசு நிராகரித்தது.

"இடம்பெயர்ந்த மாணவர்கள் உடன டியாக தமது பல்கலைக் கழகங்களுக்கு திரும்ப வேண்டும்" என்று அரசு 'காலக்கெடு' விதித்தது.

அரசின் அறிவிப்பை எதிர்த்து இடம்பெயர்ந்த மாணவர்கள் போராடத் தீர்மானித்தார்கள்.

போராளி அமைப்புக்களும் மாணவர் களது போராட்டத்தை ஆதரித்தன.

ஈழ மாணவர் பொது மன்றம் (G.U.E.S) இடம் பெயர்ந்த மாணவர்கள் போராட்டத்திற்கு ஆதரவாக பிரசாரங் களையும் மேற்கொண்டது.

### கொலைக்களம்

இடம்பெயர்ந்த மாணவர்களில் சிலர் மீண்டும் தென்னிலங்கை பல்கலைக் கழகங்களுக்குச் செல்ல முடிவு செய்தனர்.

இந்த முடிவு இடம்பெயர்ந்த மாண வர்களது போராட்டத்தைப் பாதிக்கும் என்று பிரச்சனை எழுந்தது.

07.11.83 அன்று புலிகள் அமைப்பினர் ஒரு பிரசுரம் வெளியிட்டனர்.

"கொலைக் களத்திற்கு போக வேண்டாம்." என்ற தலைப்போடு அந்தப் பிரசுரம் வெளியாகி இருந்தது.

"சிறிலங்காவில் உள்ள பல்கலைக் கழகங்கள் வெலிக்கடையாக மாறும் நிலை உண்டு." என்று புலிகளது பிரசுரத்தில் கூறப்பட்டு இருந்தது.

இடம்பெயர்ந்த மாணவர்களது உண்ணா விரதப் போராட்டம் ஆரம்பித்தது.

பொதுமக்கள் மத்தியிலும் என்றும் இல்லாதவாறு மாணவர் போராட்டத்திற்கு ஆதரவான நிலை காணப்பட்டது.

ஜே.ஆர். அரசு எதற்கும் செவிசாய்க்க வில்லை. தனது முடிவில் உறுதியாக இருந்தது.

இதனை அடுத்து போராட்டத்தை மேலும் தீவிரப்படுத்த மாணவர்கள் முடிவு செய்தனர்.

09.01.84 முதல் ஒன்பது மாணவர்கள் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்தனர்.

சாகும் வரை உண்ணாவிரதம் ஆரம்பித்த ஒன்பது பேரில் நான்கு மாணவிகளும் இருந்தனர்.

சாகும்வரை உண்ணாவிரதமும், தன்னை தார்மீக அரசு என்று சொல்லிக்கொண்ட ஜே.ஆர். அரசுக்கு ஒரு பொருட்டாகத் தெரியவில்லை.

ஆனால் தமிழ் மக்கள் மத்தியில் மாணவர்கள் மீது அனுதாபமும், அரசு மீது ஆத்திரமும் ஏற்பட்டன.

மக்கள் வெள்ளம் யாழ் பல்கலைக் கழகத்தின் முன் திரண்டது. எங்கும் பதட்ட நிலை நிலவியது.

### அரசு உத்தரவு

யாழ்ப்பாணம் எங்கும் கறுப்புக் கொடிகள் பறந்தன. ஹர்த்தால்கள். பாடசாலை பகிஷ்கரிப்புக்கள் நடைபெற்றன. அரச ஜீப் வண்டிகள் தீயிடப்பட்டன. எங்கும் கொந்தளிப்பு நிலை ஏற்பட்டதை கவனித்தது அரசாங்கம்.

இடம் பெயர்ந்த மாணவர்கள் போராட் டத்திற்கு ஆதரவாக துண்டுப் பிரசுரம் வினியோகித்த ராஜ் மோகன் சுட்டுக் கொல்லப்பட்டார்.

யாழ்பல்கலைக்கழகத்தை மூடுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

சாகும்வரை உண்ணாவிரதம் ஆரம் பித்து ஒரு வாரமாகியது.

அரசு ஏட்டிக்குப் போட்டியாக நடந்ததே தவிர இணக்கமான போக்கை காட்டவில்லை. மாணவர் கோரிக்கையை ஏறெடுத்தும் பார்க்கவில்லை.

1984 ஜனவரி 16ம் திகதி பிற்பகல் உண்ணாவிரதிகளின் நிலை மோசமடைந்தது.

மருத்துவர் வரவழைக்கப்பட்டார். ஒரு மாணவியின் நிலை மிகவும் மோச மடைந்துள்ளது என்று மருத்துவர் தெரிவித் தார். அந்த மாணவி சாவோடு போராடிக் கொண்டிருந்தார்.

இந்த நிலையில் 16 ம் திகதி இரவு ஒன்பது மாணவர்களும் திடீரென்று காணா மல் போனார்கள்.

ஆயுதம் தாங்கிய புலிகள் இயக்க உறுப்பினர்களால் ஒன்பது மாணவர்களும் கடத்தப்பட்டனர் என்று தெரியவந்தது.

மாணவர்களது அறவழிப் போராட் டத்தை பலவந்தமாக நிறுத்தியது சரியா?

ஈழ மாணவர் பொது மன்றம், புளொட் ஆகியவை புலிகள்-மாணவர்களை கடத்திச் சென்றது தவறு என்று கண்டித்தன.

கண்டனங்களையடுத்து புலிகள் தமது நடவடிக்கைக்கு விளக்கமளித்தனர்.

"உண்ணாவிரதிகளை அழைத்துச் சென்று அவர்களது உயிர்களை பேணிக் காக்க நாம் முயன்றோம். உண்ணா விரதிகளும் தமது பூரண சம்மதத்தை தெரிவித்தே எம்மோடு வந்தனர். மாணவ மாணவியர் உணவருந்தி பாதுகாப்பாக இருக்கின்றனர்.

மாணவர்களது உயிர் போகக் கூடாது. உண்ணாவிரதம் இருந்து உயிர் துறப்பதால் அரசு அதற்காக வருந்தவும் செய்யாது. அறவழிப்போராட்டம் அரசின் செவியில் ஏறாது என்பதால் உண்ணாவிரதிகளைக் காப்பாற்றியதாக" புலிகள் விளக்கமளித்தனர்.

ஒன்பது மாணவ மாணவிகளும் படகு மூலம் தமிழகத்திற்கு கொண்டுசெல்லப் பட்டனர்.

### பிரபாவின் காதல்

சாகும்வரை உண்ணாவிரதமிருந்த ஒன்பது மாணவர்களில் நான்கு மாணவி களும் இருந்தனர் என்று கூறினேன் அல்லவா?

அந்த மாணவிகளில் ஒருவர் மதிவதனி.

சென்னையில் புலிகளது இல்லத்தில் இருந்த மதிவதனியை பிரபாகரனுக்குப் பிடித்துவிட்டது.

இருவருக்கும் காதல் மலர்ந்தது. மதி வதனியை தனது வாழ்க்கைத் துணை வியாக்கிக் கொண்டார் பிரபாகரன்.

காதல், கல்யாணம் எல்லாம் போராட் டப் பாதையில் சுமையாகிவிடும்; அதனால் இயக்கத்தில் இருப்பவர்கள் காதல் விவ காரங்களை தவிர்க்க வேண்டும் என்ற கருத்துக் கொண்டிருந்தார் பிரபாகரன்.

அந்தக் கருத்தை மாற்றிவிட்டார் மதிவதனி.

இயக்கத்தில் சேர்ந்து ஐந்து வருடத்தைக் கடந்தவர்கள் விரும்பினால் கல்யாணம் செய்து கொள்ளலாம் என்று பிரபாகரன் அறிவித்தார்.

### வட்டமேஜை

1984ம் ஆண்டின் ஆரம்பத்தில் தொடங்கிய மற்றொரு நிகழ்வு வட்டமேஜை மாநாடு.

இயக்கங்களின் கோரிக்கைகள், கருத்துக்கள் எதனையும் காதில் போட்டுக் கொள்ளாமல் ஜே.ஆர். அரசோடு பேச்சு நடத்தச் சென்றார் அமிர்தலிங்கம்.



### கூட்டணியை நம்பவில்லை.

ஜே.ஆர். அரசோடு கூட்டணியினர் பேச்சு நடத்தச் சென்றபோது இயக்கங்களின் கருத்துக்களை அலட்சியம் செய்தே சென்றனர்.

ஆனால் இதில் ஒரு வேடிக்கை என்ன தெரியுமா?

விடுதலை இயக்கங்களோடு தமக்கு ஒட்டுமில்லை உறவுமில்லை என்று கூட்டணி கூறியதை தென்னிலங்கையில் உள்ள இனவாதிகள் நம்பவில்லை.

தென்னிலங்கை பத்திரிகைகள் கூட கூட்டணிக்கும் புலிகளுக்கும் தொடர்பு உள்ளதாகவே செய்திகள் வெளியிட்டன.

'ஐலண்ட்' ஆங்கிலப் பத்திரிகை ஒரு கருத்தோவியம் வெளியிட்டிருந்தது. அமிர்தர் புலியோடு வட்டமேஜை மாநாட்டுக்குச் செல்வது போல, 'கருத்தோவியம்' வரையப்பட்டிருந்தது.

தமிழர் விடுதலைக் கூட்டணியோடு பேச்சு நடத்துவது ஏன்? இந்தக் கேள்விக்கு பாதுகாப்பு அமைச்சராக இருந்த அதுலத் முதலி சொன்ன பதில் இது:

"இன்று தீவிரவாதிகளது நடவடிக்கை காரணமாகவே ஒரு நாடு என்ற கட்டமைப் புக்குள் தமிழர் விடுதலைக் கூட்டணியால் அரசோடு உடன்பாட்டுக்கு வர முடியாமல் இருக்கிறது.

தீவிரவாதிகள் பலமுள்ளவர்களாகவும், மிதவாதிகள் பலமற்றவர்களாகவும் இருப்ப தாலேயே அரசியல் தீர்வு எதுவும் காண முடியாமல் இருக்கிறது.

அரசியல் தீர்வு ஏற்பட வேண்டுமாயின் தீவிரவாதிகளை அடக்குவது முக்கியமானது.

மிதவாதிகளை பலமுள்ளவர்கள் ஆக்கு வதற்காகவே நாம் தற்போது முயற்சிக் கிறோம்."

## எரிக்கப்பட்ட தேவாலயமும் எறிகுண்டு வீசிய மக்களும்

அதுலத்முதலியின் கருத்தை கூட்டணி மறுத்துப் பேசவே இல்லை.

### வாகனத் தாக்குதல்

கூட்டணியை அரவணைத்துக் கொண்டு அமெரிக்கா, இஸ்ரேல், பிரிட்டன் போன்ற நாடுகளிடம் போராளிகளை ஒழிக்க ஆயுத உதவி கோரியது அரசு.

ஜே.ஆர். அரசு உதவி கோரிய இன் னொரு நாடு, மனித உரிமை மீறல்களுக்கு பெயர் பெற்றிருந்த தென்னாபிரிக்கா.

அந்நிய உதவியோடு போராளிகளை ஒழிக்க அரசு திட்டமிட்டுக்கொண்டிருந் தபோது புலிகள் ஒரு தாக்குதலுக்கு தயாரானார்கள்.

போராளிகளை எதிர்த்து தாக்குதல் நடத்த இராணுவத்தில் புதிய படைப்பிரிவு ஒன்று அமைக்கப்பட்டது.

'கஜபாகு ரெஜிமென்ட்' என்று அப்படைப் பிரிவுக்கு பெயர் சூட்டப்பட்டது.

'கஜபாகு ரெஜிமென்ட்' படைப்பிரிவைச் சேர்ந்தவர்கள் கொழும் பிலிருந்து இரயில் மூலம் யாழ்ப்பாண இரயில் நிலையத்தில் வந்திறங்கினார்கள்.

அவர்களை ஏற்றிக்கொண்டு இராணுவ 'ட்ரக்' வண்டி யாழ்ப்பாண ஆஸ்பத்திரி வீதி வழியாக சென்று கொண்டிருந்தது.

பாதையோரத்தில் வேன் ஒன்று நின்றுகொண்டிருந்தது.

இராணுவ வண்டி அந்த வேன் நின்ற இடத்தை கடந்தபோது, அந்த வான் வெடித்துச் சிதறியது. அதனால் இராணுவ 'டிரக்' வண்டி சிதைந்து போனதுடன் அதனைத் தொடர்ந்து வந்த இராணுவ வாகனங்களும் சேதமாகின.

இராணுவ வாகனங்களில் இருந்த இராணுவத்தினர் யாழ் புகையிரத நிலையத்தை நோக்கி ஓடிச் சென்று அங்கு மறைந்து கொண்டனர்.

வாகனம் ஒன்றை வெடிக்க வைத்து நடத்தப்பட்ட முதலாவது வாகனத் தாக்குதல் அதுதான். அது நடந்தது 1984 ஏப்ரல் 09ம் திகதி.

### படையினரின் தாக்குதல்

அத்தாக்குதல் பற்றித் தகவல் கிடைத்ததும் இராணுவத்தினர் கவச வண்டிகள் சகிதம் சம்பவம் நடந்த இடத்திற்கு விரைந்து வந்தனர்.

ஹெலிகொப்டர் ஒன்று வானத்தில் தாழப்பறந்து இராணுவத்தினருக்கு துணையாக வந்தது.

தாக்குதலில் கொல்லப்பட்ட இராணு வத்தினரின் உடல்களை எடுத்துச் சென்ற பின்னர் படையினரின் தாக்குதல் ஆரம்பித்தது.

வீதியில் சென்று கொண்டிருந்த பொது மக்கள் இராணுவத்தினரால் சுட்டுத் தள்ளப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் உள்ள சரித்திரப் புகழ் வாய்ந்த அடைக்கல மாதா தேவாலயம் இராணுவத்தினரின் கண்ணில் பட்டுவிட்டது.

'ரொக்கட் லோஞ்சர்கள்' மூலம் தேவாலயத்தைத் தாக்கினார்கள். யேசு நாதரின் சுருவமும் உடைக்கப்பட்டது. 1984 எப்ரல் 10ம் திகதி காலை அந்த நாசம் அரங்கேறியது.

வீதியால் சென்றுகொண்டிருந்த கார் கள் அடித்து நொருக்கப்பட்டன. பல கார்கள் வீதிகளில் வைத்தே தீயிட்டு எரிக்கப்பட்டன.

யாழ் கூட்டுறவு பண்டகசாலையும், அருகிலிருந்த கடைகளும் தீயில் நாசமா கின. அடைக்கல மாதா கோவில் தாக்கப் பட்ட செய்தி யாழ்ப்பாணம் எங்கும் தீயெனப் பரவியது.

யாழ்நகரில் பொதுமக்களால் வீதித் தடைகள் ஏற்படுத்தப்பட்டன.

திரண்ட மக்களிடம் எறி குண்டுகள் புலிகளால் கொடுக்கப்பட்டன.

இராணுவ வண்டிகளை நோக்கி பெற்றோல் குண்டுகளையும் பொது மக்கள் வீசினார்கள்.

### எரிக்கப்பட்ட உடல்கள்

யாழ்ப்பாண நகரில் ஸ்டான்லி வீதியில் இருந்த பௌத்த விகாரை கிட்டத்தட்ட இராணுவ முகாம் போலவே செயற்பட்டு வந்தது.

யாழ் நகரில் இருந்த சிங்கள மகாவித்தியாலயமும் இராணுவத்தினரின் தங்குமிடமாகவும் பயன்பட்டு வந்தது.

ஏப்ரல் 10ம் திகதி மாலை யாழ் நகரில் இருந்த நாகவிகாரை தாக்கப் பட்டது. சிங்கள மகாவித்தியாலயமும் தீயிடப்பட்டது.

அரச கட்டிடங்கள் பலவும் தீமூட்டப் பட்டன.

இந்த தாக்குதல்களுக்கு புலிகளே முக்கிய தூண்டுதலாக இருந்ததோடு தாமும் பங்கு கொண்டனர்.

புலிகள் சார்பில் முன்நின்றவர்களில் கிட்டுவும் ஒருவர்.

விகாரையும் மகாவித்தியாலயமும் தாக்கப்பட்ட செய்தி அறிந்த இராணு வத்தினர் பெரும் தொகையாக வந்து குவிந்தனர். எதிர்ப்பட்டவர்கள் மீதெல்லாம் துப்பாக்கிச் சூடுகள் விழுந்தன. பலர் இறந்தனர். பெருந்தொகையானோர் காயமடைந்தனர்.

இறந்தவர்களது உடல்கள் நாகவி காரைக்கு அருகில் தீயிட்டு எரிக்கப்பட்டன.

ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப் பட்டது. அந்த ஊரடங்கு நேரத்திலும் புலிகளது தாக்குதல் அணியொன்று புறப்பட்டது.


(தொடர்ந்து வரும்)

**குறிப்பு**

**சிறையுடைப்பும்- நிர்மலா தப்பிக்கொண்டதும் குறித்து இவ்வாரம் விபரிக்க இடவசதி இடங்கொடுக்க வில்லை.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



# தேன் கிண்ணம்







## சீதனம் தேவை!

படித்த
பண்பான
உயர்தொழில் புரியும்
மணமகனுக்கு,
நலல நிறமான
அழகிய
பண்பானவர்கள் வசிக்கக்கூடிய
கார் நிறுத்த இடவசதிகொண்ட
வீடு தேவை!
மணமகளைப்பேசித்
தீர்மானிக்கலாம்!!
முதற்கடிதத்திலேயே
வீட்டின் புகைப்படத்துடன்
விண்ணப்பிக்கவும்!

எம். சுரேஷ்-கொழும்பு வளாகம்.

## இன்று என் தேசத்தில்....!

அமைதி
ஆடை அவிழ்ந்தது!
வான் பிளந்த
சத்தத்தில்
அடி வயிற்றில்
கலக்கம்!
***
ஆங்காங்கே
சவக் குவியல்
பறவைகட்கு
விருந்துப்
படையல்!
***
சமாதானத்திற்கு
கருச் சிதைவு
சிவப்பு மழை
மண்மீது
கோலம் போடும்!

***
புன்னகை பறிக்கப்பட
கண்மை
தினம்
கரைகின்றது!
***
மழலைகளின்
மௌனம்
மனசுக்குள்
மௌனயுத்தம்!
***
இத் தேசத்தின்
விடியல் காண
விழிகள் படபடக்கும்!
***

இரவு பகலை
உண்டு
பசியாறும்.
விளக்கு
உணவின்றி
அழும்!
***
வானம் தினம்
திருவிழாக்
காணும்.
வறுமை
உடையின்றி
நடுங்கும்!
***
உயிர் தினம்
புள்ளி அளவில்
தேயும்!
***

ஜெயந்தி ஜெய்சங்கர்-கொழும்பு-13.

## தேடி வருவேன்

நீயே நான் என்றாய்-என்
நினைவில் குடி இருந்தாய்!
ஓயா துனை நினைத்து-மூலை
ஒதுங்கி நீர் சொரிவேன்!

ஆசை தனைத் தந்தாய்-என்
அன்புக் கடல் ஆனாய்
ஓசை இலாக் கடலுள்-பெரும்
கோரப் புயல் தந்தாய்!

நீசெய் விளை யாட்டால்-என்
நிம்மதி குலைந் தாச்சு
மோசம் எனை அணைத்தால்-இமை
மூடிக் கண் துயில்வேன்!

கடலில் கலந் திடுவேன்-சூரிய
கதிர் களில்நான் இருப்பேன்
திடல் வெளிமலை முகட்டில்-நான்
திரிந்து உனைப் பார்ப்பேன்!

மடல் இதழ் மலர்தடவி-கான்
மான் குயில் தனைத் தழுவி
உடல் இல்லா அணுவாகி-தேடி
உனையே வலம் வருவேன்.

கேணிப்பித்தன்.

## "பிரேம யுத்தம்"

உன் நினைவு
என் இதயத்தில்
"பிரேம யுத்தம்"
புரிகிறது!
...
உன்
விழிகள் வீசிய
ஏவுகணைகள்
என்
சிந்தனைகளை
சிதைத்துவிட்டது!
...
உச்சிமுதல்
பாதம்வரை
ஓசையில்லாமல்
ஓடிக்கொண்டிருப்பது
உன் நினைவு!
...

உன்
அன்பின்
அடைக்கலத்திற்கு
என்
இளமைக்காலம்
தவம் கிடக்கிறது!
...
தினம் நீ
தரிசனம்
தராவிட்டால்
செத்துப்பிழைக்கிறது
என்
ஆத்மா!
...

ஹெந்தளை நவா.

## எத்தனை நாளைக்கு

உன்
விழிகளின் அபிநயத்தில்
விழ்ந்துவிட்ட
என் இதயம்
விடியலை நோக்கி
காத்திருப்பதும்
இன்னும்
எத்தனை நாளைக்கு?
••
விடிந்தால் பொழுது
சாயும் வரை
உனை நான்
நினைத்திருப்பதும்
பொழுது சாய்ந்து
படுக்கையில் விழ்ந்தால்

விடியும் வரை
கனவுகளில் நீ வந்து
'கண்ணாம் மூச்சி' ஆடுவதும்
இன்னும்
எத்தனை நாளைக்கு?
••
கனவில் நான்
காண்பவையாவும்
நேரில், நிஜமாய்
நடப்பதை
விதியும் தடுப்பது
இன்னும்
எத்தனை நாளைக்கு?

எல். கே. நாதன், கொழும்பு-15.



## குலுக்குதடி என்மனசை.

வடக்குத் தெரு அந்தப் பக்கம்
வாய்க்கால் கரையோரம்
செக்கச் சிவநத புள்ள
சிங்காரி சின்ன மச்சி

மஞ்சள் நிறச் சிற்றாடை
மாரளவு தளர்ந்து கட்டி
கூந்தல் அவிழ்ந்து விட்டு
கொடிறவுக்க கழட்டிவைச்ச

தங்க நிற உடல் நனைய
தண்ணியில இறங்கி நிண்டா
தாழம்பூ வாசனையாய்
தண்ணி மணக்குதடி

உன்மேனி எழில் காண
ஒற்றையடிப் பாதையோரம்
தேத்தா மரத்தடியில்
தெரியாமல் ஒளிஞ்சி நிண்டன்

தண்ணியில நனஞ்ச புள்ள
தலை நிமிர்ந்து எழுந்து நிண்டா
பட்டாடை உடலிலொட்டி
பாக்க மனம் துள்ளுதடி

குமரி நீ எம்புறமா
குனியாமல் நிமிர்ந்து நிண்டா
கொள்ளை அழகிரண்டும்
குலுக்கு தடி என்மனசை

அத்த பெத்த அருங்கனியே
அமுதவல்லி பொற்குவியே
தொட்டணைப்ப தெக்காலம்
தூது விடு பைங்கிளியே!

கவி. காளிதாஷன், ஈச்சத்தீவு.

## நானும் என் தேசமும்!

விழித்திருக்கிறபோதே-
கண்களை கவ்விக்கொள்கிற இருள்
இமைகளை மூடிக்கொண்டாலும்,
நேற்றைய பொழுதின்
குருதி சிதறலில்
மூச்சு திணறிப்போகும் கனாக்கள்!

தங்கமுலாம் பூசிய
எண்ணங்களை விழுங்கியபடி
மின்னிப் பார்க்கும்
குப்பிவிளக்கின் இரவுகள்-

வெடிச்சத்தங்களோடு
விழித்துக்கொள்கிற
சேவல்கள் கூவாத
இன்றைய விடிகாலைகள்!

கல்விப்போக முடியாத கழுகுகள்
வானத்தில் வட்டமடித்தபடியிருக்க
பங்கருக்குள்
நொறுந்துபோகும் பகல்கள்!

இருப்பினும்
நிலவின் தூறலில்
பனங்கொட்டையில் பந்து
விளையாடிய
என்வீட்டு முற்றத்தையும்
கொட்டும் மழையில் நனைந்தபடி
கொடி ஏற்றிய பொழுதுகளையும்
அடிவாங்கியபடியினும்,

அம்மாவின் மடியில்-
படுத்துறங்கிய நாள்களையும்,
விட்டெறிந்து விலகிப்போக
பிரியமில்லாத
நானும் என்னவர்களுமாக...!

பா. பிரியதர்சன், பேராதனை வளாகம்.



## தீர்வு எப்படி...?

உஷ்ணம் உடலுக் குதவா
குளிரும் உடலுக் குதவா
கஷ்டப் படுவோர்
கணக்கிலர்!

"ஜன்னலைப் பூட்டினால்
உஷ்ணம் கொதித்து
வியர்த்துச் சோர்ந்து
வெடவெடத் துடனே
விடுவேன் உயிரை
ஜன்னலைத் திறந்திடு!"

"ஜன்னலைத் திறந்தால்
குளிர்பனி புகுந்து
விறைத்து விங்கி
இரத்த முறைந்து
உயிரை விடுவேன்-!
ஜன்னலைப் பூட்டிடு!"



சைபீரியாவின் புகைவண்டியுள்ளே
பிரயாணம் செய்த பெண்கள் இருவர்
பிறிட்டுக் கத்திப் பிதற்றிய கூச்சல்-
அதிர்ந்து நின்றான் பரிசோதகன்
இதற்கென்ன தீர்வு! விளிகள் பிதுங்கி
விழித்துத் தவித்து விறைத்துப் போனான்!


ஒருவன் எழுந்தான் ஓங்கிக் கத்தினான்
"முதலில் ஜன்னலைப் பூட்டு--!
ஒருத்தியின் ஆவி உடனே பிரிந்திடும்
பிறகு ஜன்னலைத் திறந்திடு
மற்றவள் ஆவியும் ஒடுங்கிடும்
பிரச்சினை தீரும் பிரயாண மாவோம்!"

ஏ. இக்பால், தர்காநகர்.










## இந்த வாரம் உங்கள் பலன்

(28.05.95 முதல் 03.06.95 வரை)

சோதிட மாமணி 'தில்லை'

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் நிலைகஷ்டம், பணச் செலவு. | பகல் 12 மணி |
| திங்கள்- | முயற்சி பலிதம், அந்நியர் சகவாசம். | காலை 7 மணி |
| செவ்வாய்- | புதிய முயற்சி, பணக்கஷ்டம். | காலை 6 மணி |
| புதன்- | தொழில் மந்தம், உறவினர் பகை. | பகல் 12 மணி |
| வியாழன்- | வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| வெள்ளி- | பெரியோர் உதவி, முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| சனி- | தொழில் சிறப்பு, மனக்கவலை நீங்கும். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | மனக்கவலை, உறவினர் உதவி. | காலை 6 மணி |
| திங்கள்- | புதிய முயற்சி, செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- | காரியசித்தி, தொழில் சிறப்பு. | பகல் 11 மணி |
| புதன்- | பெரியோர் உதவி, கௌரவம். | காலை 7 மணி |
| வியாழன்- | வீண்மனஸ்தாபம், மனக்குழப்பம். | பகல் 12 மணி |
| வெள்ளி- | வெளியிட வாசம், செலவு மிகுதி. | காலை 9 மணி |
| சனி- | மனமகிழ்ச்சி, காரிய சித்தி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய் அதிஷ்ட இலக்கம்-9

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் மேன்மை, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| திங்கள்- | அந்நியர் சகவாசம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | கடன் தொல்லை நீங்கும், பயனற்ற செயல். | காலை 7 மணி |
| புதன்- | உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| வியாழன்- | புதிய முயற்சி, பணக்கஷ்டம். | பகல் 11 மணி |
| வெள்ளி- | வெளியிட வாழ்க்க, செலவு மிகுதி. | காலை 9 மணி |
| சனி- | பயனற்ற செயல், வீண் மனக்கவலை. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் நிலைச் சிறப்பு, பணவரவு. | காலை 6 மணி |
| திங்கள்- | மனக்குழப்பம், செய்தொழில் நட்டம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | உறவினர் உதவி, மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| புதன்- | வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| வியாழன்- | காரிய சித்தி கடன் தொல்லை. | பகல் 11 மணி |
| வெள்ளி- | பணக்கஷ்டம், பெரியோர் உதவி. | காலை 7 மணி |
| சனி- | வீண சந்தேகம், அந்நியர் பகை. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, காரியசித்தி. | காலை 6 மணி |
| திங்கள்- | முயற்சி பலிதம், பணச் செலவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | துயர் நீங்கும், காரியானுகூலம். | காலை 7 மணி |
| புதன்- | தொழில் நிலை கஷ்டம், பணச்செலவு. | பகல் 12 மணி |
| வியாழன்- | வீண் முயற்சி, உறவினர் உதவி. | காலை 7 மணி |
| வெள்ளி- | உயர்ந்த நிலை, பயனற்ற செயல். | பகல் 12 மணி |
| சனி- | அந்நியர் உதவி, செலவு மிகுதி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-8

### நவக்கிரக சஞ்சாரம்

| | | |
|---|---|---|
| இடபம் | - | சூரியன், புதன், வெள்ளி |
| சிம்மம் | - | செவ்வாய் |
| துலாம் | - | இராகு |
| விருட்சிகம் | - | வியாழன் |
| கும்பம் | - | சனி |
| மேடம் | - | கேது |

★ சந்திரன்- இடபம், மிதுனம், கர்க்கடகம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார். ★

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | புதிய முயற்சி, பணவரவு. | காலை 7 மணி |
| திங்கள்- | வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | அந்நியர் நட்பு, கௌரவம். | காலை 6 மணி |
| புதன்- | தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| வியாழன்- | வீண் முயற்சி, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| வெள்ளி- | துயர் நீங்கும், காரிய சித்தி. | காலை 9 மணி |
| சனி- | வெளியிட வாழ்க்கை, முன்னேற்றம். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 4

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, பணவரவு. | காலை 6 மணி |
| திங்கள்- | மனக் கிலேசம், செலவு மிகுதி. | காலை 7 மணி |
| செவ்வாய்- | உறவினர் உதவி, கௌரவம். | பகல் 12 மணி |
| புதன்- | வீண் முயற்சி, காரியத்தடை. | பி.ப. 2 மணி |
| வியாழன்- | புதிய முயற்சி, மனக்குறை நீங்கும். | காலை 7 மணி |
| வெள்ளி- | அந்நியர் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| சனி- | செலவு மிகுதி, வீண்குறை கேட்டல். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம் -6

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | காரிய சித்தி, பொருள் வரவு. | காலை 8 மணி |
| திங்கள்- | உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வீண் குறை கேட்டல், மனக்கலக்கம். | பி.ப. 2 மணி |
| புதன்- | பெரியோர் நட்பு, பயனற்ற செயல். | பி.ப. 1 மணி |
| வியாழன்- | துயர் நீங்கும், மனமகிழ்ச்சி. | காலை 6 மணி |
| வெள்ளி- | அந்நியர் உதவி, பாராட்டு. | பி.ப. 2 மணி |
| சனி- | காரிய சித்தி, பொருள் வரவு. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் மந்தம், செலவு மிகுதி. | காலை 7 மணி |
| திங்கள்- | உயர்ந்த நிலை, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | புதிய முயற்சி, செலவு மிகுதி . | பி.ப. 1 மணி |
| புதன்- | அந்நியர் சகவாசம், கௌரவம். | காலை 7 மணி |
| வியாழன்- | மனக்குறை நீங்கும், புதிய வாழ்க்கை. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | பொருள் வரவு, செய்தொழில் விருத்தி. | கலை 6 மணி |
| சனி- | மன்க்குறை நீங்கும், முயற்சி பலிதம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம் -4

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் மேன்மை, பணவரவு. | பகல் 12 மணி |
| திங்கள்- | பெரியோர் உதவி, கௌரவம். | காலை 6 மணி |
| செவ்வாய்- | துயர் நீங்கும், செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| புதன்- | வெளியிடப் பயணம், கௌரவம். | காலை 6 மணி |
| வியாழன்- | காரிய சித்தி, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| வெள்ளி- | பயனற்ற செயல், உறவினர் பகை. | காலை 6 மணி |
| சனி- | புதிய முயற்சி, வீண் பயணம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | புதிய முயற்சி, கௌரவம். | காலை 6 மணி |
| திங்கள்- | வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | தொழில் சிறப்பு, பணக் கஷ்டம். | பி.ப. 2 மணி |
| புதன்- | பொருள் வரவு, காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- | புதிய முயற்சி கடன் படல் | பகல் 12 மணி |
| வெள்ளி- | அந்நியர் சகவாசம், கௌரவக்குறைவு. | பகல் 12 மணி |
| சனி- | தொழில் நிலை கஷ்டம், மனக்குழப்பம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 3

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| திங்கள்- | உயர்ந்த நிலை, வீண்செலவு. | காலை 6 மணி |
| செவ்வாய்- | உறவினர் பகை, செய்தொழில் வீழ்ச்சி. | பகல் 12 மணி |
| புதன்- | வெளியிட வழ்க்கை, செலவு மிகுதி. | காலை 6 மணி |
| வியாழன்- | பயனற்ற செயல், மனக்குழப்பம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | புதிய முயற்சி, பெரியோர் உதவி. | காலை 6 மணி |
| சனி- | மனமகிழ்ச்சி, உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5




www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்





## மருந்து மரம்

எங்கள் தெருவின் வேப்ப மரம்
என்றும் காட்டும் பச்சை நிறம்
இடுவது இல்லை அதற்கு உரம்
இருந்தும் தினமும் வளர்ந்து வரும்
(எங்கள்)

பற்கள் துலக்க குச்சி தரும்
பட்டைகள் மூலம் சாறு தரும்
வித்துக்கள் வழியாய் வேப்பெண்ணை
வேண்டிய மட்டும் கொடுத்துதவும்
(எங்கள்)

அல்லல் படுத்தும் நோய் தீர்க்க
அருமருந்தாக பயன்படுத்த
வெள்ளைப்பூவும் செங்கொழுந்தும்
வள்ளல் போலத் தினம் வழங்கும்.
(எங்கள்)

மருந்து மரமாய் இருந்து வரும்
மகத்துவம் மிக்க வேப்பமரம்
உணர்ந்து அதனைக் காத்திடுவோம்
உவந்து மகிழ்ந்து போற்றிடுவோம்.
(எங்கள்)

அனுப்பியது என். நன்மாறன்.

அச்சமில்லை அமுங்குதலில்லை,
நடுங்குதலில்லை நாணுதலில்லை
பாவமில்லை பதுங்குதலில்லை
ஏது நேரினும் இடர்பட மாட்டோம்.
-சுப்பிரமணிய பாரதியார்.

பாப்பா முரசு சிறு கதை



# கடன் படுத்திய பாடு

குமரன் தன் கையிலிருந்த காசை திரும்பத் திரும்பப் பார்த்தான். ஐந்து ரூபாய் நாணயம். இதில் என்ன வாங்கலாம்? யோசித்தான். எதிரில் ஒரு சிறுவன் பட்டம் விட்டுக்கொண்டிருந்ததைப் பார்த்தான்.

இதற்குப் பட்டம் வாங்கினால் என்ன? தனக்குத்தோன்றியதை அடுத்த நிமிடமே செயற்படுத்த கடைக்குச் சென்றான்.

"எனக்கு ஒரு பட்டம் வேண்டும்" என்று கடைக்காரரைப் பார்த்துக் கேட்டான்.

கடைக்காரரும் பட்டத்தை எடுத்துக் கொடுக்க, குமரன் தன்னிடமிருந்த ஐந்து ரூபாய் நாணயத்தை கடைக்காரரிடம் கொடுத்தான்.

"என்ன தம்பி! ஐந்து ரூபாய் தாரீங்க? இதன் விலை ஆறு ரூபாய். இன்னும் ஒரு ரூபாய் வேணும்" என்றார் கடைக்காரர்.

குமரனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. சட்டைப் பையைத் தடவிப் பார்த்தான். அது காலியாக இருந்தது. பட்டத்தைக் கடைக்காரரிடம் திருப்பிக் கொடுக்கவும் மனமில்லாமல் தயங்கி நின்றான்.

குமரனின் நிலை கடைக்காரருக்குப் புரிந்தது. அவருக்குச் சற்று இளகிய மனம். அவர் குமரனைப் பார்த்து,

"பரவாயில்லை தம்பி! நாளைக்கு மீதி ஒரு ரூபாயை மறக்காமல் கொண்டு வந்து கொடுத்து விடு. இப்போது பட்டத்தை எடுத்துப் போ" என்றார்.

குமரனுக்கு ஒரே மகிழ்ச்சி. ஓடிப்போய் பட்டத்தைப் பறக்க விட்டான். அது பறக்கும் போது பட்டத்தோடு அவனது மனமும் சந்தோசத்தால் பறந்தது.

மறுநாள் பாடசாலைக்குப் புறப்படும் போது கடைக்காரர் ஞாபகம் வந்தது. அவருக்கு ஒரு ரூபாய் கொடுக்க வேண்டுமே. அம்மாவிடம் கேட்கலாமா என்று யோசித்தான். அடுத்த நிமிடம் அம்மா, கடன் வாங்கக் கூடாது என்று ஒரு நாள் கண்டித்தது ஞாபகத்திற்கு வந்தது. அம்மாவிடம் கேட்பதற்கு அஞ்சினான்.

சட்டென்று ஞாபகம் வந்தது. குமரன் தன் நண்பன் கண்ணனிடம் கேட்டு வாங்கிக் கொடுத்து விடலாம் என நினைத்தான். பாடசாலைக்குச் சென்றதும் கண்ணனிடம்,

"ஒரு ரூபாய் காசு இருந்தால் தா! நாளைக்குத் தருகிறேன்" என்று கேட்டான். அவன் தயங்காமல் பையைத் துழாவி இரண்டு ரூபாய் எடுத்துக் கொடுத்தான்.

"இந்தா இரண்டு ரூபாய். சில்லறை இல்லை. இதை வைத்துக்கொள். நாளைக்குத் திருப்பித்தா" என்றான். குமரன் தலையை அசைத்தான். ஆனால் நாளைக்கு எப்படிக் கொடுக்கப் போகிறோம் என்று மனதிற்குள் யோசித்தான்.

மறுநாள் பாடசாலைக்குப் புறப்படும் போது கண்ணனின் ஞாபகம் வந்தது. கண்ணனுக்குக் காசு கொடுக்க வேண்டுமே எனப் பயந்து பாடசாலைக்கு மட்டம் போடலாமா என யோசித்தான். அந்தச் சமயம் பார்த்து, அம்மா குமரனை அழைத்து உப்பு வாங்கி வா என ஐந்து ரூபாய் கொடுத்தாள்.

குமரனுக்குப் பளிச்சென்று ஒரு யோசனை தோன்றியது. மூன்று ரூபாவுக்கு உப்பு வாங்கிக் கொண்டு ஐந்து ரூபாவுக்கு வாங்கியதாகச் சொல்லி விடலாம் எனத் தீர்மானித்தான். பின் அதன்படியே செய்தான்.

அவன் அம்மா கண்டு பிடித்து விட்டாள்.

"இதென்ன குமரா! கடைக்காரன் உன்னை நன்கு ஏமாற்றி விட்டான். ஐந்து ரூபாயை வாங்கிக் கொண்டு உப்பைக் குறைத்துக் கொடுத்து விட்டான். எந்தக் கடையில் வாங்கினாய் நானே போய்க் கேட்கிறேன்" என்றவாறு உப்புப் பொட்டலத்துடன் கடைக்குப் போனாள்.

அம்மாவைத் தடுத்து நிறுத்தும் சக்தி குமரனுக்கு இல்லை. வேறு வழியும் இல்லை. அவனுக்கு மனம் 'பக் பக்' என அடித்துக் கொண்டது. அம்மா திரும்பி வந்ததும் தனது குட்டு உடையப் போகிறதே என நினைத்துப் பயந்தான்.

அவன் நினைத்து முடிப்பதற்குள் அம்மா கடையிலிருந்து திரும்பி வந்தாள். வரும்போதே கோபத்தோடு வந்தது குமரனுக்குத் தெரிந்தது.

"ஏன்டா குமரா, என்றைக்குமில்லாமல் ஏன் பொய் சொன்னாய்? மீதி இரண்டு ரூபாய் எங்கே?" என்று கேட்டாள்.

குமரன் அழுதபடி நடந்ததை எல்லாம் சொல்லி விட்டான்.

அம்மா அடிக்காமல் அறிவுரை கூறினாள்:

"குமரா! நாம் எப்போதும் கடன் வாங்கக்கூடாது. ஒரு ரூபாய் குறைந்தால் உன் ஆசையை அடக்கிக் கொண்டு திரும்பி விடுவதுதானே. அதை என்னிடம் மறைக்க ஒரு பொய் சொல்ல வேண்டியதாகி விட்டதல்லவா? இனிமேல் நம் கையில் உள்ள காசுக்குத் தகுந்த மாதிரிச் செலவு செய்யக் கற்றுக்கொள். தெரிந்ததா?" என்றாள்.

குமரன் அழுதபடியே,

"நான் இனிமேல் கடனும் வாங்க மாட்டேன், பொய்யும் சொல்ல மாட்டேன்" என்றான்.

## வாரம் ஒரு நாடு

### கனடா



அமைவிடம்: வட அமெரிக்காவிலுள்ள மிகப் பெரிய நாடு. வட அத்லாந்திக், வட பசுபிக் பெருங்கடல்களை முறையே கிழக்கு மேற்கு எல்லைகளாகவும் வடக்கில் வட துருவத்தையும் தொட்டு நிற்கும் இந்நாட்டின் தெற்கு எல்லையாக அமெரிக்கா விளங்குகிறது.

பரப்பளவு: 9,976,000 சதுர கிலோ மீற்றர் (3,851,810 சதுர மைல்)

மக்கள் தொகை: 26,200,000 பேர்.

தலைநகர்: ஒட்டாவா (825,000பேர்)

ஆட்சி முறை: பிரிட்டனின் குடியேற்ற நாட்டு அந்தஸ்தைப் பெற்று இருந்த இந்நாடு 1982ல் ஏற்படுத்தப்பட்ட 'கனடா சட்டம்-1982' இன் அடிப்படையில் பாராளுமன்ற ஜனநாயக முறையில் ஆட்சி செலுத்தப்படுகிறது.

இந்நாடு 10 மாநிலங்களையும் மத்திய அரசின் நேரடி நிர்வாகத்துக்குட்பட்ட இரு தனி அமைப்புக்களையும் கொண்டுள்ளது.

மாநில சுயாட்சியுடன் கூடிய சமஷ்டி ஆட்சி முறை இங்குள்ளது.

பேசும் மொழி: ஏறத்தாழ 27 சத விகிதமானோர் ஃபிரேஞ்சு மொழி பேசுகின்றனர். ஏனையோர் ஆங்கில மொழி பேசுகின்றனர்.

மதம்: கிறிஸ்தவம்.

சிறப்பம்சங்கள்: ரொரண்ரோ, மொன்ட்ரியல், வான்கூவர் மற்றும் எட்மண்டன் ஆகிய பெரிய நகரங்கள் சகல நவீன வசதிகளையும் கொண்டவை. இயற்கை வளங்கள் நிரம்பப்பெற்ற நாடென்பதனால் தனி மனித வருமானமும் அதிகம். கனடா ஒரு விவசாய நாடாகக் கணிக்கப்பட்டாலும் அந்நாட்டுக்கு தேவையான பொருட்களை உற்பத்தி செய்வதற்கேற்ற தொழிற்துறைகள் வளர்ச்சி அடைந்துள்ளன. அடர்ந்த காடுகளை உடைய இந்நாட்டின் மரங்களை பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் ஏராளமான அந்நியச் செலாவணி கிடைக்கிறது. பலதரப்பட்ட கனிமங்களும் கிடைக்கின்றன. அத்துடன் கணிசமான அளவு எண்ணை வளமும் உண்டு.

பார்க்க வேண்டியவை: பெருவளர்ச்சி கண்ட நாடான கனடா பல வளங்களையும் வசதிகளையும் கொண்ட செல்வந்த நாடாகும். பல்லின மக்களும் ஒற்றுமையாக வாழ்வதற்கு ஏற்ற சமஷ்டி ஆட்சிமுறையை ஏற்றுள்ள நாடு. ஆங்கிலம் மற்றும் ஃபிரேஞ்சு கலை - கலாசாரங்கள் தொடர்பான அம்சங்கள் முக்கியமான நகரங்களில் காணப்படுகின்றன. புராதன கட்டிடங்கள், நூதன சாலைகள் எங்கும் காணப்படுகின்றன. தலைநகரான ஒட்டாவாவில் பாராளுமன்ற கட்டிடத் தொகுதிகளும் அமைதிக் கோபுரமும் பயணிகளைக் கவர்ந்திழுக்கும். இங்குள்ள யுத்த நூதனசாலை மற்றும் கனடிய பண்பாட்டுக் காட்சிச்சாலை ஆகியவையும் கண்டிப்பாகப் பார்க்க வேண்டிய இடங்களாகும்.

ரொரண்ரோ நகரில் கட்டப்பட்டுள்ள 'சிஎன்' கோபுரம் தனித்து உயர்ந்து நிற்கும் ஓர் அமைப்பாகும். உலகில் இதுவே மிக உயரமான கோபுரம் என்று கருதப்படுகிறது. இதன் உச்சியில் நின்று பார்த்தால் அழகு மிளிரும் அந் நகரத்தின் வனப்பினை முழுமையாக இரசிக்கலாம்.

நாட்டின் மேற்கே வான்கூவர் நதிக்கரையில் அமைந்துள்ள வான்கூவர் நகரம் மிகவும் அழகான நகரம் என்று வர்ணிக்கப்படுகிறது.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 03.06.1995.
வர்ணம் தீட்டும் போட்டி இல: 92
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 89


பரிசுக்குரியவர்
சாமராபிரசாட் வகுசுவிதான, பதுளை ம.ம.வி-பதுளை.

பாராட்டுக்குரியவர்கள்
சிவநேசராசா வியூகரன்
மட்/குருமண்வெளி சிவசக்தி ம.வி.களுவாஞ்சிக்குடி.
செ.பிரசாந்த் கோட்டமுனை கனிஷ்ட வி-மட்டக்களப்பு
ஜே.சோவினி, மட்டக்களப்பு.
எம்.எம்.எம்.அனீஸ், கெடபிடிய-அகுரஸ்ஸ.
எம்.டபிள்யு எம்.நவாஸ், முஸ்லிம் வித்தியாலயம்-நாரங்கல்ல.
எம்.மதுநாத், பண்டாரவளை.
செல்வன் ஆர் குலேந்திரன், இ/பரி.யோவான் த.ம.வி-இறக்குவானை.

## அறிவோம் மனதில் பதிவோம்

இங்கிலாந்தைச் சேர்ந்த பியோனா கேம்பல் என்ற பெண் உலகைக் கால்நடையாகச் சுற்றி வந்து சாதனை புரிந்தவர். அப்படி செய்வதற்கு 11 ஆண்டுகள் ஆனது.





ஃபிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த மைக்கல் புருபெர், சர்வதேச ஸ்கியிங் (பனிச்சறுக்கு) போட்டியில் பங்கு கொண்டு மணிக்கு 228.786 கிலோமீற்றர் வேகத்தில் சறுக்கி சாதனை புரிந்தார்.



முற்காலத்தில் சீனர்கள் எறும்புகளை வைத்து மருந்து, உணவு தயாரித்தனர். இப்போதும் அங்குள்ள நான்ஜிங் நகரில் ஒரு ஹோட்டலில் எறும்புகளைக் கொண்டு 40 வகை கேக்குகளும், தேனீரும், பிஸ்கெட் வகைகளும் தயாரிக்கப்படுகின்றன. இவை உடலுக்கு மிகவும் நல்லது என சீனர்களால் விரும்பி உண்ணப்படுகின்றது.

## விடுகதைகளும் விடைகளும்

01. இரண்டு கைகளுக்குள்ளே இன்னொரு கையும் உனக்கு இருக்கிறது. அது என்ன கை?
02. குரு கேட்டால் சீடனிடமிருந்து விடை வராது. ஆனால் அவன் செய்கையில் அந்த விடை இருக்கும். அது என்ன விடை?
03. இரண்டே எழுத்துக்கள்தான். இது ஆங்கிலத்தில் 'ஓடும்' இந்தியில் 'போதும்'. அது என்ன?
04. இதை உன்னால் பிடிக்க முடியும். ஆனால் சிறிது நேரத்தில் விட்டு விடுவாய். அது என்ன?
05. இவனுடன் எழுந்திருப்பவர்களும் உண்டு. அது என்ன?

விடைகள்

01. ரேகை 02. பணிவிடை 03. பஸ்
04. மூச்சு 05. சூரியன்

ஸலீம்.மு.கடாபி
அ/ஹொரவபொதானை-மு.வி.

01. பூப்பது தெரியாது. காய்ப்பது தெரியும். அது என்ன?
02. சிகப்பு சேலை கட்டியிருப்பாள், வயிற்றில் நிறைய சேகரிப்பாள். அது எது?
03. இரவு பூரா பூந்தோட்டம், விடிஞ்சால் வெறுந்தோட்டம். அது என்ன?
04. மூன்று முட்டை இடும். 90 நாட்கள் அடை காக்கும். பாம்பை போல் நாக்கை நீட்டும். படம் எடுக்கும்-பாம்புமில்லை, அது எது?
05. நாலு உலக்கை குத்தி வர, இரண்டு முறம் புடைத்து வர, ஒரு துடைப்பம் துடைத்து வர-அது என்ன?

விடைகள்

01. கடலை 02. தபால் பெட்டி
03. நட்சத்திரம் 04. பனைமரம்
05. யானை

ஜெஸீரா ரஹுமத்துல்லா
புத்தளம்.

www.tamilarangam.net

# தகவல் பெட்டி






## மறக்க முடியவில்லை. அந்த நாளில் துரத்திய யுத்தம் மறக்க முடியவில்லை.

அமெரிக்கா-வியட்நாம் யுத்தத்தில் இரத்தத்தை உறையவைக்கும் எத்தனையோ சம்பவங்கள்.

வியட்நாமை பணியவைக்க நச்சுக் குண்டுகளை தாராளமாகப் பொழிந்தது அமெரிக்கா.

அமெரிக்காவின் இரும்பு நெஞ்சத்தை உலகுக்கு காட்டும் படம்தான் இது.

1972 ஜூன் 8ம் திகதி வியட்நாம் கிராமமான 'ட்ராங்பாங்' மீது பறந்தன அமெரிக்க விமானங்கள்.

விமானங்கள் போட்ட குண்டுகளில் நான்கு குண்டுகள் மகா நாசமானவை. நேபாம் என்று அழைக்கப்படும் எரிவாயு நிரம்பிய குண்டுகள்.

வீழ்ந்த குண்டுகள் சிதறி எங்கும் தீபரவியது. மதிய உணவை உண்டபடி இருந்த நூற்றுக்கணக்கான மக்கள் உடல் கருகிச் செத்துப் போனார்கள். எஞ்சியவர்கள் உயிரைக் கையில் பிடித்தபடி ஓடினார்கள்.

'பான் தி கிம்' என்ற சிறுமிக்கு அப்போது ஒன்பது வயது. அவளுடைய உடைகளில் தீப்பிடித்தது.

தீப்பிடித்த உடைகளை களைந்துவிட்டு நிர்வாணமாக ஓட்டம் பிடித்தாள்.

பிரபல பத்திரிகையாளரும், படப்பிடிப்பாளருமான நிக் உட் அக் காட்சியை பதிவு செய்தார். மறுநாளே உலகம் முழுவதும் உள்ள செய்தித்தாள்களில் இப் புகைப்படம் பிரசுரமாகியது.

இக்கொடூர காட்சி அமெரிக்காவின் இதயம் தொலைந்துவிட்டதா என்று உலகை விசாரிக்க வைத்தது.

அமெரிக்கா அம்பலமாகக் காரணமாக இருந்த சிறுமி 'கிம்' வியட்நாம் அரசால் பராமரிக்கப்பட்டாள்.

கியூபாவுக்கு மேற்படிப்புக்காக சென்ற 'கிம்' படிக்கும் போது ஒரு மாணவனுடன் காதல். இருவரும் ஒரு முடிவு செய்தனர். யாருக்கும் சொல்லிக் கொள்ளாமல் கனடாவுக்கு ஓடிவிடுவதுதான் முடிவு! ஓடியே விட்டனர்!

கனடா ரோறண்டோவில் கிம் இப்போது தனது கணவருடனும் குழந்தையோடும் படு சௌக்கியமாக இருக்கிறார். நேபாம் குண்டின் தாக்கம் மட்டும் இன்னும் மறையவில்லை. முதுகுவலி உட்பட பல நோய்கள் 'கிம்' மை வாட்டுகின்றன.


ஒன்பது வயதில் நிர்வாணமாக ஓடிய காட்சியை விபரிக்கும் தனது புகைப்படத்தை பார்த்து வெட்கப்படுகிறார் இப்போது 32 வயதான கிம்.

## கவனி கண்மணி!

இங்கிலாந்தில் உள்ள மிருகக்காட்சி சாலையொன்றில்தான் இந்தக் காட்சியை கமரா கண்டெடுத்தது. 420 இறாத்தல் உள்ள இந்தக் கொரில்லா செல்லமாக குழந்தையோடு கொஞ்சி மகிழ்கிறது. இது கொரில்லா தாக்குதல் அல்ல! கொரில்லாவின் தாலாட்டல்!



## இந்த மானைப் பாருங்கள் அழகு!



புள்ளிமான், துள்ளும் மீன் என்றெல்லாம் பெண்களை வர்ணிப்பது பெண்களுக்கும் பிடித்தமானவை தான். புள்ளிபோட்ட உடை, அதே போல் ஒரு குடை, புள்ளிமான் நடை. இவரது பெயர் மிஸ் ஜீன் போல். ஆடை அலங்காரப் போட்டியில் அசத்துவதற்காகவே இப்படியொரு போஸ்.

## தூக்குத் தூக்கி

செய்யும் வேலை எதுவானாலும் அதில் புதுமை செய்யும் ஆசை இருந்தால் சலிப்பு வரவே வராது.

படத்தில் இருப்பவர்கள் மூவரும் உணவு விடுதிகளில் பணியாற்றுகிறவர்கள். செய்யும் வேலையில் புதுமை செய்து படைத்துவிட்டார்கள் உலக சாதனை.



1. படத்தில் இருப்பவர் மிஸ்டர் ஹகோ. நீயுயோர்க்கில் உள்ள உணவு விடுதியில்தான் வேலை. ஒரு கையில் எட்டுத் தேநீர் குவளைகளை வெகு சுலபமாக ஏந்திச் சென்றுவிடுவார். இதனால் வாடிக்கையாளர்களுக்கும் சந்தோசம். இவர் பரிமாறுவதைக் காண்பதற்காகவே உணவு விடுதிக்கு பலர் வந்து குவிகிறார்களாம். வியாபாரமும் படு ஜோர்!





2. மிஸ்டர் ஹகோவுக்கு ஒரு சரியான போட்டியாளர். பெயர் சார்ஸ் ரகல். ஒரு கரத்தில் 12 தேநீர் குவளை. மறுகையில் அவரது சகோதரி.

3. இருவருக்கும் போட்டியாக பெண்ணாலும் முடியும் என்று காட்டுவதற்காக சாதனை படைத்துள்ளார் மிஸ் லோவியா. ஒரு கரத்தில் 23 தேநீர் கோப்பைகள். உங்களால் முடியுமா?


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சத்யராஜ்-நக்மா
வில்லாதி வில்லன்

# 103

## கவுண்டமணி — செந்தில் சாதனை.

கவுண்டமணி செந்திலுக்கு உதைத்தாலும், திட்டினாலும் இருவரும் சேர்ந்து ஒரு சாதனையை ஏற்படுத்தி விட்டனர். தமிழ் திரையுலகில் அதிக படங்களில் இணைந்து நடித்த நகைச்சுவை நடிகர்கள் இருவரும்தானாம்.

இதுவரை 225 படங்களில் கவுண்டமணி, செந்தில் ஜோடி இணைந்து நடித்திருக்கிறது. கவுண்டமணி உதைப்பதை செந்தில் வாங்குவார். செந்தில் வாங்குவதை இரசிகர்கள் சலிக்காமல் இரசிக்கும்வரை இந்த ஜோடிக்கு இராசி நல்ல இராசிதான்.

## சங்கவியின் சங்கதி

சங்கவி இப்போதெல்லாம் யாரை எப்படி வளைத்துப் போடுவது என்ற சங்கதிகளெல்லாம் தெரிந்தவராகி விட்டார்.

பிரபல இயக்குநர் ஒருவர் சங்கவி பின்னால் அலைகிறார். 'வைர நெக்லஸ்' ஒன்றும் வாங்கிக் கொடுத்திருக்கிறாராம் இயக்குநர்.

அந்த இயக்குநர் யார் தெரியுமோ? சமீபத்தில் மிகப் பெரிய வெற்றிப் படம் ஒன்றை தந்தவர்தான் அவர். கண்டுபிடிப்பது உங்கள் புத்திசாலித்தனம்.

சங்கவி பற்றி மேலும் ஒரு தகவல், ரஜினிகாந்த் நடிக்கும் 'முத்து' படத்தில் நடிக்க சங்கவிக்கு கொள்ளை ஆசை. ரஜினிகாந்த்தை நேரில் சந்தித்து ஆசையைச் சொன்னாராம். ரஜினிகாந்த் பிடி கொடுக்காமல் பதில் சொல்லி அனுப்பியிருக்கிறார்.

ஆனால் சங்கவியோ படு நம்பிக்கையாக "ரஜினி சார் படத்தில் நடிக்கப் போகிறேன். ஒரு காட்சியில் வந்தாலும் கூட பரவாயில்லை" என்று சொல்லித் திரிகிறாராம்.

## ஊர்வசி ஆறு இலட்சம்

ஊர்வசி நடிக்கும் படங்களுக்கு வரவேற்பு இருப்பதால் ஊதிய வரவை அதிகரிக்காமல் இருப்பாரா? அதிகரித்து விட்டார். 6 இலட்சம் ரூபாய் தந்தால்தான் நடிப்பேன் என்று கண்டிப்பாகச் சொல்லிவிடுகிறாராம்.

'மகளிர் மட்டும்' படத்தின் மூலம்தான் மீண்டும் ஒரு ரவுண்ட் வரத்தொடங்கினார் ஊர்வசி. அதற்கு முன் மார்க்கெட் டல்லாக இருந்தபோது ஊர்வசி வாங்கிய சம்பளம் 2 இலட்சம்.

## சிவாஜியின் ஆசை

'செவாலியே' சிவாஜிக்கு ஒரு ஆசை. அவரே தனது ஆசையை ஒரு விழாவில் வெளியிட்டார். நான் எல்லாபாத்திரங்களிலும் நடித்து விட்டேன். ஆனால் அனுமார் வேசத்தில் நடிக்கவில்லை. நடிக்க வேண்டும் என்று எனக்கு ஆசை. யாராவது அனுமார் வேசத்தில் நடிக்க அழைத்தால் நடிப்பேன்.



ராதிகா
படம்-ராணி மகாராணி



பார்த்திபன்-சங்கீதா
படம்-புள்ள குட்டிக்காரன்

## அமலாவின் கணவரை பறிக்கமாட்டேன் மனிஷா பரபரப்பான வாக்குமூலம்

நடிகை அமலாவும் நடிகர் நாகார்ஜுனாவும் ஒரு குழந்தையும் பெற்று சந்தோசமாக இருக்கிறார்கள்.

நாகார்ஜுனாவோடு பல நடிகைகள் இணைத்துப் பேசப்படுகிறார்கள்.

அந்தப் பட்டியலில் 'லேட்டஸ்ட்' பெயர்கள் நக்மா, மனிஷா கொய்ராலா.

மனிஷா கொய்ராலாவிடம் கேட்டதற்கு சூடாக மறுப்புத் தெரிவித்திருக்கிறார். "அமலா எனக்குத் தோழி. நாகார்ஜுனா நல்ல நண்பர். நண்பர்கள் சந்தித்துக் கொள்வதில்லையா? சரளமாகப் பேசிப் பழகுவதில்லையா? சந்தோசமாக இருப்பதில்லையா? அப்படித்தான் நான் நாகார்ஜுனாவுடன் பழகி வருகிறேன். அவரும் அமலாவும் சேர்ந்து வாழ வேண்டும். நன்றாக இருக்க வேண்டும் என்பதே என் ஆசை." என்று வாக்கு மூலம் கொடுத்திருக்கிறார் மனிஷா கொய்ராலா.

மனிஷா-நாகார்ஜுனா இணைந்து நடித்த தெலுங்குப் படம் 'கிரிமினல்'. தமிழில் 'எல்லாமே என் காதலி' என்ற பெயரில் விரைவில் திரைக்கு வரப் போகிறது.

## தலா ஒரு கோடி

அர்ஜுன்-விஜயசாந்தி நடிக்கும் 'தாயின் மணிக்கொடி' தமிழ், தெலுங்கு ஆகிய இருமொழிகளிலும் தயாராகிறது அல்லவா?

இருமொழிகளிலும் நடிக்க அர்ஜுன்-விஜயசாந்தி சம்பளம் எவ்வளவு என்கிறீர்கள்? தலா ஒரு கோடி ரூபாய்!

## மினி சினி

* கார்த்திக் நடித்து வெளிவந்துள்ள 'நந்தவனத்தெரு' படத்திற்கு நடனம் அமைத்துள்ள பிருந்தா, பிரபல நடன இயக்குநர் கலாவின் சகோதரி ஆவார். பிருந்தா 'நம்மவர்' படத்தில் நாகேஷின் மகளாக நடித்தவர்.
* மணிரத்தினம் சொந்தமாகத் தயாரிக்க, 'கேளடி கண்மணி' வசந்த் இயக்கி வரும் 'ஆசை' படத்தில் கதாநாயகியாக அறிமுகமாகும் சுபலட்சுமி என்னும் புதுமுகம் கல்கத்தாவைச் சேர்ந்தவர்.
* ஆர்.கே.செல்வமணி தயாரிக்கும் 'அசுரன்' படத்தை 'கப்டன் பிரபாகரன்' படத்தின் இரண்டாவது பாகமாக எடுத்து வருகிறார்கள். 'கப்டன் பிரபாகரன்' படத்தில் வீரபத்ரன் வேடத்தில் நடித்த மன்சூர் அலிகான் 'அசுரனி'லும் அதே போன்று நடிக்கிறார்.
* அர்ஜுன் நடிக்கும் 'செங்கோட்டை' படத்தில் கதாநாயகிகளாக மீனா-ரம்பா நடித்து வருகிறார்கள். இவர்களுடன் ஃப்ராங்கா என்ற நோர்வே நாட்டுப் பெண்ணும் நடிக்கிறார்.
* 'திரு. மூர்த்தி' படத்தை அடுத்து சரத்குமார்-ரோஜா நடிக்கும் 'மூக்குத்தி காசி' படத்தை இயக்குவதாக இருந்தார் பவித்ரன். சில காரணங்களால் தற்போது 'மூக்குத்தி காசி' கைவிடப்பட்டுள்ளது.
* ராதிகா ஒன்பது வேடங்களில் நடித்து வரும் 'ராணி மகாராணி' படத்தில் இரண்டாவது கதாநாயகியாக நடித்து வரும் அருணாஸ்ரீ தற்போது தனது பெயரை ராஜகுமாரி என்று மாற்றியுள்ளார்.
* 'கர்ணா', 'பசும்பொன்' படங்களை அடுத்து 'வில்லாதி வில்லன்' படத்திற்கு இசையமைத்து வரும் வித்தியாசாகர், தற்போது பி.வாசு இயக்கத்தில் பிரபு நடிக்கும் 'மிஸ்டர் மெட்ராஸ்' படத்திற்கு இசையமைக்கிறார்.
* ஒளிப்பதிவாளர் பி.சி.ஸ்ரீராமிடம் உதவியாளராக இருந்த எம்.ஆர்.பாரதி என்பவர் முதன் முறையாக 'அய்யா' என்ற படத்தை இயக்குகிறார். 'அய்யா'வாக நெப்போலியனின் நடிக்கவுள்ளார்.
* தற்போது கன்னடத்தில் 'பல்நன் மகா' என்ற படத்திலும், ஒரு தெலுங்குப்படத்திலும் நடித்துக் கொண்டிருக்கும் மோகனா தமிழில் 'புதிய அலை', 'வீட்டுக் கணக்கு' ஆகிய படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.
* தெலுங்கில் டாக்டர் ராஜசேகர், செல்வா நடித்து வெற்றி பெற்ற 'கேங் மாஸ்டர்', தமிழில் 'மனிதா மனிதா' என்ற பெயரில் வெளிவரவுள்ளது. இதில் டாக்டர் ராஜசேகர் பேராசிரியராகவும், செல்வா மாணவனாகவும் நடித்துள்ளனர்.



ரோஜா-அருண் பாண்டியன்
படம்-அசுரன்

## ரோஜாவுக்கு கோபமில்லை

நக்மா வரவால் பாதிப்பா? என்று ரோஜாவிடம் கேட்டால் உடனே பதில் வருகிறது. "எனக்குப் பாதிப்பா? நோ! நக்மா வேறு. என் பாதை வேறு. நாங்கள் இருவரும் நல்ல தோழிகள். எங்களுக்குள் போட்டியே கிடையாது." என்கிறார் ரோஜா. அது சரி, அதென்ன வேறு வேறு பாதை?

## சரளாவுக்கு டும். டும்

கீச்சுக் குரல் நகைச்சுவை நடிகை கோவை சரளாவுக்கு மணமகன் ரெடி. விரைவில் திருமணம் நடக்கப் போகிறது. மணமகனின் பெயரைக் கேட்டால் சரளா நெளிகிறார். வெட்கமாம். அடடே...பரவாயில்லையே!

www.tamilarangam.net

# சினி விசிட்

## ்பொன்னுக்கு ...பின்னால்...

...டத்தில் சில காட்சிகளில் வந்தாலும் ...ார் சிவாஜி. படமும் நன்றாக ஓடிக் ...து.

...டிப்பில் நடந்த ஒரு சம்பவம் பற்றி பாரதிராஜா கூறியது இது: ஒரு காட்சியில் எப்படி நடிக்க வேண்டும் என்று கேட்டார் சிவாஜி. "அண்ணே உங்களுக்கு நான் சொல்லித் தர்றதா? நீங்களே எப்படி நடிக்கிறீர்களோ அப்படி நடியுங்க. நாங்க படம் புடிச்சுக்குறோம்" என்றார் பாரதிராஜா.

"படத்தின் இயக்குநர் நீதாம்பா. நீதானே எனக்குச் சொல்லிக் கொடுக்கணும்" என்றார் சிவாஜி.

"அண்ணே நீங்க எப்படி வேணும்னாலும் நடிங்க, அதுவே போதும்" என்றார் பாரதிராஜா. "அப்ப நான் கிளம்பறேன்" என்று சிவாஜி சொல்ல, "அய்யய்யோ... நான் சொல்லிடறேன் அண்ணே" என்று கூறிவிட்டு காட்சியை விளக்கினார் பாரதிராஜா. படப்பிடிப்பு குழுவினரே வியக்கும்படி அந்தக் காட்சியில் நடித்து முடித்தாராம் 'செவாலியே' சிவாஜி.

## சரண்யாவுக்காக ரேவதி!

'பசும்பொன்' படம் பார்த்தீர்களா? (வீடியோவில்) அதில் பிரபுவின் ஜோடியாக நடித்துள்ள சரண்யாவின் குரலை 'எங்கேயோ கேட்ட குரலாக இருக்கிறதே' என்று யோசித்தீர்களா? சரிதான், சரண்யாவுக்கு குரல் கொடுத்திருப்பவர் நடிகை ரேவதி.

## துபாய் போகிறார் சுகன்யா

பிரபுவோடு 'மிஸ்டர் மெட்ராஸ்' படத்தில் ஒப்பந்தமாகியுள்ளதால் சுகன்யா முகத்தில் சந்தோசம்.

விரைவில் துபாய், குவைத் போன்ற நாடுகளுக்கு பறந்து போய் ஒரு கலக்கு கலக்கிவிட்டு வரப்போகிறாராம். கலை விழா நடத்தி சேவை செய்யத்தான் அந்தச் சுற்றுப் பயணத் திட்டமாம். நிச்சயம் பையில் நிறையச் சேரும்.



...மன் ...வரும் படம் 'சுபசங்கல்பம்' ...ில் 'பாசவலை' என்ற பெயரில் ...ழிமாற்றப்படவுள்ளது.

## பிரியா ஏன் போனார்

பிரியாராமன் தெலுங்குப் படவுலகில் தங்கிவிட்டார். ஆந்திராவில் புதுவீடும் வாங்கியிருக்கிறார்.

தமிழ்ப் படவுலகை மறந்து விட்டீர்களா மிஸ் பிரியா ராமன்? என்று கேட்டார் ஒரு நிருபர். "மறக்கவில்லை. அங்கு சில கசப்பான அனுபவங்கள் ஏற்பட்டுவிட்டன. எனவே சிறிது விலகி வந்துவிட்டேன். முன்னணி நடிகர்களோடு நடிக்க வாய்ப்புக் கிடைத்தால் ஓ.கே சொல்வேன்" என்கிறார் பிரியாராமன். அதென்ன பிரியா, கசப்பான அனுபவங்கள்?

## கமலிடம் வினிதா கேட்டது.

பெரிய நடிகர்களை நேரில் சந்தித்து வாய்ப்புக் கேட்பதே புத்திசாலித்தனம். நேரில் என்றால் குழைந்து நெளிந்து தேவைக்கு ஏற்ப தந்திரமாக நடந்து கொள்ளலாம். இந்த வழியைத்தான் பிரபல நடிகைகள் பலர் பின்பற்றத் தொடங்கியிருக்கிறார்கள். கமலிடம் நேரில் சென்று வினிதா சான்ஸ் கேட்டாராம். என் பட கதாநாயகிகள் விடயத்தில் இயக்குநர்கள் முடிவுப்படிதான் நான் நடப்பேன் என்று கமல் சொல்லிவிட்டாராம். தலையைத் தொங்கப் போட்டபடி திரும்பிவிட்டார் வினிதா.

## ● முகப்பில் ●

ஷில்பா ஷெட்டி

═ கார்த்திக் ═

## ...னியின் தீர்மானம்!

...கதை எழுதுவது, நடிகர் நடிகைகளைத் தேர்ந்தெடுப்பது ...விடக் கடினமான காரியம் ஒன்று உண்டென்றால் அது ...ாருத்தமான தலைப்பு சூட்டுவதுதான்.

...ிக் கதாநாயகர்களை விட இந்த விஷயத்தில் ரஜினி படு ...ிருக்கிறார். 'அண்ணாமலை' படத்திற்குப் பிறகு அவர் நடித்த 'வீரா', 'பாட்ஷா' என படத்தில் ரஜினி ஏற்று நடிக்கும் ...ளின் பெயராகவே அமைந்தது. இது ஏதோ இயல்பாக நடப்பதல்ல ...ர ஈடுபாடுதான் இதற்குக் காரணம்.

...ந்த மோகம் இப்போது சற்று விஸ்வரூபம் எடுத்திருக்கிறது ...மார் இயக்கத்தில் அவர் நடிக்கும் படத்திற்கு பல பெயர்கள் ...இறுதியில் ரஜினி 'முத்து' என்றே பெயரைத் தேர்வு செய்தார்.



பிரபு-குஷ்பு படம்-சின்னவாத்தியார் (வெளிவந்துவிட்டது)

## மணிரத்னம் சட்டை

மணிரத்னம் பிரபல இயக்குநர் மட்டுமல்ல தயாரிப்பாளரும்கூட. பணத்தில் புரளும் மணிரத்னம் எளிமை விரும்பி. நடைபாதைக் கடைகளில் உள்ள 'எக்ஸ்போட் ரிஜக்ட்' சட்டைகளை வாங்கி அணிவாராம். ரூபா 30 விலையில் பத்து இருபது சட்டைகளை மொத்தமாக வாங்கி வைத்துக் கொள்வார் மணிரத்னம். மணிரத்னம் 'மணி' விடயத்தில் ரொம்பப் 'பத்திரம்'

## கமலின் படம் சாதனை.

'இந்தியன்' படம் பற்றி பல்வேறு வதந்திகள் பரவினாலும், படம் வருவது உறுதி. பூஜை போட்ட அன்றே படம் விற்பனையாகிவிட்டது. இதுவரை கமலின் எந்தப்படமும் இத்தனை விலைக்குப் போனதில்லையாம். அந்தளவுக்கு தயாராக முன்னரே பலத்த எதிர்பார்ப்புக்களை உருவாக்கியுள்ளது 'இந்தியன்'.

## ...டிகையின் கடித அனுபவம்!

...' படத்தில் நடித்தவர் சுவர்ணா. அவருக்கு எக்கச்சக்கமாக ரசிகர்கள் கடிதம் ...ாம். கடித அனுபவம் ஒன்றைச் சொல்லியிருக்கிறார். கேளுங்கள்:

...பியாவில் இருந்து சமீபத்தில் எனக்கு ஒரு ரசிகர் கடிதம் எழுதியிருந்தார். நான் ...ாக இருப்பதாகவும், என்னையே அவர் திருமணம் செய்து கொள்ள முடிவு ...கவும் அதில் கூறியுள்ளார். அந்த ரசிகர் முஸ்லிம் மதத்தைச் சேர்ந்தவர். பாங்கில் 35 ...மேல் பணம் இருப்பதாகவும், அவரது நிர்வாகத்தில் ஒரு ஃபக்டரி இயங்குவதாகவும், ...றயில் 40 இலட்சத்திற்கு மேல் சொத்துக்கள் உள்ளதாகவும் குறிப்பிட்டு விட்டு, இதையெல்லாம் ...தகுந்த ஆதாரங்கள் மூலமாக நிரூபிக்கத் தயார் என்றும் கடிதத்தில் உணர்ச்சி வசப்பட்டு ...ன் கடிதத்தைப் படித்ததும் அவருக்குச் சாதகமாக ஒரு பதில் கடிதம் எழுதினால் நல்லது என்றும் ...ண்டார். அப்படி அவரை நான் திருமணம் செய்து கொள்ளச் சம்மதித்தால், உடனே அவர் எனது ...விடுவதாகவும் உறுதியளித்துள்ளார்.

...த்தைப் படித்து விட்டு எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. இப்படியும் கூட ரசிகர்கள் உண்டா? ...மாக இருக்கிறது. பாவம் அந்த ரசிகர்... ஏதோ உணர்ச்சி வேகத்தில் இப்படி ஒரு கடிதத்தை எழுதி ...ன்று எண்ணி, பதில் கடிதம் போடாமல் விட்டு விட்டேன். என்கிறார் சுவர்ணா.



பாலகிருஷ்ணா-விஜயசாந்தி படம்-ஜட்ஜ்மெண்ட்

## இனிமேல் உஷார்


'ராஜமுத்திரை' படத்தில் வினிதா நடித்த பல காட்சிகளை வெட்டி எறிந்து விட்டார்களாம். அதனால் தனது 'இமேஜ்' போய் விட்டது என்று புலம்புகிறார் வினிதா. இனிமேல் எந்த படத்தில் எவருடன் நடித்தாலும் எனக்கு முக்கியத்துவம் இருந்தால் மட்டுமே நடிப்பேன் என்கிறார் வினிதா. வினிதா இன்னொன்றும் சொல்கிறார் இது வரை அளவுக்கதிகமாக கவர்ச்சி காட்டி நடித்து விட்டேன். 'நிலா' படத்தில் மட்டும் எனது நடிப்புத் திறமையைக் காட்டி இருந்தேன். இனிமேல் நடிப்புக்கு தீனி போடும் பாத்திரங்களில் நடிக்கப் போகிறேன்" என்கிறார். முடிவு நிலைக்குமா?

## கிசு கிசு தூண்டில்

தமிழிலும் முன்னணியில் இருக்கும் இரெண்டு எழுத்து நடிகை அவர். அவருக்கு தூண்டில் போட்டிருக்கிறார் ஆந்திராவின் முன்னணி நாயகன். பிரமாண்டமான பங்களா ஒன்றும் வாங்கிக் கொடுத்திருக்கிறார். 60 ஏக்கர் நிலத்தில் பங்களா இருக்கிறதாம். மற்றுமொரு ஆந்திர நடிகரும் நடிகைக்கு குறிவைத்து அலைகிறாராம். போட்டி என்றால் போட்டிதான்.

## புலம்பல்

'ரு'வில் பெயர் ஆரம்பிக்கும் மூன்றெழுத்து நடிகை புலம்பிக்கொண்டிருக்கிறார். இந்தியில் பிரபலமான தயாரிப்பாளர் ஒருவரை நடிகை நம்பியிருந்தாராம். தயாரிப்பாளரோ காரியத்தில் மட்டுமே கண்ணாயிருந்துவிட்டு கழன்று கொண்டாராம். நினைத்து நினைத்து மனமுடைந்த நடிகை மருத்துவ மனையொன்றில் சிகிச்சை பெற்று வருகிறார்



சனி தெட்டி படம்-பாய் (இந்தி)

## எட்டாத ஏணி

'ஹீரா' நடிகைக்கு ஒரு பெரிய கவலை. எப்படித்தான் அதிரடி போஸ் கொடுத்தும் இந்தியில் பிரபலமாக முடியவில்லையாம். முன்னணி ஹீரோக்கள் சிலரை வலைவீசிப் பிடித்தும்கூட புகழ் ஏணி கைக்கெட்டவில்லையாம். பேசாமல் மீண்டும் தமிழுக்கே திரும்பிவிடலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறாராம்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# குழந்தை நிறமாக பிறக்க வேண்டுமா?



**கரட் சாப்பிடுங்கள்!**

கரட்டை விடச் சத்துக்கள் நிறைந்த காய்கறி ஒன்றுமே இல்லை என்று சொல்லக் கூடிய அளவுக்கு உயிர்ச்சத்துக்கள் நிறைந்தது. பச்சையாகவே உண்பது மிகவும் நல்லது. வயதானவர்களுக்கும், கருவுற்றவர்களுக்கும், நோயுற்றவர்களுக்கும் மிகவும் சிறந்தது.

**கருவுற்றவர்கள் சாப்பிடுவது எப்படி?**

குறைந்தது 25 கிராம் பச்சைக் கரட்டைக் கழுவி, மெல்லிய தோலைப் போக்கி பச்சையாகச் சாப்பிடவேண்டும். உணவோடு அல்லது தனியாகச் சாப்பிடலாம். ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட நேரத்தில் உண்பது உடம்புக்கு நல்லது. மலச்சிக்கல், போலி வலிகள், களைப்பு போன்றவை ஏற்படாது. பிறக்கும் குழந்தை நல்ல நிறமாகவும், வலுவோடும் பிறக்கும்.

**குழந்தைகளுக்குக் கொடுப்பது எப்படி?**

கரட்டைத் தோல் நீக்கிச் சிறு சிறு துண்டுகளாக வெட்டிப் பசும் பாலில் போட்டு அவித்து எடுத்து சிறிது தேன் கலந்து குழந்தைகளுக்குக் கொடுத்து வந்தால் குழந்தைகளின் இளைப்பு நீங்கி உடம்பு வலுப்படும். உடல் எடை கூடும். குழந்தைகளுக்கு நோய் வராமல் காக்கும்.

**பெரியவர்களுக்கு...!**

கரட்டைத் தோல் நீக்கிச் சிறு சிறு துண்டுகளாக வெட்டிக் கொள்ளவும். பின்பு பசும்பாலில் அவித்து அதனோடு முந்திரிகை வற்றலும், தேனும் சேர்த்துக் கொடுத்தால் உடம்பு வலுவாகும்.

**வயிறு தொடர்பான நோய் நீங்க...!**

கரட்டைத் தோல் நீக்கிச் சிறு சிறு துண்டுகளாக வெட்டிப் பச்சைக் கொத்தமல்லி, இஞ்சி இவைகளையும் அளவோடு சேர்த்துத் தயிரில் போட்டு ஒரு மணிநேரம் ஊற வைத்து உணவோடோ அல்லது தனியாகவோ உண்டு வந்தால், வயிறு தொடர்பான நோய்கள் நீங்கும். வறட்சி நீங்கும். முகம் அழகாகும். மூளைப் பலத்திற்கு மிகவும் நல்லது.

மழைக்காலங்களில் தயிரை விலக்கி அருந்துவது நல்லது.

**கரட்டை உண்பதால் ஏற்படும் பலன்கள்:-**

மூளைக்கு நல்லது. கண்பார்வை மிகும். முடி நீளமாக வளரும். முடி கொட்டாது. எலும்பு வலுப்படும். கண்நோய்கள் வருவதைத் தடுக்கும். தலை சுற்றாது, மயக்கம், மலச்சிக்கல் ஏற்படாது. பெண்களுக்குச் சூதகக் கட்டி ஏற்படாது.

# லேடீஸ் ஸ்பெஷல்

# உரையாடும் போது உரத்துச் சிரிக்கலாமா?



1. பேசும்போது கண்களுக்கு முக்கிய வேலையளிக்க வேண்டும். கண்களின் பளிச்சிடும் உணர்வுகளைப் போன்று உரையாடலுக்கு கவர்ச்சி சேர்ப்பது வேறு இல்லை.
2. பேசும்போது தயக்கம் காண்பிக்கக் கூடாது. தங்கு தடையற்றுச் சரளமாகப் பேசினால்அதன் மகத்துவமே தனிதான்.
3. பேச்சிலே தயக்கம் இருந்தால் மனப்பூர்வமான விஷயங்களை வெளியிடவில்லை என நமதுபேச்சினைச் செவிமடுப்பவர்கள்அவநம்பிக்கை கொள்ள நேரிடும்.
4. பேச்சின் இடையே முணுமுணுப்பு இருக்கக்கூடாது.
5. பேசும்போது உணர்ச்சிவசப்பட்டு ஆவேசக் கூச்சல் எழுப்பிவிடக் கூடாது.
6. உரையாடும் நேரம் முழுவதும் தாழ்ந்த மரியாதை தவழும் குரலிலேயே பேச வேண்டும்.
7. ஆவேசமாக விவாதம் செய்வதை உரையாடலின்போது தவிர்க்க வேண்டும்.
8. பேசும்போது கூடியவரை தங்கள் பேச்சை ஒருவர் குறைத்துக்கொண்டு மற்றவர் பேசுவதற்கு அதிக இடமளிக்க வேண்டும்.
9. நம்மோடு உரையாடுவோரின் பேச்சு சரியல்ல என்ற போதில் சகிப்புத் தன்மையைக் காண்பித்து அமைதியாக இருக்க வேண்டும்.
10. உரையாடலை முடிக்கும் போது மிகவும் சுமூகமான சூழ்நிலை உங்களுக்கும் உங்களுடன் உரையாடுவோருக்குமிடையே இருக்கும் வண்ணம் கவனித்துக் கொள்ள வேண்டும்.
11. அதிகமாகச் சத்தமிட்டுச் சிரிக்கக்கூடாது. சலங்கையொலி எழுவது போன்று மிகவும் மெல்லிய குரலில் கலகல வென சிரிப்பது பார்க்க அழகாக இருக்கும்.
12. அதிகமாக வாயைத்திறந்து பற்கள்அனைத்தும்வெளியே தெரியும் படி சிரிக்கக் கூடாது.
13. உதடுகளை இலேசாக விரித்து பற்கள் பாதியாவே தெரியுமாறு சிரிக்க வேண்டும். எப்போதும் அழகாக புன்னகை பூத்துக் காட்சி அளிப்பது கவர்ச்சியூட்டும் நல்ல வழக்கமாகும்.

# ஃபுருட் ஸலட்

**தொகுத்துத் தருவது சுகந்தினி**

**தேவையானவை:**

அப்பிள் - 4
வாழைப்பழம் - 4
பப்பாளிப்பழம்- 1
திராட்சைப்பழம்-200 கிராம்
அன்னாசி - 6 வில்லைகள்
சீனி - ஒரு கோப்பை
கறுவா -4 துண்டு

**செய்முறை:**

1. 1/2 கோப்பை சீனியில் 1/2 கோப்பை தண்ணீர் சேர்த்து பாகு தாயரிக்கவும்.
2. கறுவாத் துண்டுகளையும் பாகில் போடவும்.
3. பாகு ஒரு கம்பிப் பதம் வந்ததும் அடுப்பிலிருந்து இறக்கவும். பின்னர் பாகை ஆறவிடவும்.
4. பழவகைகளைப் பெரிய சதுர துண்டங்களாக வெட்டிக் கொள்ளவும்.
5. அன்னாசிப் பழம் தவிர்ந்த நறுக்கிய பழத்துண்டுகளை எடுத்து விடவும். பிறகு ஃபிரிட்ஜில் வைத்து ஜில்லெனப் பரிமாறவும்.

ஒரு சிறிய அன்னாசிப்பழத்தை எடுத்து. தோலைச் சீவி வில்லைகளாக நறுக்கிக் கொள்ளவும். அன்னாசிப் பழ வில்லைகளின் மேல் ஒரு சிட்டிகை உப்பைத் தடவி பத்து நிமிடம் வைக்கவும். வில்லைகளை உள்ளங்கையில் வைத்து தண்ணீரைப் பிழிந்து எடுத்து விடவும். ஒரு கோப்பை சீனியில் ஒரு கோப்பை தண்ணீர் விட்டு பாகு தயாரிக்கவும். பாகு கொதிவரும் பொழுது தயாரித்து வைத்துள்ள வில்லைகளைப் பாகில் போட்டு சுமார் 10 முதல் 15 நிமிடங்கள் வரை கொதிக்க விடவும். அதற்குப் பின்னர் இந்த வில்லைகளை ஃபுருட் ஸலட்டில் நறுக்கிப்போடவும்.

## உங்கள் கணவர் எப்படி.....

"வாயை மூடு" என்று முட்டாள் தன் மனைவியை திட்டுகிறான். "நீ அமைதியாக இருக்கும் போது எவ்வளவு அழகாக இருக்கிறாய் தெரியுமா?" என்றான் புத்திசாலி. அதுதான் புத்திசாலிக் கணவனுக்கும் முட்டாள் கணவனுக்கும் உள்ள வேறுபாடு.

## றிலாக்ஸ்....




# சமையல் ரிப்ஸ்



01. வெண்கலப் பாத்திரங்களில் புளிபோட்டுச் செய்யும் உணவுகளைச் சமைக்கவும் கூடாது. வைத்திருக்கவும் கூடாது. உணவுப் பொருள் கெட்டு விடும்.

02. வெண்கலம், பித்தளைச் சாமான்களையெல்லாம் சமைத்த பின்பு புளி அல்லது சாம்பல் போட்டே தேய்க்க வேண்டும்.

03. பித்தளைப் பாத்திரங்களை ஈயம் பூசிய பின்னரே சமையலுக்குப் பயன்படுத்த வேண்டும். ஈயம் பூசாமல் எதையுமே அதில் சமைக்கக் கூடாது.

04. செம்பு பாத்திரங்களில் காய்கறிகளை வேக வைக்கக் கூடாது. அப்படி வேக வைப்பதனால் அவற்றிலுள்ள விட்டமின் 'சி' சத்து அழிந்துவிடும்.

05. பிரஷர் குக்கர் அலுமினியத்தால் ஆனதால் சோடாமாவைக் கொண்டு கழுவக்கூடாது. சோடாமாவு அலுமினியத்தைக் கெடுக்கும்.

06. வாணலியில் காய்கறிகளை சமைத்தால், அதனை உடனடியாக வேறு பாத்திரத்திற்கு மாற்றி விட வேண்டும். அவை வாணலியிலேயே இருந்தால் கறுத்துப்போகும்.

07. சாதம் குழைவதாகத் தெரிந்தால் சிறிதளவு நல்லெண்ணையைச் சேர்த்து விடவும். சாதம் குழையாது.

08. இட்லிக்கு ஊற வைக்கும் அரிசியுடன் ஒருபிடி அவலையும் சேர்த்து ஊறவைத்து அரைத்தால் இட்லி பூப்போல இருக்கும்.

09. கேஸ் அடுப்பு, ஸ்டவ் போன்றவற்றைச் சூடாக இருக்கும் போது ஈரத் துணியினால் துடைத்துச் சுத்தம் செய்தால் பளிச்சென்றிருக்கும்.

10. வெங்காயம் நறுக்கிய கத்தியை உப்பு தேய்த்துக் கழுவினால் வெங்காய நாற்றம் இருக்காது.

## உயரத் தோற்றம் குறைய



பெண்களே உயரமாக இருக்கும் உங்களுக்கு மனக்கவலையா? உயரமாக இருக்கிறோம் என்று....!

01. அகலமான கரையும், படுக்கைக் கோடுகளும் கொண்ட சேலைகளை உடுத்தினால் மிகவும் உயரமான பெண்கள் சற்று உயரம் குறைந்தவர்களாகக் காட்சி தருவர்.

02. சேலையின் வண்ணத்துக்கு முற்றிலும் மாறுபட்ட வண்ணமுடைய கலரில் பிளவுஸ் அணிந்தாலும் உயரமான பெண்களின் தோற்றம் சற்று குறைவாகத் தோன்றும்.

03. நேர்க்கோடுகள் அமைந்த உடைவகைகளை அணிந்தாலும் உயரத்தைக் குறைத்துக் காண்பிக்கும்.

04. சிறு சிறு புள்ளிகள், சிறு அளவில் பூக்கள் அமைந்த உடையினை அணிந்தாலும் உயரத்தைக் குறைவாக காண்பிக்கும்.

## பரிசுக் கூப்பன் போட்டி

### 40 முதல் 50 வரையானோர்

41. செல்வி. ஆர்.கௌசல்யா,புசல்லாவ.
42. செல்வி. மிஸாஜுன்நிஸா,வெளிமடை.
43. திருமதி. எஸ்.ஜெயபாரதி, கந்தளாய்.
44. செல்வி. ஆர்.சௌமியா, செங்கலடி.
45. திருமதி. எம்பரீதா இஸ்மாயில், இரத்தினபுரி.
46. திருமதி. எம்.ஞானப்பிரகாசம், திருகோணமலை
47. திருமதி.பதுருன்னிஸா ஹார்தீன், கொபேய்கன.
48. செல்வி.ரஷீதாமுபாரக், பத்தரமுல்லை.
49. ரோஹினி ஆறுமுகம், பதுளை.
50. செல்வி. பி.உமா, எட்டியாந்தோட்டை

அதிஷ்டசாலிகள் 50 பேரும் தமது பரிசுகளை பெற்றுக்கொள்வது எவ்வாறு என்பது குறித்து கடிதம் மூலமாக தெரிவிக்கப்படும். மே 28 முதல் இரு வார காலத்திற்குள் கடிதம் உங்கள் கரம் சேரும்.

**பரிசுக் கூப்பன் மகளிர் மட்டும் இல 14**


## மகளிர் மட்டும் —பரிசுப் போட்டி—

**முதல் அதிஷ்டசாலிக்கு தங்கநகை**

- முரசு 90 முதல் தொடர்ந்து 25 வாரங்கள் பரிசுக்கூப்பன்கள் வெளியாகும்.
- 25 கூப்பன்களையும் பத்திரமாகச் சேகரித்துக்கொள்ளுங்கள்.
- 25 கூப்பன்களும் வெளியான பின்னர் நாம் அனுப்பச் சொல்லும்போது நீங்கள் கூப்பன்களை அனுப்பி வைக்கலாம்.
- முதல் அதிஷ்டசாலிக்கு தங்கநகை பரிசு காத்திருக்கிறது.
- 25 அதிஷ்டசாலிகளுக்கு அசத்தலான பரிசில்கள் காத்திருக்கின்றன.

பரிசில்களை வெல்ல தயாராகுங்கள்.

# கிரிக்கெட் குறள்



நல்லதொரு பட்ஸ்மனும் பௌலரும்
கப்டனும் சேர்வதாம் ரீம்.

போல் என்ப ஏனைபட் என்ப, இவ்விரண்டும்
கண்ணென்ப கிரிக்கெட் டுக்கு.

அடிப்பின் 'பவுண்டரி' அடிக்க; அஃதிலார்
அடிப்பின் அடிக்காமை நன்று.

பவுண்டரி இயலாத போது சில
சிங்கிள்சும் ஓடப் படும்.

பவுன்சரால் பட்டபுண் உள்ளாறும்; ஆறாதே
பௌலர் மேலுள்ள வெறுப்பு.

தன்னைத்தான் காக்கின் 'கிறீஸ்' காக்க
தன்னையே கொல்லும் காண் விக்கெட்.

'ஸ்பின்'னால் ஆகா தெனிலும்; மறுபடியும்
'பேஸைக்' கொணர்தல் நலன்.

எப்பந்து விட்டார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
சுருட் பந்து விட்ட மகற்கு.

நாள் தோறும் நாடி 'நெட்ஸ்' ஆடா பட்ஸ்மன்
பால்தோறும் விக்கெட் கெடும்.

வித்தியா சவிருந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# சமாதானக் கதவுகளைத் திறந்து வைத்து வெளியே நிற்கும் நிலை!

அலசுவது– இராஜதந்திரி



# மோதல் தவிர்ப்பு முறிவடைந்து ஒரு மாதம் பூர்த்தி; அரசியல் அணுகுமுறைகள் தொலைதூரத்தில்

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையிலான மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முறிவடைந்து ஒரு மாதகாலம் பூர்த்தியாகியுள்ளது.

இந்த ஒரு மாதகாலத்தில் இருதரப்பிலும் பெரும் உயிர்ப்பலிகள் ஏற்பட்டுள்ளதுடன், விரோத நிலையும் வலுவடைந்திருக்கக் காணப்படுகின்றது.

சந்திரிகா அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான 'சமரச தேன் நிலவு' கடந்த ஆண்டின் இறுதிப் பகுதியில் ஆரம்பித்திருந்தது.

எல்.ரி.ரி.ஈ இயக்கத்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும், ஜனாதிபதி சந்திரிகாவும் தமக்கிடையே நல்லெண்ணங்களை வலுப்படுத்தும் வகையில் பரஸ்பரம் கடிதப்பரிமாற்றங்களைப் பரிமாறியிருந்தனர்.

ஜனாதிபதி சந்திரிகா எல்.ரி.ரி.ஈயினருடன் நல்லெண்ண அணுகுமுறைகளை ஏற்படுத்திக் கொண்ட காலப்பகுதியில் வடபகுதியில் அவர்மீது பெரும் நம்பிக்கை வெளியிடப்பட்டிருந்தது.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவத்தின் போது கோயில் சுற்றாடலில் விற்பனையான மளிகைப் பொருட்கள் சிலவற்றுக்குக்கூட சந்திரிகாவின் பெயர் சூட்டப்பட்டிருந்தது.

ஜனாதிபதி சந்திரிகாவுக்கு எல்.ரி.ரி.ஈ தலைவர் திரு.வே.பிரபாகரன் எழுதிய முதலாவது கடித்தில்கூட தமது நல்லெண்ணத்தை வெளியிட்டிருந்ததுடன் அரசியல் அணுகுமுறைகளில் ஜனாதிபதி சந்திரிகாவிடமிருந்து நிறையவே எதிர்பார்ப்பதாகத் தெரிவித்திருந்தார். வடபகுதி மக்களின் மனிதாபிமானப்பிரச்சனைகள் தீர்க்கப்பட வேண்டும். கூடவே போர் நிறுத்தம் கொண்டு வரப்பட வேண்டும். போன்ற கோரிக்கைகள் எல்.ரி.ரிஈ தலைவரால் வலியுறுத்தப்பட்டிருந்தன.

தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும் வகையில் கடந்த சில வருடங்களாக தமது காவலில் இருந்த பொலிஸ்காரர்களையும் எல்.ரி.ரி.ஈ தலைவர் பிரபாகரன் விடுதலை செய்திருந்தார்.

ஜனாதிபதி சந்திரிகாவும் வடபகுதிக்குக் கொண்டுசெல்வதற்கு முன்னைய ஆட்சியாளர்களால் தடைசெய்யப்பட்டிருந்த பொருட்கள் பலவற்றின் மீதான தடையை நீக்கியிருந்தார். வடபகுதியின் புனரமைப்பு, புனர்நிர்மாணம் என்பது பற்றியும் அரசதரப்பினர் பிரஸ்தாபித்திருந்தனர்.

இதனையடுத்து பூர்வாங்கச் சுற்றுப் பேச்சுக்கள் சுமுகமாக இடம் பெற்றதைத் தொடர்ந்து அரசுக்கும், எல்.ரி.ரி.ஈயினருக்குமிடையே மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் கடந்த ஜனவரி மாதம் அமுலுக்கு வந்திருந்தது.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்த அமுலாக்கத்தை பெரும் பூரிப்புடனேயே ஜனாதிபதி சந்திரிகா அறிவித்திருந்தார். இந்த ஒப்பந்தம் பற்றிப் பிரஸ்தாபித்தபோது எல்.ரி.ரி.ஈ தலைவரை 'மிஸ்டர் பிரபாகரன்' என்று வாயாரக் குறிப்பிட்டதுடன், இலங்கை அரசின் தலைவரொருவருடன் திரு.பிரபாகரன் செய்து கொண்ட முதலாவது ஒப்பந்தமே மோதல்தவிர்ப்பு ஒப்பந்தமெனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தையடுத்து நாடுமுழுவதிலும் அனைத்து மக்களுமே நிம்மதியுடன் இருக்கக் காண்பட்டனர்.

குறிப்பாக வடபகுதி மக்கள் தாம் குண்டு வீச்சுக்கள், செல் வீச்சுக்களின் அச்சுறுத்தல்களின்றி நிம்மதியாகப் படுத்துறங்குவதாகவும், வடபகுதி ஆகாயப் பிராந்தியத்தில் விமானங்களின் அட்டகாசங்கள் எதுவும் இல்லை என்று கூறிப்பெருமூச்சு விட்டிருந்தனர்.

ஆனால் தற்போது அனைத்துமே தலை கீழாக மாறியுள்ளதுடன் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் ஒடிந்து போயுள்ளதுடன் வடக்குக் கிழக்கில் மீண்டும் கெடுபிடி யுத்தம் ஆரம்பமாகியுள்ளது.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தத்தை எல்.ரி.ரி.ஈயினர் திருமலைக் கடலில் இரு கடற்படைப் படகுகளை மூழ்கடித்த நிலையில் முறியடித்திருந்தனர். இதனையடுத்து இரு விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டும், முகாம்கள் தகர்க்கப்பட்டநிலையிலும் அரசதரப்பில் சுமார் 300 படையினரும் எல்.ரி.ரி.ஈயினரின் தரப்பில் சுமார் 200 பேரும் பலியாகியுள்ளதாக பாதுகாப்புப்படை வட்டாரத்தினால் வெளியிடப்பட்டுள்ள 'ஸ்கோர் விபரம்' தெரிவிக்கின்றது.

'ஈழப்போர்-3' என்ற ரீதியில் கடந்தமாதம் 19ந் திகதி ஆரம்பமான இன்றைய யுத்தம் அழைக்கப்படுகின்றது.

இந்நிலையில் 'ஈழப்போர்-1', 'ஈழப்போர்-2 ஆகியன பற்றியும் தற்போதைய தருணத்தில் சிந்திக்க வேண்டியதாக இருக்கின்றது.

எல்.ரி.ரி.ஈயினர் வடக்கே தமது நிலையை ஸ்திரப்படுத்தி ஆயுதப் படையினரின் நடமாட்டத்துக்குச் சவால்விட்ட நிலையில் 1987ம் ஆண்டு ஆயுதப்படையினர் 'ஒபரேசன் லிபரேசன்' (Operation Liberation) என்ற ரீதியில் வடமாராட்சிப் பிரதேசத்தில் பாரியளவிலான இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்திருந்தனர்.

இலங்கையின் இன்றைய இராணுவத்தளபதி உட்பட இலங்கை ஆயுதப்படைகளின் முன்னணிப் புள்ளிகள் பலரும் இந்த 'ஒபரேஷன் லிபரேஷன்' நடவடிக்கையில் நேரடியாகவே குதித்திருந்தனர்.

இராணுவ சாதனங்கள் பலவற்றுடனும், விமானங்கள், ஹெலிகொப்டர்கள் சகிதம் முப்படைகளையும் சேர்ந்த முப்பதினாயிரம் வரையிலான படையினர் யுத்தத்தில் குதித்திருந்தனர்.

ஒரு சில வாரங்களே வடமாராட்சி யுத்தம் நீடித்தது. இதனையடுத்து இலங்கை-இந்திய ஒப்பந்தம் அமுலுக்கு வந்த நிலையில் வடக்கு-கிழக்கில் மீண்டும் அமைதி ஏற்பட்டது.

'அமைதிப் படை' என்று கூறிய நிலையில் இந்தியத் துருப்பினர் வடக்கு-கிழக்குப் பகுதிக்கு வந்தனர். இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை அமுலாக்கும் நடவடிக்கைகளில் அவர்கள் படிப்படியாக இறங்க ஆரம்பித்தனர்.

இருந்தபோதிலும் இலங்கை-இந்திய ஒப்பந்தம் தொடர்பாக எல்.ரி.ரி.ஈயினர் கொண்டிருந்த அதிருப்தி, மீண்டும் ஒரு யுத்தத்தை ஆரம்பித்தது. இந்த யுத்தம் உலகின் நான்காவது பெரும் இராணுவம் என்று வர்ணிக்கப்படும் இந்தியப் படையினருக்கெதிராக முழு அளவில் முடுக்கி விடப்பட்டிருந்தது.

பெருமளவிலான ஆளணிகளைக் கொண்டிருந்த இந்தியப் படையினர் தமது இராணுவ நடவடிக்கையில் பல்வேறு பின்னடைவுகளையும் கண்டிருந்தனர்.

இறுதியாக இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் காரணகர்த்தாவும், இந்தியப்படையினருக்கு அனுசரணையாக இருந்தவருமான முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்த்தனா ஜனாதிபதிப் பதவியிலிருந்து விலகியமை, இதனையடுத்து இந்திய அதிருப்தியாளராக இருந்த மறைந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா பதவிக்கு வந்தமை என்பன இந்தியப் படையினரை இலங்கையிருந்தும் வெளியேற்றுவதில் எல்.ரி.ரி.ஈயினருக்கு குறிப்பிடத்தக்க வெற்றியைக் கொடுத்திருந்தன.

இந்தியப் படையினரின் வெளியேற்றம் ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸா அரசுக்கும் எல்.ரி.ரி.ஈயினருக்குமிடையே உறவுகளை ஏற்படுத்தியிருந்தது.

ஆனால் இந்த உறவுகூட நெடுநாள் நீடித்திருக்கவில்லை. எல்.ரி.ரி.ஈயினருக்கும் இலங்கை அரச படையினருக்கும்மிடையே மீண்டும் மோதல்கள் வெடித்தன.

இம்மோதலே 'ஈழப்போர்-2' என்று வழங்கப்படலாயிற்று.

கடந்த ஐந்து வருடகாலத்துக்கும் மேலாக இடம்பெற்ற 'ஈழப்போர்-2' வடக்கு-கிழக்கில் பெருமளவிலான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

இத்தாக்கங்களிலிருந்து விடுபட வடக்கு-கிழக்கு மக்கள் மட்டுமல்ல முழு நாடுமே பேரவா கொண்டிருந்தது. இந்த அவாவின் வெளிப்பாடாகவே கடந்த ஆண்டின் இறுதிப் பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி தோற்கடிக்கப்பட்ட நிலையில் ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான பொது ஜன ஐக்கிய முன்னணி பெருவெற்றியுடன் ஆட்சிக் கட்டிலேறியது.

வடக்கு-கிழக்குப் பிரச்னைக்குத் தீர்வு-நாட்டில் பூரண சமாதானம் என்று தெரிவித்து தனது ஆட்சியை ஆரம்பித்த சந்திரிகா அரசு, ஏப்ரல் 19ம் திகதிக்குப் பின்னர் 'ஈழப்போர்-3'க்கு முகங்கொடுத்த நிலையில் காணப்படுகின்றது.

'ஈழப்போர்-1' என்ற வடமாராட்சி யுத்தம் முதற்கொண்டு இன்றுவரை இடம்பெறும் மோதல்களில் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் பல்வேறு பாதிப்புக்களும் பயங்கரமானதாக இருக்கின்றதே தவிர எவ்வகையிலும் எல்.ரி.ரி.ஈயினர் பலவீனமடைந்து விடவோ அல்லது அரசபடைகள் எல்.ரி.ரி.ஈ தீவிரவாதிகளை முற்று முழுதாக முறியடித்துவிடவோ இல்லை.

மாறாக எல்.ரி.ரி.ஈயினரின் பலம் படிப்படியாக அதிகரித்து அவர்கள் இன்று விமானங்களையும் சுட்டுவீழ்த்தி, கப்பல்களையும் சாதுரியமாகத் தகர்த்து, படைமுகாம்களையும் நிர்மூலமாக்குவதில் சாமர்த்தியம் பெற்றிருப்தனையே அறியமுடிகின்றது.

மறுபுறத்தே இலங்கை ஆயுதப்படைகளின் பலமும் பன்மடங்கு அதிகரித்து, எல்.ரி.ரி.ஈயினருடன் வெறுமனே யுத்தத்தில் மட்டுமல்ல, ஒரு முழு அளவிலான ஆயுதப் போட்டியிலும் இலங்கையின் ஆட்சியாளர்கள் குதித்திருப்பதையே காணமுடிகின்றது.

## ஆட்சேர்ப்பில் ஆர்வங்காட்டும் ஆயுதப் படையினர்

கடந்த மாதம் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முறிவடைந்த நிலையில் அரசாங்கமும், எல்.ரி.ரி.ஈயினரும் தம்மிடையேயான அரசியல் அணுகுமுறைகளை வெகுதொலைதூரத்தில் வைத்திருக்கக் காணப்படுகின்றனர்.

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முறிவடைந்த நிலையில் நாடு மீண்டும் யுத்த காலச் சூழ்நிலைக்குட்பட்டிருக்கக் காணப்படுகின்றது.

தலைநகரிலும், நாட்டின் வேறுபல பாகங்களிலும் இராணுவத்திற்கு ஆட்சேர்க்கும் படலம் மீண்டும் மும்முரமடைந்துள்ளது.

புத்தபிக்குமார்கள் கூட இராணுவத்தில் சேருவதற்கான நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமளித்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

இராணுவத்தில் ஆட்சேர்ப்பு நடவடிக்கைக்காக அரசு அறிவித்திருப்பதும், புத்தபிக்குகள் உட்பட பெருந்தொகையானவர்கள் நேர்முகப் பரீட்சை மையங்களை நாடிச் செல்வதும், நாட்டில் போர்க் குணமென்பது முற்றிலுமாகக் குன்றி விடவில்லை என்பதனையே புலப்படுத்துகின்றது.

போர் என்ற கொடுமை இந்நாட்டிலிருந்தும் முற்றிலுமாக நீங்க வேண்டுமென்றே நாட்டு மக்கள் சந்திரிகா அரசை பதவியிலமர்த்தியிருந்தார்கள். ஆனால் அவர்களது எதிர்பார்ப்பு காற்றில் கலைந்து போயிருக்கக் காணப்படுகின்றது.

'ஈழப்போர்-3' என்ற இன்றைய யுத்தம் மூண்டது முதற்கொண்டு இன்றுவரை சமாதானக்கதவுகள் திறந்திருப்பதாகவும், மீண்டும் பேச்சுக்குத் தயாராக இருப்பதாகவும் வடக்கே திரு.பிரபாகரனும், தெற்கே ஜனாதிபதி சந்திரிகாவும் கூறிவருகின்றனர்.

ஆனால் சமாதானக் கதவுகள் திறந்து வைத்து இருசாராரும் வெளியே நிற்கின்றனரே தவிர, திறந்த கதவுகளினூடாக உள்ளே சென்று சமாதானத்தைத் தேட எவ்வகையிலும் முன்வரவில்லை. இதுவே இன்று சாபக்கேடாகவும் இருக்கின்றது.



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


ஆபிரகாம் லிங்கன்

அமெரிக்காவின் ஜனாதிபதிகளில் அழியாப் புகழ் பெற்றவர் ஆபிரகாம் லிங்கன். உறுதி மிக்க தலைவர் லிங்கனின் இறுதி நாள் இது!

# இன்றுதான இறுதி நாள்!



**ஜோ**ன் பூத் அலுத்துக் கொண்டான்.

"லிங்கன் தப்பித்துக் கொண்டே இருக்கிறாரே ஹொரால்ட்."

ஹொரால்ட் என்று அழைக்கப்பட்டவன் 'சிகரெட்' புகையை தனது உதட்டால் வழிய விட்டுக் கொண்டிருந்தான்.

"யோசிக்காதே ஜோன். நாளைதான் லிங்கனின் இறுதி நாள்!"

"முடிக்கலாம் என்கிறாய்?"

"யெஸ்! நிச்சயமாக!"

கட்டை விரலை உயர்த்திக் காட்டினான் ஹொரால்ட். ஜோன் தன்னிடமிருந்த கைத்துப்பாக்கியைத் தொட்டுப் பார்த்துக்கொண்டான்,

"நாளை காலையில் நாம் சந்திக்கலாம் ஹொரால்ட். இப்போது ஒரு வேலை இருக்கிறது. வரட்டுமா? சிகரெட் இருந்தால் ஒன்று கொடு!"

சிகரெட் பாக்கெட்டை நீட்டிக் கொண்டு ஹொரால்ட்,

"அப்படி என்ன உனக்கு அவசர வேலை ஜோன்?"

பதில் சொல்லவில்லை, கண்ணடித்தான். ஹொரால்ட் புரிந்து கொண்டான். ஜோன் விடை பெற்றான்.

□□

**அ**வள் ஜோன் செய்த தொல்லை தாங்காமல் சிணுங்கினாள்.

"ஜோன் நீ நடிப்பில் மட்டுமல்ல பிடிப்பிலும் வித்தை காட்டுகிறாய். விடு, வலிக்கிறது எனக்கு."

ஜோன் நாடகங்களில் கொடி கட்டிப் பறந்த நடிகன். ஏராளமான ரசிகர்கள். அதில் பல தாராளமான ரசிகைகளும் அடக்கம்.

ஜோனின் பிடிக்குள் இப்போது அடங்கிச் சிணுங்கிக் கொண்டிருந்தவளும் அவனுடைய ரசிகைதான்.

ஜோன் அவளின் ஆடைகளை ஒவ்வொன்றாய் விடுவித்து, ஓரம் போய் ஓய்வுபெறச் செய்தான். அவளும் அவனை ஆடைகளில் இருந்து மீட்டெடுத்தாள்.

மூழ்கிய பின் ஜோன் எழுந்து ஒரு சிகரெட் பற்ற வைத்துக் கொண்டான்.

"இன்று நீ சரியாகவே இல்லை ஜோன். ஏதாவது யோசனையா?"

"அப்படி ஒன்றுமில்லை"


"பொய் சொல்கிறாய்! வழக்கமான உற்சாகம் இல்லை. சுவாரசியமே இல்லாமல் ரீ குடிப்பது மாதிரி..... என்னை நீ... நோ.. ஏதோ இருக்கிறது உன் மனதில்...?"

ஜோன் மௌனமாக சிகரெட் புகைத்துக் கொண்டிருந்தான்.

"சொல்ல மாட்டாயா?"

"மாட்டேன்!"

ஒரே சொல்லாய் வந்த பதில் அவளை தாக்கியிருக்க வேண்டும். எழுந்து ஆடைகளுக்குள் புகுந்து, அவனுக்கு சொல்லிக் கொள்ளாமலேயே வெளியேறினாள். போயே விட்டாள்.



தருவது ரசிகன்

□□□

**ஹொரா**ரால்ட்டும், ஜோனும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

இருவரிடமும் துப்பாக்கிகள் தயாராக இருந்தன.

தெருவின் வளைவில் அவர்கள் நின்று கொண்டிருந்தனர்.

ஆபிரகாம் லிங்கனின் கார் அந்த தெரு வழியாகத்தான் வரும் என்று தகவல் கிடைத்திருந்தது.

தெருவின் வளைவில் காரின் வேகம் குறையும். அதுதான் தருணம்! இருவரும் காத்திருந்தனர்.

இருவரிடமும் இரை தே டும் பதட்டம்!

நேரம் போய்க்கொண்டே இருந்தது. லிங்கனின் கார் மட்டும் வரவேயில்லை.

ஜனாதிபதியின் சுற்றுப் பயணப் பாதை மாற்றப்பட்டு விட்டது.

விசயமறிந்த இருவருக்கும் முகங்கள் வெளிறிப்போயின. திரும்பிவிட்டார்கள்.

1865ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 14ம் திகதி.

அமெரிக்காவின் தலைநகர் வொஷிங்டனில் உள்ள 'போர்ட்' நாடக அரங்கம் பரபரத்துக் கொண்டிருந்தது.

அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம்லிங்கன் நாடகம் ஒன்றைக் காண வரப் போகிறார்

'அமெரிக்கன் கசின்' என்பது தான் நாடகத்தின் பெயர்.

லிங்கனுக்கு விரோதிகள் யார் இருக்கப் போகிறார்கள்? அதனால் பொலிஸ் பாதுகாப்பு அதிகம் இருக்கவில்லை.

ஆபிரகாம் லிங்கன் நாடக அரங்கில் நுழைந்தார். பணிவாக வரவேற்று அவருக்காக ஒழுங்கு செய்யப்பட்ட 'பொக்ஸ்' அறைக்குள் அமர வைத்தார்கள்.

நாடகம் ஆரம்பித்து விட்டது. லிங்கன் ரசித்துப் பார்க்கத் தொடங்கினார்.

அந்த நேரத்தில்தான் ஜோன் அரங்கிற்குள் நுழைந்தான். வாயில் சுவிங்கம் மென்றபடி வந்தவனை யாரும் தடுக்கவில்லை.

நாடக அரங்கிற்கு ஜோன் பரிச்சயமானவன் என்பதால் யாருமே அவனைச் சந்தேகிக்கவில்லை.

ஜோன் நேராக லிங்கன் இருந்து நாடகம் ரசித்துக் கொண்டிருந்த அறைக்குச் சென்றான்.

லிங்கனின் பின்புறம் இருந்த ஆசனத்தில் அமர்ந்தான். லிங்கன் அவனைக் கவனிக்கவில்லை.

'எப்படிச் சுட்டால் உடனே உயிர் பிரியும்' என்று பின்னாலிருந்து யோசிப்பவனை உணராமல் லிங்கன் நாடகத்தில் மூழ்கியிருந்தார்.

திடீரென்று எழுந்தான் ஜோன். அவன் கையிலே துப்பாக்கி. பாய்ந்து சென்று லிங்கனின் இடது காதருகே துப்பாக்கியால் அழுத்தினான்.

லிங்கன் அப்போதுதான் ஆபத்தை உணர்ந்தார்.

அதற்கிடையே ஜோன் துப்பாக்கி விசையை அழுத்தினான்.

டுமீல்!

அமெரிக்க மக்களின் ஜனாதிபதி கத்தாமல், கதறாமல் அப்படியே கதிரையில் சரிந்து உயிரை விட்டார்.



இருக்கைகளைத் தாண்டிக் குதித்து ஓடி மேடையில் ஏறிய ஜோன்,

"பழிக்குப் பழி வாங்கிவிட்டோம்"

என்று கத்தினான். நாடகம் பார்க்க வந்தவர்கள் நாற்புறமும் சிதறி ஓடினார்கள்.

நாடகக் குழுவில் பலர் ஜோனின் ஆட்கள். சதியில் பங்காளிகள். அதனால் ஜோன் எளிதாகத் தப்பிச் சென்றான்.

ஜோனும், ஹொரால்ட்டும் வெர்ஜீனியா மாகாணத்திற்கு தப்பிச் சென்றனர்.

ஒரு புகையிலைத் தொழிற்சாலையில் மறைந்திருந்தனர்.

ஆபிரகாம் லிங்கன் கொலையாளிகளை பிடிக்க ஒரு தனிப்படை அமைக்கப்பட்டிருந்தது.

அந்தப் படைக்கு எப்படியோ தகவல் எட்டியது.

அந்த தனிப்படை புகையிலைத் தொழிற்சாலையைச் சுற்றி வளைத்தது.

"சரண் அடைந்துவிடுங்கள்.

அதுதான் நல்லது"

கொமாண்டர் ஒலிபெருக்கியில் அறிவித்தார்.

"கொஞ்சம் பொறுங்கள், கலந்து பேசிமுடிவை அறிவிக்கிறோம்" என்றான் ஜோன். தனிப்படை காத்திருந்தது.

திடீரென்று புகையிலைத் தொழிற்சாலையில் ஜோனும், ஹொரால்ட்டும் இருந்த கூடாரம் தீப்பிடித்தது. துப்பாக்கிச் சத்தங்களும் கேட்டன.

தனிப்படை உள்ளே புகுந்தது. துப்பாக்கியால் சுடப்பட்டு கிடந்த ஜோனிடம் மட்டும் உயிர் இருந்தது.

அவனைத் தூக்கி வெளியே கொண்டு வந்த போது அவன் வாய் திறந்து முணு முணுத்தான்;

"என் தாயிடம் சொல்லுங்கள் நாட்டுக்காக நான் உயிரை விடுகிறேன்".

சொல்லிவிட்டு ஜோன் செத்துப் போனான்.

ஆபிரகாம் லிங்கன் கொலை வழக்கு நடந்தது. ஜோனுக்கு உடந்தையாக இருந்த பலர் தண்டிக்கப்பட்டனர்.

ஆபிரகாம் லிங்கனை ஜோன் எதற்காக, எவரது தூண்டுதலில் கொலை செய்தான் என்பதற்கு திட்டவட்டமான விடை மட்டும் இதுவரை கிடைக்கவேயில்லை.

அமெரிக்காவின் வடக்கு மாகாண, தெற்கு மாகாண மோதல் காரணமாக லிங்கன் கொல்லப்பட்டிருக்கலாம் என்பது பொதுவான ஊகம்.

ஜோன் தெற்கு மாகாணத்தைச் சேர்ந்தவன்.

□□□

## உலகை உலுக்கிய கொலை

# டேக் இட் ஈஸி முனியா

## நறுக்–நறுக் செய்தி


முனியன்

அமெரிக்காவில் பாபிட் என்பவர் தன் மனைவியிடம் வலுக்கட்டாயமாக உறவு கொள்ள முயன்றார். ஆத்திரமடைந்த அவரது மனைவி லூர்னா–பாபிட்டின் மர்ம உறுப்பை கத்தியால் அறுத்து வீசி விட்டாள்.

அறுத்து வீசி எறியப்பட்ட மர்ம உறுப்பு அறுவைச் சிகிச்சை செய்து பொருத்தப்பட்டது.

இந்த சம்பவத்தை தொடர்ந்து பாபிட் தன்மனைவி மீது வழக்கு தொடர்ந்ததுடன் விவாகரத்தும் கேட்டார். இந்த விசித்திரமான வழக்கில் பாபிட்டுக்கு விவகாரத்துக் கிடைத்தது.

அதே நேரத்தில் அவரது மனைவி குற்றவாளி அல்ல என்று கூறி விடுதலை செய்யப்பட்டார். இந்த தீர்ப்பு அமெரிக்காவையே கலக்கியது.

இச்செய்தியை 'முரசு' முன்னர் வெளியிட்டிருந்தது. தற்போது இச் சம்பவம் திரைப்படமாகவும் அமெரிக்காவில் தயாராகியுள்ளது.

இதே போன்ற ஒரு சம்பவம் தமிழ்நாட்டிலும் நடந்து.

பெரியார் மாவட்டம் சத்திய மங்கலத்தை அடுத்துள்ள குமார பாளையத்தை சேர்ந்தவர் முனியன் (வயது 45). விவசாயியான இவர் அங்கு கறிக்கடையும் வைத்து நடத்தி வந்தார்.

இவரது முதல் மனைவி நாகம்மாள் (35). முனியன் தனது மனைவியின் தங்கை பழனியம்மாள் (வயது 30) மீது காதல் கணைகளை வீசினார்.

நாளடைவில் அவர்கள் இடையே கள்ளத் தொடர்பு ஏற்பட்டது. இருவரும் அடிக்கடி உறவு கொள்வதை அறிந்த நாகம்மாள் தனது தங்கை பழனி அம்மாளை முனியனுக்கு திருமணம் செய்து வைத்தாள். அன்றைய தினம் முனியன் நன்றாக சாராயம் குடித்து விட்டு வீட்டுக்கு வந்தான்.

போதை ஏறியதும் முனியன் பழனியம்மாளிடம் வலுக்கட்டாயமாக உறவு கொள்ள முயன்றான்.

முனியன் தன்னிடம் வலுக்கட்டாயமாக உறவு வைக்க முயற்சிக்கிறாரே என்று ஆத்திரமடைந்த பழனியம்மாள் ஒரு பிளேடை எடுத்து முனியனின் மர்ம உறுப்பை அறுத்து வீசிவிட்டு ஓடிவிட்டாள்.

இதற்கிடையில் வெளியே சென்று இருந்த நாகம்மாள் வீட்டுக்கு திரும்பினாள்.

அப்போது மர்ம உறுப்பு அறுக்கப்பட்ட நிலையில் முனியன் ரத்த வெள்ளத்தில் மயங்கிக் கிடப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தாள்.

முனியனின் அறுத்தெடுக்கப்பட்ட மர்ம உறுப்பைக் காணவில்லை.

பக்கத்து வீட்டுக்காரர்களின் உதவியுடன் முனியனை நாகம்மாள் சத்தியமங்கலம் ஆஸ்பத்திரியில் சேர்த்தாள்.

முனியனின் மர்ம உறுப்பு கிடைக்காததால் ஒன்றும் செய்ய முடியாது என்று கை விரித்த டாக்டர்கள், கோவை அரசு ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லும்படி கூறினார்கள்.

இதைத் தொடர்ந்து முனியன் கோவை அரசு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். அவரது மர்ம உறுப்பு அறுக்கப்பட்ட இடத்தில் 'ரப்பர் டியூப்' பொருத்தப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது.

முனியனை காப்பாற்றுவதற்காக டெல்லியில் இருந்து சில டாக்டர்கள் கோவை வந்து சிகிச்சை செய்தனர்.

பழனியம்மாள் பொலிசாரால் கைது செய்யப்படாள் பொலிசார் எவ்வளவோ கேட்டும் அவள் தன் கணவனின் மர்ம உறுப்பை வீசிய இடத்தைக் கூற மறுத்துவிட்டாள்.

அறிந்து கொள்ளுங்கள்–ஆரோக்கியம் பெறுங்கள்–ஆனந்தமாய் வாழுங்கள்

## மருத்துவ விந்தைகள்

### குளிர் கண்ணாடி



வெயில் காலத்தில் கண்கள் விரைவாக சோர்வடைந்து விடுகின்றன. எனவே, அதிலிருந்து மீள குளிர் கண்ணாடிகளை அணியலாம்.

கடைகளில் விற்பனையாகும் குளிர் கண்ணாடிகளை உங்கள் விருப்பப்படி வாங்கி அணிந்து விடாதீர்கள்.

கண் டாக்டரிடம் ஆலோசித்து உங்களுக்கேற்ற குளிர் கண்ணாடிகளை அணியுங்கள். அதுதான் உங்கள் கண்களுக்கு நல்லது.

### நாக்கை கவனியுங்கள்



சின்ன பிள்ளைகளுக்கு நாக்கில் புண் ஏற்படுவது என்பது இப்போதெல்லாம் சர்வ சாதாரணமாகி விட்டது. பள்ளி செல்லும் குழந்தைகளில் 100க்கு 90 குழந்தைகளுக்கு அடிக்கடி நாக்கில் புண் ஏற்படுவதாக கணக்கெடுப்புகள் சொல்கின்றன.

ஆனால் நாக்குப்புண் விஷயத்தில் நிறைய பெற்றோர்கள் ஏனோ...தானோ என்றுதான் இருக்கின்றனர். 4 நாளில் ஆறி விடும் என்று அப்படியே விட்டு விடுவார்கள். இது குழந்தைகளின் உடல் நலத்திற்கு ஆபத்தானதாகும்.

நாக்குப் புண்ணுக்கு சிகிச்சை அளிக்காவிட்டால் அது குழந்தைகளுக்கு இருதய நோய்களை ஏற்படுத்தி விடுமாம். நாக்குப்புண் நீண்ட நாள் இருக்கும் பட்சத்தில் அது குழந்தையின் கிட்னியையும், பழுதாக்கி விடும் என்று டாக்டர்கள் எச்சரிக்கின்றனர்.

குழந்தைகளுக்கு காய்ச்சல், சளி போன்ற உடல்நலக் கோளாறுகள் எற்படும் போது நாக்கில் புண்கள் ஏற்படுவதுண்டு. சில குழந்தைகளுக்கு "ஸ்ட்ரெப்டோகாகஸ்" எனும் பாக்டீரியா காரணமாகவும் நாக்குப்புண் வருவதுண்டு.

ஒரு குழந்தைக்கு நாக்கில் புண் ஏற்பட்டுள்ளது என்று தெரிந்தால் அது குணமாகும் வரை அந்த குழந்தையின் பக்கத்தில் மற்ற குழந்தைகளை அனுமதிக்கக் கூடாது. ஏனெனில் இது ஒரு குழந்தையிடமிருந்து இன்னொரு குழந்தைக்கு தாவும் தன்மை கொண்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புதிய தொடர்



## திக் - திக் - கிளு - கிளு - சஸ்பென்ஸ்

# -ஒரு- தேவி என்னைத் தேடுகிறாள்

### திரில் கதை மன்னன் -ராஜேந்திரகுமார்

(தமிழக எழுத்தாளர்)

என்னைச் சந்தியுங்கள்.

என் முழுப் பெயரைச் சொன்னால் தூங்கிப்போய் விடுவீர்கள். அதனால் நண்பர்கள் கூப்பிடும் கிங்ஸ்லி என்கிற பேரையே சிபாரிசு செய்கிறேன்.

என்னை நீங்கள் அப்படியே கூப்பிடலாம். மனோதத்துவ நிபுணர்.

என்னைப் பார்க்கிறவர்களுக்கெல்லாம் வியப்புவரும். "இத்தனை சின்ன வயதில் டாக்டராகி, இருக்கிற ஆங்கில எழுத்துக்களையெல்லாம் பட்டமாக்கி வாலாக்கிக் கொண்டு என்ன இது?" என்பார்கள்.

"நாற்பதைத் தொடப்போகிறேன்" என்றால் நம்பமாட்டார்கள்.

"டோன்ட் பீ சில்லி! யூ மஸ்ட் பி ட்வெண்ட்டி ஃபைவ்" என்பார்கள். நானும் அதிகம் வாக்குவாதம் செய்யமாட்டேன்.

என் தோற்றம் அப்படி.

என் ஸ்டெனோ என்னைவிட இளமையாகத் தெரிவாள்-மெரிலீன். (அந்த மெரிலீன் மன்றோ செத்த அதே நாளில் இவளும் பிரசவம் ஆனாளாம். அதனால் அந்தப் பெயர் மெரிலீன்) வயதை நம்பமாட்டீர்கள்.

சகஜமான பெண்.

"பாய்! இன்றைக்கு சோளாவில் தந்தூரி சிக்கன் சாப்பிடலாமா? ஃபிஷ் ப்ரை மஸ்ட்" என்பாள்.

பத்து மணிக்கு ஆபீஸில் நுழையும் போதே,

"இன்னைக்கு வீட்டில் டிபன் பிரமாதமாய் இருந்ததா, ஒரு பிடி பிடிச்சிட்டேன்" என்று கொண்டே வருவாள் . மணி பதினொன்றைத்தொடு முன்-

"பாய் சான்ட் விச்சும் காபியும் ஆடர் பண்ணவா?" என்பாள்.

சரியான தின்னி பண்டாரம். ஆனால்-

என்ன தின்றாலும் பெருக்காத உடம்பு. திண்ணென்று அப்படியொரு கவர்ச்சி. உடம்பை ஒட்டின மினி ஸ்கர்ட்டின் இடுப்புப் பகுதியை வெளிச்சம் போட்டு காட்டவென்றே ஓவல் ஷேப்பில் வெட்டிவிட்டிருப்பாள்.

பளபளப்பாகத் தெரியும் அந்த இடுப்பு வளைவுகளுக்காகவே ஆயிரம் ரூபாய் இங்கிரிமெண்ட் தரத் தயார். (சொல்லி விடாதீர்கள் அவளிடம்)

"இடுப்பில் என்ன மெரிலீன், சிகப்பாககன்றிப்போய்தெரிகிறது?"

"நேற்று மனநோய் விடுதிக்குப் போனோமில்லையா. அப்ப ஒரு பைத்தியம் கிள்ளிவிட்டது" என்றாள்.

"எந்தப் பைத்தியம்?" என்று நான் கேட்கவில்லை.எனக்கே தெரியும் நான் தான் அது.

"நீ ஏன் கல்யாணமே பண்ணிக்கலே மேரி?"

"எனக்குக் குழந்தை ஆசையில்லை. கல்யாணமானால் வருகிறவன் சும்மா இருக்க மாட்டானே. அதனால் தான்" கையை ஆட்டினாள் . "நோ மேர்யேஜ்."

"எனக்குக் குழந்தை ஆசை அதிகம். அதனால் உன்னைக் கல்யாணம் செய்து கொள்ளும் ஆசை இல்லை. ஆனால்......" கண் அடிப்பேன் "அந்த ஆசை மட்டும் உண்டு."

"ச்சீய்" என்றாலும் சொல்லுவாள். "இருங்க பாய், ஒரு நாள் இல்லேன்னா ஒரு நாள் உங்களைக் கற்பழிக்கப் போறேன்"'

போடி கிழவி"

போன் ஒலித்ததும்-

அடிக்க வரும் அவள் கைகளைத் தடுத்துவிட்டு போனை எடுத்தேன்.

"ஹலோ!" என்ற அந்தப் பெண்ணின் குரலில் குயில் இருந்தது.

"எஸ் கிங்ஸ்லி ஹியர்"

"சைக்கியாட்ரிஸ்ட்"

"யா"

"என் பேர் தேவி"

"சொல்லுங்கள். என்ன செய்யட்டும் உங்களுக்கு?"

"உதவியில்லை. சின்ன கன்சல்டேஷன்"

"காதலன்களில் யாரைத் தேர்ந்தெடுப்பது என்பதில் குழப்பமா? நெவர் மைண்ட். பிரச்சனையை என்னிடம் விடுங்கள். அவர்களில் யோக்கியமான ஆளை நானே தேர்ந்தெடுத்து தருகிறேன்."

"அதெல்லாமில்லை. ஒரு வேறு தினுசான பிரச்சனை. நூறு வயதுப் பிரச்சனை"

"புரியவில்லை. பிரச்சனைக்குமா வயது? அதுவும் நூறு வயதுதொண்டு கிழமான பிரச்சனையா??"

"ஆமாம்"

"எனக்கே ஒரு சுவாரஸ்யம் வந்து விட்டது. சொல்லுங்கள்"

"போனிலேயேவா?"

"இடத்தைச் சொல்லுங்கள் நானே வாரேன்"

"வேண்டாம். இங்கே என் வீட்டில் பிரைவசி இருக்காது. நானே வருகிறேன் உங்களைத் தேடி"

போனை வைத்துவிட்டு முறைத்துக் கொண்டிருக்கும் மெரிலீனைப் பார்த்துச் சொன்னேன்-

"ஒரு தேவி வருகிறாள் என்னைத் தேடி!"

எரிச்சலாக நிமிர்ந்தாள். குளியலறைக்குப் போய் ஒப்பனையை ஒற்றிக் கொண்டு வந்தாள்.

"வருகிறவளைவிட அழகி என்று காட்டிக்க அலங்காரம் நடக்கிறதாக்கும்" என்ற என்னைத் திரும்பிப் பார்த்து முறைத்து-

கைப்பையை எடுத்துக் கொண்டு கிளம்பினாள்.

"ஏய்.....ய். எங்கே போறே?"

"தேவியோ தேவ தூதனோ உன்னைத் தேடி வருகிறப்ப நான் எதுக்கு நடுவில? நான் போறேன்"

எழுந்து போய் இழுத்துவந்து அமர்த்த, அவள் துள்ளிஎழ, நான் மீண்டும் மீண்டும் அழுத்தும் போதுதான்-

அவள் கதவைத் திறந்து வந்தாள். "ஓ ஸாரி உங்கள் காதல் விளையாட்டில் குறுக்கிட்டதற்கு வருந்துகிறேன்"

"ஓ! அதெல்லாம் ஒன்றுமில்லை. இது எங்களுக்குள் சகஜம்."

"ஐயாம் தேவி." என்றாள்.

நான் சகஜமாகக் கைகுலுக்கிவிட்டு மெர்லீனைப் பார்க்க-

அவள் வேறு எங்கேயோ பார்த்தாள் - (கோபமா)

"என் பிரைவேட் செகரெட்டரி. மிஸ் மெர்லீன் மன்றோ"

"பார்வைக்கு தமிழ்ப் பெண் மாதிரி தெரிகிறாள்!"

"தமிழச்சிதான். அந்த சினிமா நடிகைந்..... " என்று அரம்பித்து-

அந்த மெரிலீன் 'க்கும்' என்று கனைக்கவே அடங்கிவிட்டேன்.

பெயரில் என்ன இருக்கிறது. அப்படிப் பார்த்தால் நானும் தமிழ் ஆள் தான். என் பெயர் கிங்ஸ்லி. என் அப்பா பிரமச்சாரியர்க அம்பாள் ஸ்டோர்ஸ்போட்ட துணிப் பையுடன் சென்னைக்கு வந்தேபாது கிங்ஸ்லி என்கிற ஆங்கிலேயா-"

அவள் என் கதையை நம்பாமல் மெரிலீனிடம் சினேகமாகக் கை நீட்டி ஏமாந்தாள். என் முறைப்புக்குப் பயந்து, மெரிலீன் கையை நீட்டும்போது .

அந்த தேவி கையைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டாள். அழகிகளின் சுவாரஸ்யப் போட்டி.

"மிஸ்டர் கிங்ஸ்லீ. உங்களோடு நான் ஒரு ரகசியம் பேசணும். கான்ஃபிடன் ஷியலாக." என்றவள் மெரிலீனைப் பார்த்த பார்வையே "போடி" என்றது.

"அவளிருந்தால் பரவாயில்லை. சரியாகச் சொன்னால் அவள் இருக்க வேண்டும். நான் மறந்தாலும் இந்தப் பிசாசு மறக்காது."

"எனக்கு உங்கள் உதவி தேவை"

"காத்திருக்கிறேன். பைதபை நீங்க என்ன படிக்கறீங்க"

"படிச்சு முடிச்சு ஆராய்ச்சியில் பிராக்டிஸ் பண்ணிக் கொண்டு இருக்கிறேன்."

"எதில்?"

"ஆவியுலக ஆராய்ச்சியில் கம்பியூட்டர் நான் சொல்வதைக் கேட்கும். எதைக் கேட்டாலும் பதில் சொல்லும்."

"அடுத்து பெண்களிடம் கேட்கக் கூடாத ஒரு கேள்வி கேட்கலாமா?

கைகளை விரித்து தோள்களை உயர்த்தினாள். "எதையும் கேட்கலாம் "

"உங்கள் வயதென்ன?"

"இருபத்தைந்து" என்றாள் (நம்ப முடியாத உருவம்)

தலையை உதறிக் கொண்டு கேட்டேன்.

"சரி, உதவியைச் சொல்லுங்கள். செய்ய முடியுமா என்று பார்க்கிறேன்."

"ஒரு ஆளைக் கண்டு பிடிக்க வேண்டும்."

"ஆள்?"

"இல்லை, இது பெண்ணாகவுமிருக்கலாம். அதனால் 'நபரை' என்று மாற்றிக் கொள்ளுங்கள்."

"மன்னிக்கவும். தப்பான இடத்துக்கு வந்திருக்கிறீர்கள் என்றே நினைக்கிறேன்."

"ஏன்? நீங்க கிங்ஸ்லி இல்லையா?"

"நான் கிங்ஸ்லி தான். ஆனால் நான் சைக்கியாட்ரிஸ்ட். நீங்க கேட்கிற கண்டு பிடிப்பு சங்கதி போலீஸ் அல்லது பிரைவேட் டிட்டெக்டிவ் கம்பெனிகளுக்குத் தான் பொருந்தும், எனக்கல்ல."

"என் கம்பியூட்டர் பொய் சொல்லுவதில்லை."

"என்ன உண்மை சொல்லுகிறது?"

"நான் தேடும் நபர் அடிக்கடி இந்த ஏரியாவில்-குறிப்பாக இந்த கட்டிடத்துக்கு வந்து போவதாகத் தெரிகிறது."

"பொய் சொல்லும் வழக்கமுண்டா?" மெரிலீன் கேட்டாள்.

"யாருக்கு? எனக்கா?"

"இல்லை உங்கள் கம்பியூட்டருக்கு"

"அது பொய் சொல்லாது. ஒரு தடவை ஒரு அமைச்சர் அவருடைய பதவி ஆட்டம் கண்டபோது-"

"நோ பொலிடிக்ஸ் ப்ளீஸ்" சொன்னேன். "இந்த அறையில் ஆவிகூட நுழையலாம். அரசியல் நுழையக்கூடாது. எனக்கு பயம் அதிகம்."

"சரி, சரி. அமைச்சர் விவகாரத்தைச் சொல்லவில்லை. ஆனால் உங்களுக்கு எப்படி என்னைப் பற்றி-என் திறமையைப் பற்றி நம்ப வைப்பது.?"

"நம்பிவிட்டேன்" என்றேன் அவசரமாக. அதற்காக அரசியல் பேசிப் பயமுறுத்தாதே!"

(என்னுடைய ஏகவசனப் பிரயோகத்துக்கு அந்த தேவியைவிட மெரிலீன்தான் அதிகம் முகம் சுளித்தாள்.)

"ஸாரி, ஏகவசனத்தில் நமக்குள் நெருக்கம் அதிகமாகும் என்று நினைக்கிறேன்."

"ஷ்யூர்" என்றாள், அந்த தேவி உற்சாகமாக . "எந்த வேலையிலும் இருவருக்கும் நெருக்கம் அதிகமிருக்க வேண்டும். அப்போதுதான் செய்கிற வேலை உருப்படியாக அமையும். உங்கள் ஏக வசனத்தை வரவேற்கிறேன்."

"நான் போகட்டா?"

"இரு! என் காரியதரிசியான அழகிய பன்றிக் குட்டியே, கெள்! விவரங்களைக் கவனமாகக் கேள்."

"கேஸைத் தவிர மீதி எல்லாம் கேட்கிறீர்கள் என்றே நினைக்கிறேன்."

"சரி சீரியஸாகவே பேசுவோம். சரி நீங்க தேடும் ஆள் யார்?"

"நூறு வருஷத்துக்கு முன்பு பிறந்த ஒரு



ஆள்-ஸாரி நபர்"

சிரித்து விட்டாள் மெரிலீன்.

"சிரிக்காதே பெண்ணே. இது விளையாட்டு அல்ல, உண்மை."

"ஹைஸி அப்படியா? சராசரி இந்தியனின் வயதே நாற்பதுக்கும் கீழே என்கிறது புள்ளி விவரக் கணக்கு. அப்படிப் பார்த்தால் அந்த ஆள் செத்துப் புதைத்த இடத்தில் இந்நேரம் புல் என்ன-மரமே வளர்ந்து போயிருக்கும்."

"இல்லை, அவன் இன்னமும் உயிரோடு இருக்கிறான்."

"சரி சரி" நான் சொன்னேன். "அப்படியேயிருந்தாலும் இந்நேரம் தொண்டு கிழவனாகி தலை ஆட்டம் கண்டு சாமியாடிக் கொண்டிருப்பான். அவனால் உனக்கு என்ன பிரயோஜனம்? இலேசாய், புதுசாய் காதலனைத் தேர்ந்தெடேன். கடைசியில் பயன்படுவான். இப்ப என்னையே எடுத்துக் கொள்."

"வாட்" என்ற மெரிலீனை அலட்சியப் படுத்தினேன்.

"பேச்சுக்குச் சொன்னேன். என்னையே எடுத்துக்க. என்னையும் என் அழகையும் பார்த்துவிட்டால் யாருக்கும் தொட்டுப் பார்க்கும் ஆசை வரும்."

இப்போது அந்த தேவி "வாட்?" என்றாள் மெலிதாக.

"மீசை- மீசையைச் சொன்னேன்."

"நீங்கள் நினைக்கிற மாதிரி அவன்-அதாவது அந்த நபர் கிழடுதட்டிப் போயிருக்க முடியாது. ஸ்டில் ஹீ மஸ்ட் பீ யங்"

"அதெப்படி?" மெரிலீன் கேட்டாள். "காய கல்பம் சாப்பிட்டவனா?"

"அதேதல்லாமில்லை. இது வேறு விஷயம்."

"என்ன?"

"உங்களுக்கு மாந்திரீகத்தில் நம்பிக்கையுண்டா? ரத்தபலி - அதாவது நரபலியைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?"

என் முகம் மாறியிருக்க வேண்டும். காரணம் மெரிலீனின் முகம் மாறியிருந்தது.

"இப்படி வந்து இந்த சாய்மானத்தில் படுங்கள்."

"படுத்து?" கேட்டாள். "என்னை என்ன செய்வதாக உத்தேசம்?"

"உங்களை மெஸ்மெரிச தூக்கத்தில் ஆழ்த்தி உங்கள் மனநிலையை ஆராயப்போகிறேன்."

"ஏன்?"

"ஏதோ குழப்பம் உங்கள் உள் மனதை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது. அதைக் கண்டுபிடித்துச் சொல்லிவிட்டால் இப்படிப்பட்ட அனாவசிய பயங்கரம் வராது."

"ஸ்டாப் டாக்கிங்! நான் சென்ஸ்"

"அதில் பார் பெண்ணே." பின்னந்தலையைச் சொறிந்து கொண்டேன். "அது நான் சொல்ல வேண்டிய வசனம்."

"என்னை நம்புங்கள். நான் சொல்வதெல்லாம் நிஜம். நிஜத்தைத் தவிர வேறில்லை."

"கோர்ட்டுப் பக்கம் அடிக்கடி போவாயா? சரி. இங்கே வந்து படு"

"என்னை நம்புங்கள். நான் சொல்வதை நம்புங்கள்."

"நூறு வருஷமாகியும் இளமையான நபரைப்பற்றி -"

"ஆமாம்"

"உங்கள் கம்பியூட்டர் சொன்னதை."

"அதே"

"மாயம் மாந்திரீகம்?"

"உம்"

"நரபலி - ரத்தபலி"

"சத்தியமான வார்த்தை."

"கொஞ்சம் இப்படி வந்து படுக்கிறாயா?"

"ம்ஹீ" மெரிலீன் அதட்டினாள். அதென்ன பாய்..... அவளைப்படுக்க வைக்கிறதிலேயேயிருக்கீங்க? என்ன தான் சொல்கிறாள். கேட்போமே"

"சொல்லு"


"சொல்றேன். நூறு வருஷத்துக்கு முந்தி நடந்தது அந்த மூன்று சம்பவங்கள். கேரளத்தின் வனப்பான பின்னணியில்"

சொல்ல ஆரம்பித்தாள்.


(தொடர்ந்து வரும்)

---


## பேனா நண்பர் அரங்கம்




பெயர்: சி.சந்துரு
வயது: 23
முகவரி: கே.B,ஸ்ரேஸ் வீதி, நவகம்புர-கொழும்பு-14.
பொழுதுபோக்கு: பத்திரிகை, புத்தகம், பேனா நட்பு, கிரிக்கெட்.




பெயர்: எம்.பவீஸ்
வயது: 21
முகவரி: 38,பி, கண்டி வீதி, பஸ்யாலை.
பொழுதுபோக்கு: வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை.




பெயர்: தி.ராகினி
வயது: 23
முகவரி: காந்தி வீதி, ஆறுமுகத்தான் குடியிருப்பு, தன்னாமுனை.
பொழுதுபோக்கு: வானொலி கேட்டல்.



பெயர்: ஆர்.றினோசா
முகவரி: இல.509/3, பாடசாலை வீதி, சிராஜ் நகர், கந்தளாய்.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை.



பெயர்: எஸ்.கௌரிதாசன்
வயது: 24
முகவரி: FELD STR-144 B.K.204- 8004-ZURICH SWITZERLAND.
பொழுதுபோக்கு: பத்திரிகை, கதைப்புத்தகம், பாடல்கள்.



பெயர்: எம்.நவாஸ்
வயது: 20
முகவரி: P.O BOX- 1580 DOHA. QATAR. A.G.
பொழுதுபோக்கு: வழமையான பொழுதுபோக்குகள்.

பெயர்: சி.திருஷணமோகன்
வயது: 18
முகவரி: மிஷன் வீதி, பெரியகல்லாறு-1, மட்டக்களப்பு.
பொழுதுபோக்கு: கிரிக்கெட், பத்திரிகை, பாடல்கள் கேட்டல்.

பெயர்: எம்.றிஸ்வி
வயது: 21
முகவரி: 548, பெராதனை வீதி, கண்டி.
பொ.போ: பத்திரிகை, கிரிக்கெட்.

பெயர்: பி.ராஜா
வயது: 20
முகவரி: இல.197, ஆட்டுப்பட்டித்தெரு -கொழும்பு-13.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை, தொலைக்காட்சி.

பெயர்: எம். றிப்தி
வயது: 28
முகவரி: இல.22-27, பண்டாரநாயக்கா மாவத்தை, இரத்தினபுரி.
பொ.போ: பத்திரிகை, நண்பர்களுடன் அரட்டை.

பெயர்: ஏ.குமார்.
வயது: 35
முகவரி: இல.11-ஏ, திலச்சந்தை கொப்பிஸெக்ஸ், நுவரெலியா.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை, ரீ.வி, வீடியோ.

பெயர்: எம்.நூர்தீன்
வயது: 21
முகவரி: 98, இராகலை பசார், ஹல்கரனோயா.
பொ.போ: பத்திரிகை, கதைப் புத்தகம், பேனா நட்பு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# மக்சீம் கார்க்கி

## தாய்

26

"அந்திரியுஷா! வாலிபர்களுக்கு எல்லாமே சுலபம் தான். ஆனால் என்னை மாதிரி வயதாகி விட்டால்–துன்பம் நிறைய, சக்தி குறைவு, அறிவோ முற்றிலும் இல்லை" என்றாள் தாய்.

அன்று மாலை ஹஹோல் வெளியே சென்ற பிறகு, தாய் விளக்கை யேற்றிவிட்டு ஒரு காலுறை பின்ன முனைந்தாள். பின், உடனேயே எழுந்திருந்து, சஞ்சல மனத்தோடு அறைக்குள் மேலும் கீழும் நடந்தாள். சமையல்கட்டில் நுழைந்தாள். கதவைச் சாத்தினாள். புருவங்களைச் சுருக்கி நெரித்த வாறே திரும்பி வந்தாள். ஜன்னலின் திரைகளை இழுத்து மூடிவிட்டு, அலுமாரியிலிந்து ஒரு புத்தகத்தை எடுத்தாள். மீண்டும் மேஜைமுன் சென்று அமர்ந்தாள். அவள் எவ்வளவு தான் முன்னேற்பாடுகள் செய்துவிட்டு உட்கார்ந்தபோதிலும், அவள் கண்கள் மட்டும் அக்கம் பக்கம் பார்த்துத் திருகத்திருக விழிப்பதை அவளால் தடுக்க முடியவில்லை. புத்தகத்தைத் திறந்து, எழுத்துக்களை முணுமுணுக்கத் தொடங்கினாள். தெருப்பக்கத்தில் ஏதாவது சிறு சத்தம் கேட்டாலும், அவள் உடனே திடுக்கிட்டாள்; புத்தகத்தைப் பட்டென்று மூடினாள். காதுகளைத் தீட்டி விட்டுக் கொண்டாள். பிறகு மீண்டும் அவள் புத்தகத்தைப் பார்த்து ஏதோ முணுமுணுத்தாள். கண்ணைத் திறந்தும் மூடியும் வாய்க்குள் சொல்லிப் பார்த்துக் கொண்டாள்.

"நாம் வாழும் இந்த நிலத்தில்…"

கதவு தட்டும் சத்தம் கேட்டது. விறுட்டேன்று எழுந்து புத்தகத்தை அலுமாரியில் செருகிவிட்டுக் கலக்கத்துடன் கேட்டாள்:

"யார் அங்கே?"

"நான் தான்."

ரீபின் தன் தாடியைத் தட்டிக் கொண்டு வந்து சேர்ந்தான்.

"நீ 'யாராங்கே?' என்று முன்பெல்லாம் கேட்க மாட்டாயே. தனியாயிருக்கிறாயா? ஹஹொலும் இருப்பான் என்று நினைத்தேன். அவனை நான் இன்று பார்த்தேன்; சிறைவாசம் அவனைக் கெடுக்கவில்லை" என்றான் ரீபின்.

அவன் கீழே உட்கார்ந்து, தாயின் பக்கமாகத் திரும்பினான்.

"சரி. நான் வந்த விஷயத்தைப் பேசலாம்."

அவனது கவனமிக்க புதிரான பார்வை அவள் உள்ளத்திலே புரியாத பயத்தை எழுப்பியது.

"பணம் இல்லாமல் எதுவும் நடக்காது" என்று ஆழ்ந்து கரகரக்கும் குரலில் சொன்னான் அவன். "பிறப்பதற்கும் பணம் வேண்டும்; சாவதற்கும் பணம் வேண்டும். புத்தகம் போடவும், பிரசுரம் வெளியிடவும் பணம் வேண்டும். இந்தப் புத்தகங்களுக்கு எல்லாம் எங்கிருந்து பணம் வருகிறது என்பது உனக்குத் தெரியுமா?"

"இல்லை. எனக்குத் தெரியாது." என்று அமைதியுடன், எனினும் ஏதோ சந்தேக உணர்ச்சியுடன் சொன்னாள் தாய்.

"எனக்கும் தெரியாது. சரி இன்னொரு விஷயம், இதையெல்லாம் யார் எழுதுகிறார்கள்?"

"படித்தவர்கள்….."

"ஓஹோ, படித்த சீமான்கள்தானா?" என்றான் ரீபின், அவனது தாடி வளர்ந்த முகம் திடீரெனச் சிவந்தது. "சொல்லப் போனால், இந்தச் சீமான்கள் புத்தகங்களை எழுதி அதை வெளியே பரப்பிவிடுகிறார்கள். ஆனால் அவர்கள் எழுதிய புத்தகங்களோ சீமான்களுக்கு எதிராக இருக்கின்றன. நீயே இதை யோசித்து எனக்கு விளக்கிச் சொல்லு. அவர்கள் எதற்காகத் தங்கள் பணத்தைப் பாழாக்கிப் புத்தகம் எழுத வேண்டும்? அந்தப் புத்தகங்களைக் கொண்டு சாதாரண மக்களைத் தங்களுக்கு எதிராகவே ஏன் தூண்டிவிட வேண்டும்? இல்லையா?"

தாய் படபடவென்று இமைகொட்டி பயந்து போய்க்கூச்சலிட்டாள்:

"நீ என்ன நினைத்துக்கொண்டிருக்கிறாய்?"

"ஆஹா!" என்று கூறியவாறு அவன் ஒரு கரடியைப் போலத் திரும்பி உட்கார்ந்தான். "அப்படிச் சொல்லு. நானும், உன்னைப் போலத்தான். இந்த நினைப்பு என் மனதில் பட்டதோ இல்லையோ, உடனே என் உடம்பெல்லாம் குளிர்ந்து போயிற்று! ஆமாம்."

"நீ என்ன, ஏதாவது புதிதாகக் கண்டு பிடித்திருக்கிறாயா?"

"ஆமாம். வெறும் ஏமாற்று!" என்றான் ரீபின். "நம்மையெல்லாம் அவர்கள் ஏமாற்றி விட்டார்கள் என்று நான் உணர்கிறேன். எனக்கு ஒன்றும் விவரம் தெரியாது. என்றாலும், இதெல்லாம் வெறும் ஏமாற்று வித்தை! துரோகச் செயல்! அதுதான் சங்கதி! உன்னுடைய படித்த சீமான்கள் இருக்கிறார்கள், அவர்கள் பெரிய சாமர்த்தியசாலிகள். ஆனால் நானோ உண்மையைத்தான் நாடுகிறேன். இப்போது தான் எனக்கு உண்மை புரிந்தது. இனி நான் இந்தச் சீமான்களைப் பின் பற்றவே மாட்டேன். சந்தர்ப்பம் கிடைக்கும் போது, இவர்கள் என்னைக் கீழே தள்ளி, என் எலும்புகளை ஒரு பாலம் மாதிரி உபயோகித்து அதன் மீது நடந்து சென்றுவிடுவார்கள்……"

அவனது வார்த்தைகள் தாயின் உள்ளத்தை ஒரு பாவசிந்தையைப் போல் பற்றிப் பிடித்தன.

"அட கடவுளே!" என்று வருத்தத்தோடு சொன்னாள் அவள். "பாஷாவுக்குக் கூடவா இது புரியாமல் போயிற்று! மற்றவர்கள் எல்லொருக்கும் கூடவா……."

அவளது கண் முன்னால் உறுதியும் நேர்மையும் நிறைந்த முகங்கள்–இகோர், நிகலாய் இவானவிச், சாஷா முதலியோரின் முகங்கள் தோன்றி மறைந்தன. அவள் இதயம் படபடவென்று அடித்துக்கொண்டது.

"இல்லையில்லை" என்று தலையைக் குலுக்கிக் கொண்டே சொன்னாள் அவள். "என்னால் இதை நம்பமுடியாது! அவர்கள் மனச்சாட்சி உள்ளவர்கள்!"

"நீ யாரைச் சொல்லுகிறாய்?" என்று ஏதோ யோசித்தவாறே கேட்டான் ரீபின்.

"அவர்கள் எல்லோரையும்தான், நான் கண்டறிந்த அத்தனை பேரையும்தான்!"

"அம்மா, நீ இன்னும் சரியாகப் பார்க்கவில்லை. இன்னும் எட்டிப் பார்க்க வேண்டும்" என்று தலையைத் தொங்க விட்டுக்கொண்டே சொன்னான் ரீபின். "நம்மோடு சேர்ந்து உழைக்கிறார்களே, அவர்களுக்கே இந்த உண்மை தெரியாமல் இருக்கலாம். அவர்கள் நம்புகிறார்கள். தாங்கள் நம்பிக்கொண்டிருப்பதே உண்மை என்கிறார்கள். ஆமாம், அது அப்படித்தான். ஆனால் அவர்களுக்குப் பின்னால் மற்றவர்கள் நிற்கலாம்; தங்கள் சுயநலத்தையே பெரிதாக மதிக்கும் மனிதர்கள் நிற்கலாம். ஒரு மனிதன் தனக்குத்தானே எதிராக வேலை செய்வானா?"

பிறகு அவன் ஒரு விவசாயியின் கடுமையான நம்பிக்கையோடு பேசினான்:

"இந்தப் படித்த சீமான்களால் எந்த நன்மையும் என்றுமே விளையப் போவதில்லை."

"நீ என்ன செய்வதாக நினைத்திருக்கிறாய்?" என்று மீண்டும் சந்தேக வயப்பட்டவளாய்க் கேட்டாள் தாய்.

"நானா?" என்று அவளைப் பார்த்துக் கூறிவிட்டு மெளனமானான் ரீபின். பிறகு சொன்னான்: "இந்தச் சீமான்களிடமிருந்து எவ்வளவு தூரம் விலகியிருக்கிறோமோ, அவ்வளவுக்கு நல்லது, அதுதான் சங்கதி!"

மீண்டும் அவன் சோர்ந்து குன்றி, மெளனமானான்.

"நான் இந்தத்தோழர்களோடு சேர்ந்து உழைக்க விரும்பினேன். அந்த மாதிரி வேலைக்கு நான் லாயக்குத்தான். மக்களிடம் என்ன சொல்லவேண்டும் என்று எனக்குத் தெரியும். ஆனால், இப்போதோ நான் விலகிச்செல்கிறேன். எனக்கு நம்பிக்கை அற்று விட்டது. எனவே நான் போகத் தான் வேண்டும்."

அவன் தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டு சிந்தனையில் ஆழ்ந்தான்.

"கிராமங்களுக்கும் நாட்டுப் புறங்களுக்கும் போகப் போகிறேன்; போய், அங்குள்ள சாதாரண எளிய மக்களைத் தூண்டிவிடப் போகிறேன். அவர்கள் பிரச்சனைகளைத் தீர்க்க அவர்களே வழிதேட முனைய வேண்டும். அவர்களுக்கு உண்மை புரிந்துவிட்டால், தங்கள் வழியைத் தாமே கண்டுகொள்வார்கள். அவர்களுக்கு உண்மையைப் புரிய வைப்பதுதான் என் வேலை. அவர்கள் தம்மைத் தாமே நம்பவேண்டும். அவர்களுக்கு உதவுவதெல்லாம் அவர்களது சொந்த அறிவுதான். ஆமாம்!"

அவள் அந்த மனிதனுக்காக அனுதாபப்பட்டாள்; அவன் போக்கைக்கண்டு அஞ்சவும் செய்தாள். எப்போதுமே அவள் மனதுக்குப் பிடிக்காதிருந்த ரீபின், இப்போது, ஏதோ ஒரு புரியாத காரணத்தால், அவள் அன்புக்கு உரியவனாகத் தோன்றினான். எனவே அவள் அவனிடம் மிருதுவாகச் சொன்னாள்:

"அவர்கள் உன்னைப் பிடித்துக் கொண்டுபோய் விடுவார்கள்……"

ரீபின் அவளை எறிட்டுப் பார்த்தான்.

"அவர்கள் என்னைக் கைது செய்வார்கள்; பிறகு விட்டு விடுவார்கள். அதன்பின் நான் என் வேலையை மீண்டும் தொடங்குவேன்!"

"முஜீக்குகளே உன்னைக் கட்டிப் போட்டு விடுவார்கள், சிறையில் தள்ளுவார்கள்"

"நான் சிறைவாசம் அனுபவிப்பேன்; பிறகு வெளியேயும் வருவேன். மீண்டும் என் வேலையையே தொடங்குவேன். முஜீக்குகள் (முஜீச்-ருஷ்ய விவசாயி. பொதுவாக ஆண்களைச் சற்று இளக்காரமாகக் குறிப்பதற்கும் வழங்கும் சொல்) என்னை மீண்டும் ஒருமுறை, இருமுறை, பலமுறை கட்டிப்பிடித்துச் சிறைக்கு அனுப்புவார்கள். அதன் பிறகுதான் என்னைக் கட்டிப்போடத் தயங்கி நின்று, நான் சொல்வதை அவர்கள் காதில் வாங்குவார்கள்; உணரத் தொடங்கு வார்கள். 'என்னை நம்பவேண்டாம்; ஆனால் நான் சொல்வதை மட்டும் கேளுங்கள்' என்பேன் நான். அவர்கள் கேட்கட்டும் தொடங்கி விட்டால், அப்புறம் என்னை நம்பவும் தொடங்குவார்கள்."

அவன் மிகவும் மெதுவாகவே பேசினான்; ஒவ்வொரு வார்த்தையையும் எடை போட்டு தரம்பார்த்து நிதானமாகப் பிரயோகிப்பது மாதிரி தோன்றியது.

"அண்மையில் நான் நிறையக் கேள்விப்பட்டேன். ஏதோ கொஞ்சம் புரிந்து கொண்டேன்…."

"மிகயீல் இவானிவிச்! இத்துடன் நீ முடிந்து தொலையப் போகிறாய்" என்று தலையை வருத்தத்தோடு அசைத்துக் கொண்டு சொன்னாள் தாய்.

அவன் தனது ஆழ்ந்த கரிய கண்களால் எதையோ வினவுவது போலவும், எதிர் பார்பது போலவும் அவளைப் பார்த்தான். அவனது பலம் பொருந்திய உடம்பு முன்புறமாகக் குனிந்தது. அவனது கைகள் நாற்காலியை இறுகப் பற்றின. அவனது பழுப்பு முகம் தாடிக்குள்ளாக வெளிறியதாய்த் தெரிந்தது.

"கிறிஸ்து நாதர் விதையைப் பற்றிச் சொன்ன விஷயத்தை எண்ணிப்பார். விதையை உற்பத்தி பண்ணுவதற்காகப் பழையவிதை செத்துத்தானாக வேண்டும். ஆனால் எனக்கு மரணம் அவ்வளவு சீக்கிரத்தில் வந்துவிடாது. நான் ஒரு சாமர்த்தியமான கிளட்டு குள்ளநரிப் பிறவி!"

அவன் நிலைகொள்ளாமல் அசைந்து கொடுத்தான்; பிறகு நிதானமாக நாற்காலியை விட்டு எழுந்தான்.

"நான் சாராயக் கடைக்குச் சென்று அங்குள்ளவர்களோடு சிறிது நேரம் பொழுதுபோக்குவேன். அந்த ஹஹோல் இன்னும் வருகிற வழியாய்க் காணோம். அவன் தன் பழைய வேலைக்குக் கிளம்பி விட்டான் போலிருக்கிறது."

"ஆமாம்" என்று சிறு புன்னகையுடன் சொன்னாள் தாய்.

"நல்லது. நீ அவனிடம் என்னைப் பற்றிச் சொல்லு….."

அவர்கள் இருவரும் ஒருவர் பக்கம் ஒருவராக ஒன்றாகவே சமையற் கட்டுக்குப் போனார்கள், ஒருவரை யொருவர் முகம் கொடுத்துப் பார்க்காமலே ஏதேதோ பேசிக்கொண்டார்கள்.

"சரி. நான் வருகிறேன்."

"போய்வா. நீ தொழிற்சாலை வேலைக்கு எப்போது கணக்குக் கொடுக்கப் போகிறாய்?"

"ஏற்கெனவே கொடுத்தாயிற்று."

"எப்போது போகிறாய்?"

"நாளைக்கு அதிகாலையில். சரி வருகிறேன்."

போகவே மனமற்றவனைப்போல் அவன் தயங்கித்தயங்கித் தடுமாறி வாசல் நடையைக் கடந்தான். ஒரு நிமிஷ நேரம் அவனது ஆழ்ந்த காலடியோசையைக் காதில் வாங்கியவாறே வாசலில் நின்றாள் தாய். அதே சமயம் அவளது இதயத்தின் சந்தேகங்களும் அவள் காதில் ஒலி செய்துகொண்டிருந்தன. அவள் அமைதியாகத்திரும்பி அடுத்த அறைக்குள் வந்தாள்; ஜன்னல் திரையைத் தூக்கிக் கட்டினாள். ஜன்னலுக்கு வெளியே இருள் அசைவற்ற மோன சமாதியில் ஆழ்ந்து கிடந்தது.

"நான் இருளிலேயே வாழ்கிறேன்" என்று அவள் தனக்குள் நினைத்துக் கொண்டாள்.

அந்த பலமும் திடமும் நிறைந்த கெளரவமான அந்த முஜீக்குக்காக அவள் வருத்தப்பட்டாள்; அனுதாப்பட்டாள்.

அந்திரேய் ஒரே குதூகலத்தோடு திரும்பி வந்தான்.

தாய் அவனிடம் ரீபினைப் பற்றிச் சொன்னாள். அதைக் கேட்டுவிட்டு அவன் சொன்னான:

"போனால் போகட்டும். கிராமங்கள் தோறும் அலைந்து திரிந்து நியாயத்தைப்பற்றி அவன் கூச்சல் போடட்டும்; அங்குள்ள மக்களை அவன் தட்டியெழுப்பட்டும். நம்மோடு ஒத்துழைப்பதென்பது அவனுக்குக் கொஞ்சம் சிரமம்தான். முஜீக்கின் கருத்துக்கள் தான் அவன் மூளை நிறைய இருக்கின்றன. நம்முடைய கருத்துக்கள் அவன் மண்டையில் ஏறாது. அதற்கு இடமும் கிடையாது."

"அவன் படித்த சீமான்களைப் பற்றிப் பேசினான். அவன் சொன்னதில் ஏதோ கொஞ்சம் உண்மையிருப்பது போலத் தான் தெரிகிறது." என்று மிகவும் பதனமாகச் சொன்னாள் தாய். "அவர்கள் உங்களை ஏமாற்றி விடாமல் பாத்துக் கொள்ளுங்கள்!"

"அம்மா, அவர்கள் உங்களை ஏமாற்றிக் கெடுக்கப் பாக்கிறார்கள்" என்று கூறிச் சிரித்தான் ஹஹோல்.

(தொடர்ந்து வரும்.)



## மழை

-எம். சுரேஷ்.-

பஸ்சைவிட்டு இறங்கிய சிறிது நேரத்தில் நான் முழுமையாக நனைந்துவிட்டேன். மழையோடு காற்றும் சேர்ந்துகொண்டது. நனைந்த உடலில் காற்றுமோத எக்கச்சக்கமாய் நடுக்கம் எடுத்தது. இந்த இலட்சணத்தில் தொடர்ந்து நடக்க முடியாது. கையில் குடையும் இல்லை. அருகில் இருந்த ஒரு சின்ன உணவு விடுதியின் ஓரமாக ஒதுங்கி நின்றேன். தலையிலிருந்து சொட்டுச் சொட்டாய் சிந்திய மழை நீர் என் மூக்குக் கணணாடி ஊடாக வடிந்து கொண்டே இருந்ததால் எல்லாமே எனக்கு மங்கலாகத் தெரிந்தது.

இடைக்கிடை முகத்திலும் மீசையிலும் தஞ்சம் அடைந்திருந்த மழைநீரை வழித்துவிட்டுக் கொண்டே, மழைத்துளிகள் தார் றோட்டில் விழுந்து தெறிப்பதை இரசித்துக் கொண்டிருந்தேன். அந்த இரசிப்புக்கு மத்தியில் காற் சலங்கை போட்ட இரு பழக்கப்பட்ட பாதங்கள்….

மெதுவாக பார்வையை உயர்த்தினேன். "அவள்!…….இன்னும் பழையமாதிரியே இருந்தாள், அந்த சிகப்புச் சுடிதாருக்கு அழகாக இருந்தாள். பக்கத்தில் ஒரு கிழவி. அது அவளின் மாமியாராக இருக்க வேண்டும்….. இருவரும் வீதி ஓரத்தில் ஒதுங்குவதற்கு யோசிக்காமல் மழையில் நனைந்தபடியே நடந்துகொண்டிருந்தார்கள். மீண்டும் பார்த்தேன். எல்லாமே முன்பை விட மங்கலாகத் தெரிந்தது. பயங்கர நடுக்கம். எப்போதோ நான் எழுதிய கவிதை வரிகள் ஞாபகத்திற்கு வந்தன….

**மழையில் நனைந்து பின்**
**மழையே நனைந்து என்**
**இமைகள் திறந்து உன்**
**விழி பார்க்கும்……**

சிரிப்பு வந்தது. சிரித்தேன். மூக்குக் கண்ணாடியைக் கழற்றி கைக்குட்டையால் நன்கு துடைத்து விட்டு மீண்டும் அணிந்து கொண்டேன். இப்போது எல்லாமே மிகத் தெளிவாகத் தெரிந்தன. அவள் என்னை விட அதிகமாக நனைந்திருந்தாள்!!



## கண்ணனாகப் போனவன்

கே. முரளிதரன்.

"கிலோ வெங்காயம் நாப்பது ரூபாய், கிலோ வெங்காயம் நாப்பது ரூபாய்", என இரைச்சல் போட்டுக் கூவி விற்றுக் கொண்டிருந்தார்கள்.

நான் காய்கறி வாங்குவதற்காக மார்க்கெட்டில் சனக் கூட்ட்த்திற்கு இடையில் புகுந்து சென்று கொண்டிருந்தேன். அப்பொழுது ஒரு கனத்த மாடு கோவாவுக்கு வித்தியாசம் தெரியாமலோ என்னவோ எதிரில் வந்த தாவணியைப் பறித்து இழுத்தது.

உடன் நான் பாய்ந்து தாவணியை இழுத்துப் பறித்து கொடுத்தேன். அந்தப் பெண பயந்து, பேய் அறைந்தது போல் இருந்தாள்.

மறுநாள் மார்க்கெட்டுக்குச் சென்றேன். அதே பெண் பார்த்தாள். சிரித்தாள்.

தினமும் இது தொடர்ந்தது.

ஒருநாள், "அம்மா உங்களை வீட்டுக்குக் கூப்பிடுறாங்க. வாங்க," என்றாள். அட்ரஸ் கொடுத்தாள்.

எனக்குள் மகிழ்ச்சி, கும்மாளம், ஆர்ப்பாட்டம்.

அவள் வீட்டுக்குப் போவது குறித்தே சிந்தனை.

வீட்டிற்குச் சென்றேன். அவள்



இருந்தாள்.

"அம்மா யார் வந்திருக்காங்க பாருங்க" என்றாள்.

"வாங்க தம்பி, அன்னைக்கு நடந்ததைச் சொன்னாள்" அன்னைக்கு கிருஷ்ணன் திரௌபதைக்கு சேலை கொடுத்து காப்பாத்தினான். இன்னைக்கு நீங்க இவளுக்கு அண்ணனா இருந்து இவ மானத்தைக் காப்பாத்திட்டீங்க என்றாள்.

நானோ கண்ணனாகச் சென்று, அண்ணனாகத் திரும்பி வந்தேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை

# காதலுக்கு வேலியில்லை.

### 1990ன் கடைசிப் பகுதியில்...

அந்தப் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் அவர்கள் இறுதியாண்டு மாணவர்களாக இருந்தார்கள். அவன் வைத்தியத்துறையிலும்... அவள் தாவர வியலிலும் மாணவர்களாய்... மனசளவில் இணைந்த காதலர்களாய்... அவன் மாவனல்லையைத் தன் ஊராகக் கொண்டு, அவள் களுத்துறைப் பகுதியில் ஏதோவொரு சிங்களக் கிராமத்தைத் தன் வதிவிடமாகக் கொண்டு...

அவன் மிப்ரா - முழுப்பெயர் மிப்ரா சஹாப்டீன்.

அவள் தமயந்தி - தந்தை வழியாக தமயந்தி குணவர்தன.

அவன் இஸ்லாமிய மதத்தவன். அவனது தந்தையோ ஒன்றுக்குப் பல முறையாக புனித ஹஜ் கடமையை நிறைவேற்றிய 'ஹாஜியார்.'

அவள் பௌத்த மதத்தவள்!

- சிங்களக் கலாசாரத்தில் ஊறிப்போன குடும்பத்துப் பெண்.

ஆனால்–

காதல்; ஜாதி, மதம் பார்ப்பதில்லை.

காதல் வயப்பட்ட இதயங்கள் நேசிப்பைத் தவிர... பொய்மைகளையோ, துவேஷங்களையோ எதிர்பார்ப்பதில்லை.

அவர்களும் அப்படித்தான்...

மனதளவில் ஒன்றுபட்டார்கள்.

அவர்களுக்கு 'காதல்' மட்டுமே ஒன்றாய்ப்பட்டது.

### 1991ன் ஆரம்பப் பகுதியில்...

இறுதிப் பரீட்சையோடு அவர்கள் பிரிய நேரிட்டது.

காலம் யாருக்காவது காத்திருப்பதில்லை.

ஆனால்....'காதல்' காலம் காலமாய்க் காத்திருக்கும்.

இறுதிநாளில்... இதமான அந்தப் பேராதனைப் பூங்காவுக்குள் சந்தித்துக் கட்டியணைத்து, முத்தங்களால் உதடுகளை எச்சில்படுத்தி... அவர்கள் கண்களில் கண்ணீர் விட்டார்கள்.

எச்சிலோ, முத்தமோ காதலின் ஜாதியையோ, மதத்தையோ, குலத்தையோ பார்க்காத பட்சத்தில்... ஒன்றாய்க் கலந்த அவர்களது கண்ணீர்த்துளிகளில் மட்டும் வித்தியாசமேயில்லாமல் சுவை ஒன்றாயிருந்து யதார்த்தமாய் உப்புக் கரித்தது.

காலம் வரும்போது; வரும் தடைகள் அனைத்தையும் தாண்டி–தகர்த்து அவர்கள் கல்யாணம் பண்ணிக்கொள்வது என்று முடிவெடுத்துப்... பிரிந்....தார்கள்.



- மாவனல்லை ரிஸ்கி ஷெரீப் -

### 1992ன் மையப் பகுதியில்....

வீட்டில் கல்யாணம் பேசிக் கொண்டிருக்க,

அவனுக்கு எந்தப் பெண்ணையும் பிடிக்கவில்லை. காரணம்;

- அவனிதயத்தை தமயந்தி பிடித்து வைத்திருந்தாள்.

மெல்லமாய் உம்மாவிடம் சொன்னான்.

"உம்மா நானொரு பொண்ணை விரும்புறேன்மா"

"சரி... யாரு... பொண்ணு பெயர் என்ன?"

"சிங்களப் பொண்ணும்மா... பெயர் தமயந்தி..."

உம்மா அவனுக்கு அறைந்த அறையில், அவனது கன்னம் கொடூரமாய் வலித்தது. ஆடிப்போனான்.

உம்மா சகலதையும் வாப்பாவிடம் சொல்ல...

வாப்பா பேயாட்டம் ஆடினார்.

"அந்தப் பொண்ணையே கட்டிக்கிறதாகவிருந்தால் என் மையத்துக்காவது வீட்டுப் பக்கம் வராதே!"

உம்மா அழத்தொடங்கினார்.

அவன் வீட்டை விட்டு வெளியேறினான்.

நேராக.... தன் தமயந்தியைப் பார்ப்பதற்காகப் போனவன்,

அங்கே...

தமயந்தியும் காதல் கைதியாய் கொடுமைப் படுத்தப்பட்டு, அவளது படுக்கை அறையிலேயே பெற்றோர்களால் சிறை வைக்கப்பட்டிருக்க...

இரவோடிரவாக,

அவன் அவளை இரகசியமாகச் சந்தித்தான்.

பிரிந்த காதலர்கள் கூடினால் கேட்கவும் வேண்டுமா?

அதேயிரவோடு இரவாக... இரவின் கறுப்பிருட்டு வெளுப்பதற்கு முன் இருவரும் ஒன்றாக ரெயிலேறி... யாருமே அறியாமல் இரகசியமாக இன்னோர் ஊரில் இறங்கி...

அவன் மிப்ராவாக–

அவள் தமயந்தியாக–

இருவரும் பதிவுத் திருமணம் செய்து கொண்டு,

எப்படியோ.... மதங்களையும் கோத்திரங்களையும் தாண்டிய அவர்களது புனிதமான காதல் வெற்றிபெற்று;

வாடகை வீடொன்றில் இருவரும் சந்தோஷமாய்க் குடும்பம் நடாத்த... காலம் ஓடிக்கொண்டிருந்தது, மகிழ்ச்சியாய்...

### 1993

வானொலியில்;

சஹாப்டீன் ஹாஜியாரின் மரண அறிவித்தல் கேட்டு,

அவன் சிறுகுழந்தையாய் அழுதான்.

அழுதுகொண்டேயிருந்தான்.

அவள் ஆறுதல்படுத்தினாள்.

'என் மையத்துக்காவது வரக்கூடாது' என்று வாப்பா சொன்னபோதும்.... 'என்ன நடந்தாலும் சரி ' என்று தனியாக... தமயந்தியை வீட்டில் இருக்கச் சொல்லிவிட்டு... மையத்து வீட்டுக்குப் புறப்பட்டுப் போனான் மிப்ரா.

உம்மா பேசவேயில்லை.

ஊராக்கள் இளக்காரமாய்ப் பார்த்தார்கள்.

"நல்லா வாழ்ந்த மனுசன். இவன் எப்போ சிங்களக் குட்டியைக் கூட்டிட்டு ஓடிப்போனானோ... அன்னைக்கே ஹாஜியார் நோயுல விழுந்திட்டாரு... பாவிமகன் வாப்பாவையே கொஞ்சம் கொஞ்சமாகக் கொன்னுட்டான்."

பக்கத்து வீட்டுப் பாட்டிமார் இவன் காதுபடவே கதைத்தபோது நெஞ்சு இரண்டாய் பிளந்துவிடும் போலிருக்க... உம்மா என்ன நினைத்தாளோ... ஓடிவந்து இவனைக் கட்டியணைத்துக்கொண்டு அழத்தொடங்கினாள்.

என்னவென்றாலும் உம்மாவுக்கு இவன்மேல் ரொம்பப் பாசம்!

### 1994

பெப்ரவரி மாதம்! நான்காம் திகதி!!

தமயந்தி மகப்பேற்றுப் பிரசவத்துக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டபோது, மிப்ராவைக் கட்டியணைத்துக் கொண்டு அழுதாள்.

(அவள் பேசிய சிங்கள மொழியின் தமிழாக்கம்)

"என்னங்க... இப்போ கொஞ்சம் நாளாக என் மனசுக்குள்ள ஏதோ பயம் வருது. உங்களை அப்படியே நிரந்தரமாகப் பிரிந்து விடுவேனோன்னு தோணுது. ஏனோ தெரியல... அப்படி எனக்கு ஏதாவது ஆகினால் நீங்க வேறு கல்யாணம் பண்ணிக்கிட்டு சந்தோசமாக வாழணும். எனக்காக ப்ளீஸ்... கல்யாணம் உங்களுக்காக இல்லேன்னாலும்... பிறக்கப்போகிற நம்ம குழந்தைக்காகவாவது நீங்க இன்னுமொரு கல்யாணம் பண்ணிக்கணும்.

' அதுலேயும் உங்களுக்கேற்ற மாதிரி ஒரு முஸ்லிம் பெண்ணை - உங்க மதத்துப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு... பிரிந்து வாழுற உங்க உம்மாவையும் அழைத்து வந்து உங்களுடனேயே வெச்சிக்கிட்டு நீங்க சந்தோசமாக வாழணும் மிப்ரா..."

தமயந்தி கண்ணீரோடு சொல்லி முடிக்க...

மிப்ரா அவளைக் கட்டிக்கொண்டு அழுதான்- சிறுகுழந்தையாய்.

பெப்ரவரி மாதம. ஏழாம் திகதி.

தமயந்தியின் உள்ளுணர்வு - பயம் எல்லாம் பலித்ததோ என்னமோ...

ஒப்பரேஷன் தியேட்டருக்குள் எடுக்கப் பட்ட தமயந்தியினதும், அவளது தேகாரோக்கியத்தையும் மனதில்கொண்டு... இறைவனை வேண்டிக்கொண்டு கண்களில் கண்ணீர் மல்க மனம் பதறியவனாய் மிப்ரா வெளியே காத்திருக்க... சோகமாய் வெளிப்பட்ட டாக்டர் அதே சோகத்துடன் சொன்னார்:

"நோர்மல் டெலிவரியாகல்ல.. சிசேரியன் தான். உங்களுக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கு. ஆனால்... ஐ ஆம் ஸோ ஸொரி... குழந்தையை மட்டும்தான் காப்பாற்ற முடிந்தது. உங்க மனைவி இறந்துவிட்டாங்க..."

மிப்ரா அப்படியே மயங்கிப் போனான்.

செய்தியறிந்த மிப்ராவின் உம்மா பதறியவளாய் இவனைத் தேடி ஓடிவர,

தமயந்தியின் பெற்றோரோ–

தம் மகளின் சாவுக்காவது வராமல்...

மதங்களைத் தாண்டிய தமயந்தியின் 'காதல்' குற்றமாகிப்போய்...

எப்படியோ...

மிப்ரா தனித்து விடப்பட்டான்.

### 1995

மிப்ராவினால் தமயந்தியை மறக்க முடியவில்லை.

மறக்க நினைத்தாலும் நினைக்கத் தூண்டுவதுதான் காதல்!

என்றாலும்... அவளது இழப்பை அவனால் ஈடுசெய்ய முடியாத பட்சத்திலும் உம்மா அவனுக்கு இரண்டாம் கல்யாணம் பேசிக்கொண்டிருக்க...

எந்த சம்பந்தமும் ஒத்து வரவில்லை. இஸ்லாமியர்கள் ஒதுங்கிப் போனார்கள்.

அப்படி ஒத்து வந்த சம்பந்தங்களும் இடையில் முறிந்து போயின.

காரணம்...

'அவன் சிங்களக் குட்டியைக் கூட்டிட்டு ஓடினவன்.'

ஆக - யாருமே அவனுக்குப் பெண் கொடுக்க முன்வரவில்லை.

ஈற்றில்... பத்திரிகையில் 'மணமகள் தேவை' பகுதியில் விளம்பரம் செய்தான்.

### இன்று....

நீங்கள் 'தினமுரசு' படிக்கும் இன்றைய காலையில் தான் மிப்ராவுக்கு அந்தக் கடிதம் வந்தது. அன்னபூரணி என்ற பெண் கடிதமெழுதி, தனது புகைப்படத்தையும் இணைத்து 'மணமகளாக' விண்ணப்பித்திருந்தாள். கூடவே சின்னதாயொரு குறிப்பு....

'மதிப்பிற்குரியவருக்கு,

உங்கள் தமயந்தியின் நெருங்கிய தோழி நான். சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாக நாம் சந்திக்க முடியாமல் போய்விட்டது. என்றாலும்... உங்கள் காதல், கல்யாணம், சந்தோஷம், சோகம் எல்லாம் நானறிவேன். தமயந்தியின் இழப்பை என்னால் மட்டுமல்ல எந்தப் பெண்ணாலும் ஈடுசெய்ய முடியாது என்பது சத்தியம். ஆனாலும் அவள் வாழ்ந்த இடத்தில் - ஸ்தானத்தில் அவளது குழந்தைக்குத் தாயாக... உங்கள் மனைவியாக வாழ ஆசைப்படுகிறேன்.

- என்னை ஏற்றுக்கொள்வீர்களா?'

மிப்ராவினால் ஏற்றுக்கொள்ள முடிந்தது.

---

> "என்னைத் தேடி இராத்திரி 12மணிக்கு என் இளவரசன் வருவான். அவன்_"

# என் அப்பா ஏன் அப்பா?

சந்திரவதனன் விளித்துக்கொண்டு நிற்கிறான். தவறு. உண்மை புரியாமல் உலகம் இடிந்து போனதாக துள்ளுகிற பீதாம்பரம்: கசங்கிப்போனவள் என்று பெயர் வாங்கினாலும் கலங்காமல் பேசுகிற கல்யாணி; அட்சயபாத்திரத்தை எச்சில் படுத்தினான் என்று அவன் மீது எரிந்து விழுகிற பெரியப்பா நந்தகோபால்!

"இந்த நாயை இதுக்குத்தானா அஸிஸ்டென்ட் ஆக்கினேன்.... என்று குமுறுகிறார் பீதாம்பரம். 'றேப்' பா பண்ணினாய்? நட பொலீசுக்கு என்ற வார்த்தையில் நந்தகோபாலின் கோபம் பளிச்சிடுகிறது.

சந்திரவதனன் சலனமின்றி நிற்கிறான். அவர்கள் கோபத்துக்கு அர்த்தம் சொல்லிப் புரிய வைக்க அவனால் முடியவில்லை. ஆனால் கல்யாணி தீர்மானமாகப் பேசுகிறாள். "தவறு என்னுடையதுதான். என்னை அப்பா தலை முழுகாமல் தக்க வைத்துக்கொண்டது தான் தப்பு."

அனைவரும் அதிர்ந்து போகின்றனர். கல்யாணி முடுக்கி விட்ட பொம்மையாய்த் தொடர்கிறாள். "அப்பா பெரியப்பாவை வைத்துக்கொண்டு இப்படியே பேசலாமா?"

"பேசித்தொலை..." என்கிறது பீதாம்பரத்தின் கோபம்.

"தொலையிறதுக்கு இல்லேப்பா, கல்யாண வயசு. வெறும் கத்தரிக்காய் இல்லை'ன்னு சொல்லணும்."

"வெட்கம் கெட்ட மூதேவி" என்று பீதாம்பரம் குமுற, அவரைக் கையமர்த்தி அடக்கிய நந்தகோபால் "நீ சொல்லும்மா..." என்று கல்யாணிக்கு தைரியமூட்டுகிறார்.

கல்யாணி பவளக் கன்னங்களில் படிந்த கண்ணீரை வெண்டிக்காய் விரல்களால் ஒற்றிக் கொள்கிறாள். கவலையைக் கொஞ்சம் காரமாக்கிக் காட்டுமாப்போல் பெருமூச் சொன்று பிரியாவிடை பெறுகிறது. சந்திரவதனனை ஒருமுறை தீர்மானமாய்ப் பார்த்து... பேசுகிறாள்:

"பெரியப்பா உங்களுக்கு எத்தனை பிள்ளைகள்?"

நந்தகோபால் நகைக்கிறார். "என்னம்மா தெரியாதவர்களுக்குத்தான் தெளிவு படுத்தணும்...நீ...?"

"சும்மா சொல்லுங்க பெரியப்பா, வயசையும் சேர்த்து!"

காரணத்தோடு கேட்கிற கல்யாணியைப் பார்த்து நந்தகோபால் சொல்கிறார். "மூத்தவனுக்கு வயசு முப்பது. அடுத்த தம்பி. அப்புறம் இருபத்தியேழு. இருபத்திஅஞ்சுல தங்கச்சிங்க. நான் காதலிச்சேன் பெரியப்பா. உங்க பொண்ணு மாதிரி. ஆனா நீங்க கல்யாணம் செஞ்சுவெச்ச மாதிரி எங்கப்பா செய்து வைக்கல்ல. அந்தஸ்து கௌரவம் பேசி அழிச்சுட்டாரு. தெரியுமா பெரியப்பா?"

நந்தகோபாலின் விழிகள் வியப்புக்குப் போகின்றன.

"சத்தியம் பெரியப்பா. அப்பா எனக்கு



- அம்தரவல்ல நிலாவாசன் -

முகூர்த்தத்தில கல்யாணம். அப்புறம் பொண்ணு. மூணு வருஷத்துக்கு முன்னமே கல்யாணம் பண்ணிக்கிட்டா. அடுத்தது பையன். பிறகு படிப்படியா ரெண்டு பொண்ணுங்க. ஏன்ம்மா?"

"பொண்ணுங்களுக்கு எப்போ கல்யாணம்?"

"பேசி முடிச்சாச்சு. காதல்தான். படிப்பு முடிஞ்சதுமே பண்ணி வைக்க ஏற்பாடு."

"பெரியப்பா எனக்கு வயசு முப்பத்தாறு. எனக்குப் பிறகு முப்பத்திரண்டு வயசில பதினெட்டு வயசிலேயே மாப்பிள்ளை பார்க்க ஆரம்பிச்சுட்டாரு. அழகிருந்தும் அறிவிருந்தும் எதுவுமே ஆகல்ல. ஏன்னா அப்பா எல்லா மாப்பிளைக்கிட்டேயும் பணத்தைத் தான் பார்த்தாரு. மனசையோ குணத்தையோ பார்க்கல்ல."

சொன்ன கல்யாணி பீதாம்பரத்தை நேருக்கு நேர் பார்க்கிறாள். "அப்பா நீங்க மாந்தோப்பு முனியம்மா வீட்டுக்கு அடிக்கடி போறது எனக்குத் தெரியும். முனியம்மா ஒரு விபச்சாரின்கிறது ஊருக்கே தெரியும். அம்மா இறந்ததற்குப் பிறகு எத்தனை முற நீங்க விசாலாட்சிய தொட்டிருப்பீங்க? வேலைக்காரியா வந்தவ, வயிற்றில அடிக்கிறீங்க, பாவம். உங்கள நான் தட்டிக் கேட்டேனா? காரணம் அந்த உணர்வுகள் என்னையும் ஆட்படுத்துது. அடிமைப் படுத்துது. அதுக்காக உங்க வழிதான் நியாயம்'ன்னு நான் சொல்லல்ல. தவறு'ன்னு சொல்லி தடை போட எனக்கு அருகதையில்ல."

கல்யாணியின் கண்ணீர் கன்னம் தாண்டி கழுத்தைத் தொட நந்தகோபாலைப் பார்க்கிறாள். "சொல்லுங்க பெரியப்பா. அப்பா வயசு போன கட்ட, அவரால் அந்த உணர்வுகள அடக்க முடியல்லேன்னா.... நான் பருவப் பொண்ணு. என்னால எப்டி...எப்டி....?"

பீதாம்பரம் விறைப்பாக ,சந்திரவதனன் வெளியே பிராக்குப் பார்க்கிறான். நந்தகோபாலின் விழிகள் ஈரமாகின்றன.

"என்னைத் தேடி ராத்திரி பன்னிரெண்டு மணிக்கு மேல என் இளவரசன் வருவான். அணைப்பு அத்துமீறல், கிளுகிளுப்பு, உடற்சுகம் எல்லாமே நடக்கும். விடிய விடிய இருந்து என் விழிகள ஈரமாக்கிட்டுப் போவான். விழித்துப் பார்த்தா பனிரெண்டு அஞ்சா...இருக்கும். எல்லாமே கனவு. என்னை வதைக்கிற பொல்லாத கனவு."

"உள்ளம் ஒருமுறை சிணுங்கினா அடக்கிடலாம். ஆனா ஓராயிரம் முறை லெட்சம் முறை.... அதுவே வாழ்க்கையானா என்ன செய்யலாம்? பருவம், உடற் கவர்ச்சி, அங்க வளர்ச்சி எல்லாமே இருக்கிறது. அனுபவிக்கத்தான்."

பீதாம்பரத்தின் விழிகளில் லேசாய்ப் பனித்திவலைகள் படிவதைப் பார்த்து தீர்மானமாய்ச் சொல்கிறாள் கல்யாணி.

"அழாதீங்கப்பா. இது அழுகிற நேரமில்ல. சந்தோஷப்படுகிற நேரம். இங்கு வாற மாப்பிள்ளைக்கெல்லாம் காட்சிப் பொருளா நிற்கிற நிலைமை இனி எனக்கு இல்ல. கணவனா சந்திரவதனன் கிடைச்சாச்சு. அவர் என்ன 'றேப்' பண்ணிட்டதா நீங்க நினைக்கலாம். தப்பு, நடந்தது இதுதான்:

"அந்தப் பனிரெண்டு மணிக் கனவு'ன்னு சொன்னேனே அது நேத்து ராத்திரியும் வந்தது. பனிரெண்டு அஞ்சுக்கு முடிஞ்சும் போச்சு. ஆனா பழக்கப்பட்ட மாதிரி வீறியெழுந்த உணர்வுகளை என்னால அடக்க முடியல்லப்பா. எப்படி முடியும்.? பழுத்து பக்குவப்பட்டாச்சு.பார்த்துக்கொண்டிருக்க முடியுமா?

"சந்திரவதனன் ஹோல்ல படுத்திட்டிருந்தாரு. அவர எழுப்பினேன். தொந்தரவு செஞ்சேன். என் பசிக்கு கம்பனி கேட்டுக் கெஞ்சினேன். ஆனா அவர்...

"என் கதைய, என் கனவுகளை, என் உணர்வுகள ஒவ்வொன்றாவே புரிஞ்சிக்கிட்டாரு. ரெண்டு பேரும் ரொம்ப நேரம் பேசினோம். திருமணம் பண்ணிக்கலாம்'ன்னு தீர்மானம் பண்ணிக்கிட்டோம். சந்திரவதனனுக்கு இருபத்தியெட்டு வயசு. எனக்கு எட்டு வயசுக்குப் பிறகு பிறந்தவரு. ஆனா வயசு வாழ்க்கைச் சந்தோஷத்துக்கு கஷ்டமா இருக்காது'ன்னு உறுதியா சொல்றாரு.

"நீங்க வந்து பார்க்கும்போது நானும் வதனனும் நெருக்கமா இருந்தோமே.. அது காமத்தால் வந்ததில்ல. காதலால் வந்தது. அந்தக் கணமே, அந்த நிமிஷமே நாங்க கணவன் மனைவியாயிட்டோம். சம்பிரதாயங்களும் சடங்குகளும் சமூகம் தன்மீது கொட்டிக் கொண்ட சுமைதானேப்பா. அது இருந்தால் என்ன, இல்லாட்டி என்ன? தாலி என் கழுத்துல ஏறாவிட்டாலும் அவருக்கு நான் மனைவிதான்.

"இன்றைக்கு மூரியம்மா கோயில்ல போய் ஐயர் முன்னால மந்திரம் சொல்லி தாலி கட்டிக்கிறதா நேற்றே தீர்மானம் பண்ணிக்கிட்டோம். அதுக்குள்ளதான் இந்தக் களேபரம். சரி, பரவால்ல. இப்போதைக்கு எங்கள ஆசீர்வதிங்கப்பா, ஆசீர்வதிங்க பெரியப்பா."

சொன்ன கல்யாணி சந்திரவதனனை இழுத்து, நேர நிறுத்தி... பீதாம்பரத்தின் கால்களில் விழ.... அவர் கண்கள் கொட்டிய நீர் கல்யாணியின் தலையில் விழுந்து தெறிக்கிறது. எதுவுமே சொல்ல முடியாத கவலையில் நீர் கண்களை நிறைக்க "என்னை மன்னிச்சிடும்மா...." என்கிறார் இருவரையும் அணைத்துக் கொண்டு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நிறுத்தாத நெஞ்சம்

## இலக்கிய நயம்

படைத்தளபதி இமயவரம்பன் விழிகளை உயர்த்தி உப தளபதியை விசாரித்தான்.

"யாரது அம்சவேணி?"

"ஈட்டி விழிகளுக்கு சொந்தக்காரி. இணையில்லா நாட்டியப் பேரொளி."

"அவளையெதற்கு காண வேண்டும் நான்?"

"அவளையல்ல, அற்புதமான அவளுடைய நாட்டியத்தை!"

"அதுதான் ஏன் என்கிறேன்?"

"கலையை இரசித்தால் தங்கள் கவலை பறக்கும் என்பதால்."

என்னை வாட்டிக்கொண்டிருக்கும் வேதனைகளை "நாட்டியத்தால் விரட்ட முடியுமா? போடா முட்டாள்!"

"வாதம் எதற்கு தளபதி. ஒரு முறை வந்துதான் பாருங்களேன்."

இமயவரம்பன் தன் மீசையை வருடிக்கொண்டான். மீசையை வருடுகிறான் என்றால் முடிவெடுக்க யோசிக்கிறான் என்று அர்த்தம்.

"என் கவலை என்னவென்று தெரியுமல்லவா உனக்கு?"

"என்ன இப்படிக் கேட்டுவிட்டீர்கள்? நான் உங்கள் நிழல்."

"சரி சொல்லு, என் கவலை என்ன?"

"எதிரேயுள்ள எதிரியின் கோட்டை எட்டுத்திங்களாகியும் எம்வசமாகவில்லை என்பதுதான் தங்கள் தீராக்கவலை."

இமயவரம்பன் சிரித்தான்.

"சரியாகச் சொன்னாய் உபதளபதி! கோட்டையைப் பிடிப்பது எப்படி என்று நான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். நீயோ கோல மயிலின் இடை அசைவை இரசிக்க வா என்று அழைத்துக் கொண்டிருக்கிறாய்! எதிரியின் சூழ்ச்சிகளை எப்படி முறியடிக்கலாம் என்று நான் மூளையை உடைத்துக் கொண்டிருக்கிறேன்; நீயோ சுழலும் விழிகளுக்குள் என்ன சூட்சுமம் இருக்கிறது என்று ஆராயலாம் வா என்று அழைப்பு விடுத்துக் கொண்டிருக்கிறாய்."

"மன்னிக்க வேண்டும்"

"எதற்கு? என்னை அழைத்ததற்கா?"

"இல்லை, குறுக்கிடுவதற்கு-உங்கள் பேச்சில்! "

"நல்லது, சொல்!"

"குளித்தால் புத்துணர்ச்சி கூடுகிறதல்லவா?"

"சிலருக்கு குடித்தாலும் கூடுகிறது"

சொல்லிவிட்டு இமயவரம்பன் இடியென நகைத்தான்.

உப தளபதி சளைக்காமல் தொடர்ந்து சொன்னான்,

"குடிக்கவும் வேண்டாம். குளிக்கவும் வேண்டாம்,
கண்டு களித்தாலே போதும் அம்சவேணியை!

இமயவரம்பன் இப்போதும் மீசையை வருடினான்.

"சரி வருகிறேன்"

▫▫

"காமன் வில் தெரியுமா
பாணம்தான் மோகம் புரியுமா
வாருங்கள் என் விழிகளைப் பாருங்கள்
மோகம்தான் தெரியுது காணுங்கள்"

அம்சவேணி ஆடிக்கொண்டிருந்தாள். இதழ்களால் மதனகீதம் தொடுத்துக் கொண்டிருந்தாள்.

"மலராக என்னை மாற்றுங்கள்
தேனுண்டு-உண்ண வாருங்கள்
மங்கையில் நானொரு மாங்கனி
மஞ்சமாய் என்னை மாற்றுங்கள்."

இமயவரம்பன் தன் உறுதியை இழந்துகொண்டிருந்தான்.

"இதழ்களில் புதுக்கதை எழுதுங்கள்.
வாழை மடல்களில் தனிக்கதை கேளுங்கள்
கோலக்கனிகளில் புதுச் சுவை தேடுங்கள்
பட்டு மஞ்சத்தில் பாவை-உண்ணுங்கள்"

இமயவரம்பனுக்கு எல்லாம் மறந்து போனது. அம்சவேணி மட்டுமே எல்லாமுமாகத் தெரிந்தாள். அவள் தன்னைத்தான் குறிவைத்து அழைப்பதாய் உணர்ந்தான்.

"பட்டுக் கன்னத்தில் தொட்டுப் பாருங்கள்
கொட்டும் வண்டாக துள்ளி வாருங்கள்
சுட்டும் விழிகளில் சொர்க்கம் காணுங்கள்
சொர்க்கம் செல்லுவோம் வந்து சேருங்கள்"

உபதளபதி இமயவரம்பனை அர்த்தத்தோடு நோக்கி புன்னகைத்தான். இமயவரம்பனோ அம்சவேணியை மட்டுமே விழிகளுக்குள் வாங்கி விழுங்கிக் கொண்டிருந்தான்.

அம்சவேணி மதன கீதத்தின் உச்சத்தை தொட்டாள்.

"வலையை விரித்துவிடு பறவை துடிக்கிறது வா!
கலையை சொல்லித்தர காளை நினைக்கிறது தா!
மழையைத் தேடி தளிர் நனையத்துடிக்கிறது வா!
உலையைப் போல் நெஞ்சு அணையக் கொதிக்கிறது தா!"

இமயவரம்பன் எதிரிகளை மறந்தான். கோட்டையைப் பிடிக்கும் கனவையும் தொலைத்தான். தன் கட்டளைக்காகக் காத்திருக்கும் படைகளையும் மறந்தான்.

"நெற்றி கொதிக்கிறது நெஞ்சு துடிக்கிறது
வெற்றி வீரனே கொஞ்சமிதழ் உனக்கு
சுற்றி இடையணைத்து கொட்டித்தா எனக்கு
வெற்றி உனக்குத்தானென்று விடியும்வரை நடத்து"

இமயவரம்பன் எழுந்து கொண்டான். அம்சவேணி நடனத்தை நிறுத்தினாள். நயன பாஷையை அவன் கவனத்திற்கு அனுப்பினாள்.

தனியறை, இளமேனி, பட்டு மஞ்சம்! இமயவரம்பன் அம்சவேணியின் அழகுக்கு முன்னால் தன்னையொரு துரும்பாக நினைத்தான்.

"அம்சவேணி!"

"என்ன தளபதி!"

"நான் நானாக இல்லையடி!"

"வேறுயாராக இருக்கிறீர்கள்?"

"வான தேவதை ஒன்றின் வரம் வாங்கிய பக்தனாக! வாராது வந்த வரமிது அல்லவோ."

அம்சவேணி நகைத்தாள். மதுக் கின்னத்தில் இதழ் வைத்து உறிஞ்சினாள். உறிஞ்சிய மதுவை தேக்கி அவன் உதட்டில் இதழ்களால் ஊட்டினாள்.

### தருவது—ரசிகன்



"அம்சவேணி நம் தேசத்து மதுவிலிருந்து சீனத்து மதுவரை தேடியருந்தியிருக்கிறேன். எந்த மதுவிலும் இந்த மதுபோல ஒரு சுவை நான் இந்நாள்வரை கண்டதில்லையடி!"

"தேவையா இன்னும் தேன் கலந்த தேவமது!"

"கேள்வியா இது? குவளையில் உள்ளது தீரும்வரை கொடு!"

"தீர்ந்த பின்னால்?"

"தேன் குடம் நீ! உன்னைக் கொடு!"

"புரவியில் ஏறி நீங்கள் படைநடத்தும் அழகைப் பார்த்திருக்கிறேன். புலவர்போல பேசும் அழகை இப்போதுதான் கேட்கிறேன்."

இமயவரம்பன் புகழ்ச்சியில் மெய்மறந்தான். அதுவும் அழகான பெண்ணால் புகழப்படுவது புரவி வேக உற்சாகம் என்று நினைத்துக் கொண்டான்.

"அம்சவேணி அருகே வா நீ!
தங்கமடி உன் மேனி. இன்பக்
கேணியடி நீ, வா என் ராணி!"

"அருகில் வர முன்னர் தங்களை
மகிழ்விக்க ஆடவா அல்லது பாடவா?"

"அடியே அம்சவேணி, மலர்களின் ராணி, நீ ஆடவும் வேண்டாமடி, பாடவும் வேண்டாமடி, மார்பில் சூடவா, போதுமடி"

அம்சவேணி நகைத்து தன் இரு கரங்கள் தட்டி ஓசை எழுப்பினாள்.

அறைக்குள் நாற்புறமும் தொங்கிய திரைகள் விலகின. ஆயுதங்களோடு தோன்றினர் வீரர்கள்.

இமயவரம்பனுக்கு போதை சட்டென்று இறங்கியது. துள்ளி எழ முயன்றான். இடையைத் தொட்டுப் பார்த்தான்.

அங்கே உறை இருந்தது. வாள் இருக்கவில்லை. வாள் அம்சவேணியின் கரத்தில் இருந்தது.



"அடியே துரோகி"

கூவினான். அவள் நகைத்தாள்.

"துரோகம் என்பது கூட இருந்தே குழி பறிப்பது! நட்பாய் இருந்து நாசம் செய்வது! நான் கூட இருக்கவில்லை; குறி வைத்தேன்! மங்கை நான் வைத்தது பொறி; மாட்டிக் கொண்டது மதயானை!"

அம்சவேணி நகைத்தாள். இமயவரம்பன் வீரர்களால் சூழப்பட்டான்.

"அழைத்துச் செல்லுங்கள்!"


'மோதும் படைகளால் வெல்ல முடியாத என்னை மோகினியால் தாக்கி வென்று விட்டார்களே' தளபதி எதிரிகள் மத்தியில் நடந்தபடி நினைத்தான். அப்போதுதான் திருவள்ளுவர் வாக்கின் மெய்மை அறிந்தான்.

நிறை நெஞ்சம் இல்லவர் தோய்வர் பிற நெஞ்சிற்
பேணிப் புணர்பவர் தோள்"

'நெஞ்சத்தை நிறுத்தி ஆளும் ஆற்றல் இல்லாதவர்கள் தம்நெஞ்சில் வேறு எண்ணங்களோடு கூடல் செய்யும் விலை மகளிரின் தோளைப் பொருந்துவர்' என்பதுதான் அக்குறள் சொல்லும் பொருள்.

அதிகாரம் 92-பாடல்-917

## குறுக்கெழுத்துப் போட்டி இல—102



### இடமிருந்து வலம்

01. அர்த்த ராத்திரியிலும் கண் சிமிட்டி அழகு காட்டும்.
03. ஏழ்மையில் வாழ்பவர்களின் வயிற்றைக் கழுவ உதவுவது.
05. இத்தகைய வடிவுடன் கூடிய பொருள் சைவ ஆலயங்களில் பயன்படும்.
06. இதிகாசம் ஒன்றில் மாயம் புரிந்தவன்.
07. கீழைத்தேய நாடுகளில் வாழும் மக்கள் அன்றாடம் விரும்புவது.
09. சிலரை வீழ்த்த சிலரால் பறிக்கப்படுவது.
10. இந்த மிருகத்தின்பேயெரைச் சொல்லி சிலரைத் திட்டுவார்கள்.
11. ஒளிக்கவர்ச்சியில் சிக்கித் தன்னையே அழித்துக் கொள்ளும்.

### மேலிருந்து கீழ்

01. இளம்பெண்களின் எழிலுக்கு எழிலூட்டும் இது தற்போது நம் நாட்டிலும் அருகி வருகிறது.
02. பிறரிடமிருந்து உதவி பெற்றால் இதனைச் செய்ய வேண்டும்.
03. கல்வியில் கூடிய இது இருந்தால் வெற்றி நிச்சயம்.
04. சிற்பியின் பிரசவம்.
08. பன்னிரண்டு வருடத்திற்கு ஒரு முறை இதுபூக்கும்.
09. சில இல்லங்களிலும் கூடு கட்டி வளர்ப்பார்கள்.
10. கடல் வாழ் பிராணியின் உடல் சூழ் அவயவம்.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட் யில் வெட்டி ஒட்டி 03.06.1995க்கு முன்னர் எமக்குக் கிடைக் டி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-102
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-100ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 இ | று | 2 மா | ப் | பு | | 3 ந |
| ந் | | மா | | | 4 பா | ரி |
| 5 தி | மி | ங் | கி | ல | ம் | |
| ர | | 6 க | ட | ப் | பா | டு |
| ன் | | ம் | | | ட் | |
| | 7 ப | | 8 க | ட் | டி | ல் |
| 9 ப | ல் | லா | ண் | டு | | |

### குறுக்கெழுத்துப் போட்டி இல. 100இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்.

1. செல்வி. சி. சுந்தரவாணி, கொழும்பு-06.
2. ஏ. பேரின்பநாதன், நிலாவெளி.
3. எம். மஸாஹிர், கொழும்பு-09.
4. செல்வி. எம். ஃபௌமிதா, கொச்சிக்கடை.
5. திருமதி.வி. நிர்மலாதேவி, பண்டாரவளை.
6. முனவ்வரா சாகிப், வாழைச்சேனை.
7. முகமட் ஸறூக், மாத்தளை.
8. எஸ். ஸ்ரீநாத், புத்தளம்.
9. பி. மேரி சுஜிதா, நீர்கொழும்பு.
10. ஜி. கிறிஸ்டோப்பர், மன்னார்.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

## சிந்தியா பதில்கள்



சிந்தியா! காதலுக்காக உயிரை விடலாமா?

ஜே.ஜிப்றி-அக்கரைப்பற்று-06

சேச்சே.... சாதலுக்காகத்தான் உயிரை விடுவார்கள்.

▫▫

மைடியர் சிந்தியா! இன்றைய பெண்களைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

முருகேஸ் தெய்வீக ரஞ்சனி-பதுளை

முள்ளும்-மலரும்.

▫▫

ஐ.தே.க அரசாங்கத்துக்கும், பொது ஜனமுன்னணி அரசாங்கத்துக்கும் இடையில் உள்ள வித்தியாசம் என்ன?

ஏ.எல்.அமீர் ஹுஸைன்-கல்முனை-03

தலைவன் - தலைவி.

▫▫

வடக்கு-கிழக்கை இணைத்து தருவதாக அரசாங்கம் கூறுகிறதாமே! இது நடக்குமா?

ஜ. நாகராணி-ஹேட்டன்.

ஏற்கனவே இணைந்துதானே இருக்கிறது. தேவையானது, பிரிக்க வேண்டும் என்ற பிடிவாதமின்மை. புதிய அரசு பிடிவாதத்தை தளர்த்தியுள்ளதாக கூறப்படுவது உண்மையானால் வரவேற்கலாம்.

▫▫

ஆசையை அடக்க ஏதும் வழிகள் உள்ளதா?

முகமட் சதாத்-மண்முனை.

வழிசொல்வதாக புறப்பட்டவர்களே வழுக்கி விழுந்த விவகாரமான விசயமாச்சே! நான் என்ன சொல்வது? சமாதானத்தை தயார்படுத்தி அழைத்து வரவேண்டியவர்கள் அது இருக்குமிடத்தை விட்டு இல்லாத இடத்தில் தேடிக்கொண்டிருக்கிறார்கள்.

▫▫

சிந்தியா! அன்புக்கும் அம்புக்கும் உள்ள வேறுபாடு என்ன?

விஜந்தி ரோபட்-தலைமன்னார்.

முன்னது தொடும். பின்னது துளைக்கும். எதை? இதயத்தை!

▫▫

சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் தொடருமா?

மோகன்-மட்/ கன்னன்குடா.

பேச்சுக்களால் மட்டும் சமாதானம் வருமோ ஐயா.தேவையானது செயல் வீச்சு.

▫▫

காதலித்தால் கவிதை எழுத முடியுமா சிந்து?

எம். றுக்கியா-குவைட்.

காதலே ஒரு கவிதைமாதிரித்தானே றுக்கியா!

▫▫

பிரேமானந்தா சுவாமியார் என்ன செய்கிறார்?

எஸ்.தோமஸ்-கண்டி

எடுத்துக் கொடுக்க ஆளில்லாவிட்டால் சிவலிங்கமும், சில சின்னச் சின்னப் பொருட்களும் உள்ளங்கையில் உற்பத்தியாகாது என்பதை சிறையில் நிரூபித்துக் கொண்டிருக்கிறார். மிஸ்டர் பிரேம்ஸ் சிறைக்குள் இருந்தும் சிவலிங்கம் எடுப்பார் என்று நினைத்து ஏமாந்தவர்கள் ஐயோ பாவம்

▫▫

இலங்கை திருநாட்டில் சமாதானத்திற்கு குறுக்கே நிற்பவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ஆர்.ரவி-பிறுவான்கொடை.

சமாதானம் இன்னும் புறப்பட்டு வரவேயில்லையே ரவி, பிறகு எப்படி யாராயிருந்தாலும் குறுக்கே நிற்கமுடியும்.

▫▫

மனிதன் நினைப்பதெல்லாம் நடந்து விட்டால்?

ஜனனி மதுரலிங்கம்-கொட்டாஞ்சேனை.

வன்முறைக்கே அவசியமில்லாமல் போய்விடும். போர்களால் பூமியும் காயப்படாமல் இருக்கும்.

▫▫

நீங்கள் சந்திக்க விரும்பும் நபர்?

எஸ்.கடாபி-ஹொரவ்பொதானை

நிச்சயமாக நீர் அல்ல.

▫▫

சத்யராஜ்-ராதிகா ஜோடிசேர்ந்து நடிப்பதால் 'வில்லாதி வில்லன்' தூள்தானே?

எம்.தங்கேஸ்வரன்-மட்டக்களப்பு

தாய்நாடு, வீரப்பதக்கம் இரண்டிலும் இதே ஜோடி நடித்தும் கூட இரண்டும் அவ்வளவாகப் போகவில்லை. வில்லன் வந்தபின்னர்தானே தெரியும். வரட்டும் பார்க்கலாம்!

▫▫

பிரபு நடித்து அடுத்து வரப்போகும் படம் எது?

விநாயகம் மீனா-கொழும்பு-06.

அநேகமாக 'பெரிய குடும்பம்.'

▫▫

வாழ்க்கையில் அனுபவிக்க வேண்டிய விடயங்கள் எத்தனை?

சிங்கப்பூர் கான்-கிண்ணியா-06.

அத்தனையையும்தான் இங்கே அனுபவித்துக் கொண்டிருக்கிறோமே. (நாட்டு நிலவரத்தை சொன்னேன்)

▫▫

பிரபாகரனை இலங்கை அரசு இந்தியாவிடம் ஒப்பபை நமா?

ஜான்சன்-திருமலை.

பிரபாகரன் இலங்கை அரசின் எந்தச் சிறையில் இருக்கிறார், கேட்டவுடன் ஏற்றி அனுப்பிவைக்க.....?

▫▫

இந்தியாவின் அரசியல் நிலவரம் எப்படியிருக்கிறது என்று கூறமுடியுமா?

கே.உமைபாலன்-வவுனியா

சோனியாவுக்கு சாதகமாக இருக்கிறது. சோனியாவின் நோக்கம் மட்டும் மூடுமந்திரமாக இருக்கிறது.

▫▫



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இமயத்தின் சிரசில் 'செவாலியே'

## வரலாற்று நிகழ்வில் இங்கே ஒரு சிறு துளி!



### பராசக்தி

இது 'செவாலியே' சிவாஜியின் முதல் படம் பராசக்தியில் ஒரு கட்டம். இந்தக் காட்சியில் சிவாஜி பேசிய வசனம்.

பொலிஸ்: என்னப்பா பிக்பொக்கெட்டா?

குணசேகரன் (சிவாஜி) பொக்கட்டுக்களை வெளியே இழுத்துக் காட்டியபடி) இல்லையப்பா எம்டிப் பொக்கட்"

(வசனம் எழுதியது கலைஞர் கருணாநிதி)

### "கம்பன்–பாரதி–சிவாஜி ஐயா" நெகிழ்ந்து பேசிய கமல்

"கியூவில் நின்று டிக்கெட் வாங்கி சிவாஜி ஐயா படங்களை பார்த்த இரசிகன் நான்.

எத்தனையோ நல்ல கலைஞர்களை தமிழகம் பார்த்து இருக்கிறது. கம்பன்,பாரதி,சிவாஜி ஐயா.

ஆனால் தன்னைப் பாராட்டும் ஒலி கேட்கும் வாய்ப்பு மற்றவர்களுக்குக் கிடைக்கவில்லை. எங்கள் ஐயாவுக்கு கிடைத்திருக்கிறது. இதற்காக ஃபிரெஞ்சு அரசுக்கு நன்றி சொல்கின்றேன்." இவ்வாறு கமலஹாசன் நெகிழ்ச்சியோடு உரையாற்றினார்.

நடிப்புலக இமயம் நமது சிவாஜி கணேசனுக்கு 'செவாலியே' விருது கிடைத்திருக்கிறது.

கலை உலக தவப்புதல்வன் மூலம் தமிழ்க் கலை உலகம் கௌரவப்பட்டுக் கொள்ளலாம்!

நடிகர் திலகத்திற்கு கடந்த ஏப்ரல் மாதம் 22ம் திகதி சென்னையில் வைத்து 'செவாலியே' விருது வழங்கப்பட்டது.

தமிழக் கலை உலக வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நிகழ்ச்சி அது!

அந்த நிகழ்ச்சியை ஒரு பக்கத்தில் தொகுத்துத் தருவதுசிரமமான காரியம். ஆனாலும் முடியுமான வகையில் முக்கியமானவற்றை தொகுத்துத் தருகிறோம்.

### 'செவாலியர்' அல்ல 'செவாலியே'



ஃபிரான்ஸ் நாட்டு அரசால் வழங்கப்படும் உயர் விருதுகளில் 'செவாலியே', செவாலியர்' இரண்டும் எவருக்கும் சுலபத்தில் கிடைத்து விடாது.

'செவாலியர்' விருது ஏற்கனவே இந்தியர் ஒருவருக்கு கிடைத்திருக்கிறது.

'செவாலியே' விருது 'செவாலியர்' விருதைவிட உயர்ந்தது.

'செவாலியே' விருது ஆசியாவைச் சேர்ந்த எவருக்கும் இதற்குமுன் கிடைத்ததில்லை.

நடிப்புலக மாமேதை சிவாஜிக்குத்தான் முதன் முதலாக 'செவாலியே' விருது ஆசியாவில் கிடைத்துள்ளது.

'செவாலியர்' விருதுதான் சிவாஜி கணேசனுக்கும் கிடைத்திருப்பதாக முன்னர் வந்த செய்திகள் தவறானவையாகும்.

'செவாலியே', 'செவாலியர்' விருதுகள் பற்றிய விளக்கமின்மையால்தான் தவறு நேர்ந்தது.

### ரஜினியின் நளினமான சாட்டை!



சென்ற ஆண்டு ஜெயலலிதா திரைப்பட நகர் சென்னையில் திறந்துவைக்கப்பட்டது.

திரைப்பட நகருக்கு சிவாஜி பெயரை சூட்டவில்லை. சிறப்பு விழாவுக்கு வந்திருந்த சிவாஜியை தமிழக முதல்வர் .ஜெயலலிதா உரிய மதிப்பளித்து கௌரவிக்கவில்லை.

இதையெல்லாம் மனதில் வைத்துக்கொண்டு 'செவாலியே' விருது வழங்கும் விழாவில் ரஜினிகாந்த் உரையாற்றினார்.

"திரைப்பட நகர் தொடக்க விழாவில் சிவாஜி சாரை சரியாக மதிக்கவில்லை. அவரை மேடையில் ஏற்றி உட்காரவைக்கவில்லை என்ற ஆதங்கம் இருந்தது.

ஆனால் இப்போது இங்கே பிரமாண்டமான விழா நடத்த ஒத்துழைத்து சிவாஜி சாரை தமிழக முதல்வர் கௌரவப்படுத்திவிட்டார். தமிழகம் இதற்காக உங்களை வாழ்த்தும்.

உலகிலேயே தலை சிறந்த நடிகர் சிவாஜி கணேசன். மகா பெரிய நடிகர். உலகத்தின் எந்த மூலையில் வேண்டுமானாலும் அவர் பிறந்திருக்கலாம். ஆனால் ஆண்டவன் அத்தகைய உலக மகா நடிகரை நமது தமிழகத்தில் பிறக்கச் செய்தமைக்காக ஆண்டவனுக்கு நன்றி கூறிக் கொள்கிறேன்."

### தமிழன் என்று சொல்லடா.....

விழாவில் விஜயகாந்த் பேசியது இது: "தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா என்ற வார்த்தைக்கு பெருமை சேர்த்துக் கொடுத்தவர் நடிகர் திலகம்.

நாங்கள் எல்லாம் அவரைப் பார்த்து சூடு போட்டுக் கொண்டவர்கள்."

### கட்டபொம்மனுக்கு வணக்கம்



மலையாள நடிகர் மம்முட்டி தமிழில் பேசினார்."வீரபாண்டிய கட்டபொம்மன், எஸ்.பி.சௌத்திரி, தேவர் அய்யா, செவாலியே எல்லோருமாகிய டாக்டர் சிவாஜிக்கு வணக்கம்.

சிவாஜியின் முகத்தைப் பார்த்துத்தான் நாங்கள் நடிக்கக் கற்றுக்கொண்டோம். அவரை இரசிக்கத்தான் எனக்கு தகுதி இருக்கிறது. பாராட்டத் தகுதி இல்லை."

### "நிரந்தரமானவன் அழிவதில்லை"

சத்யராஜ் உரையாற்றும் போது, "செவ்வாய், புதன், வியாழன், நிலா என்று வேற்றுக் கிரகங்களில் ஒருவேளை மனிதர்கள் தோன்றி, சினிமா கண்டுபிடிக்கப்பட்டால் கூட சிவாஜியை மிஞ்சக்கூடிய நடிகர் இருக்க முடியாது.

"நான் நிரந்தரமானவன்-அழிவதில்லை-எந்த நிலையிலும் எனக்கு மரணமில்லை" என்று கண்ணதாசன் பாடியது சிவாஜி சாரைப் பார்த்துத்தான்.

உலகில் சிறந்த இயக்குநர் ஸ்டிபன் ஸ்பீல்பர்க் கம்பியூட்டர் மூலம் டயனோசரை உருவாக்க முடிந்தது. ஒரு சிவாஜியை உருவாக்க முடியுமா? முடியாது."

### செவாலியே சிவாஜி விருது.



தமிழக அரசால் 'செவாலியே' சிவாஜி பெயரில் மாநில விருதுவழங்கப் போவ தாக தமிழக முதல்வர் அறிவித்தார். கலை உலகில் சிறப்பாக பணியாற்றியவர்களுக்கு ஆண்டு தோறும் இனி 'சிவாஜி விருது' வழங்கப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா உறுதியளித்தார்.

### சிவாஜி சாலை

நடிகர் திலகம் 'செவாலியே' சிவாஜி கணேசனின் வீடு சென்னையில் போக் ரோட்டில் இருக்கிறது. அந்த வீதிக்கு சிவாஜியின் பெயரைச்சூட்ட வேண்டும் என்று விழா மேடையில் வைத்து நடிகர் சிவகுமார் கோரிக்கை விடுத்தார்.

அவரது கோரிக்கையை தமிழக முதல்வர் உடனே ஏற்றுக்கொண்டார். இனிமேல் போக் ரோட் 'செவாலியே சிவாஜி சாலை' என்று அழைக்கப்படும். அதற்கான ஆணைகள் விரைவில் வழங்கப்படும் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார்.

### கலை உலக பீஷ்மர் சிவாஜி



தமிழக முதல்வர் புகழாரம்!

'செவாலியே' சிவாஜியை வாழ்த்தி தமிழக முதல்வர் ஆற்றிய உரையில் இருந்து:

"தமிழ் தாயின் தவப் புதல்வன் டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களுக்கு ஃபிரான்ஸ் நாடு வழங்கியுள்ள 'செவாலியே' விருது தமிழ் திரை உலகத்திற்கு மட்டுமல்ல, தமிழகத்திற்கு மட்டுமல்ல, இந்தியாவுக்கே பெருமை சேர்த்துள்ளது

டாக்டர் சிவாஜி கணேசன் அவர்கள் தனது நீண்ட நெடிய கலை உலகப் பயணத்தில் எத்தனையோ விருதுகைளப் பெற்றிருக்கிறார். இன்று அவர் பெற்றுள்ள 'செவாலியே' விருது அவரது சாதனை மணி மகுடத்தில் பதிக்கப்பட்ட மிகப் பிரகாசமான வைரக்கல் என்பதில் ஐயமில்லை.

டாக்டர் சிவாஜி நடிப்புத் துறையில் அட்சய பாத்திரம். கலை உலகின் பீஷ்மர்.

இந்திய அரசு 'தாதா சாகிப் பால்கே' விருதினை சிவாஜி கணேசனுக்கு வழங்க வேண்டும் என்று இந்த விழா வாயிலாக கேட்டுக்கொள்கிறேன்."

### மகளாகவும் ஜோடியாகவும்

சிவாஜியோடு 'பாபு' படத்தில் மகளாக நடித்தவர் ஸ்ரீதேவி. அப்போது அவர் குழந்தை. பின்னர் சிவாஜியின் ஜோடியாக 'டுயட்' பாடி ஆடி நடித்தவர் ஸ்ரீதேவி.

விழாவில் ஸ்ரீதேவி பேசியது இது:

"உங்களுடன் நடித்தமைக்காக, உங்கள் காலத்தில் வாழ்ந்தமைக்காக பெருமைப்படுகிறேன்.

தந்தை பெரியாரால் சிவாஜி என்றும், மூதறிஞர் ராஜாஜியினால் "நான் சிவாஜியைப் பார்க்கவில்லை பரதனைப் பார்த்தேன்" என்றும், பெருந்தலைவர் காமராஜரினால் "நடிகர் திலகத்தை நினைத்து ஒவ்வொரு தமிழனும் பெரு மைப்படணும்" என்றும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரினால், "என் தம்பியின் நடிப்பை யாரும் மிஞ்சிவிடப் பிறக்கவில்லை" என்றும் பாராட்டப்பட்டவர் சிவாஜி சார்."

### மகாபாரதம்

கதை- வசனத் தொடர்,

கடந்த 14.05.95 ஞாயிற்றுக்கிழமை எம்.ரி.வியில் மகாபாரதம் ஒளிபரப்பப்படவில்லை. 101 வது முரசில் வெளியாகியுள்ள மகாபாரதம் உண்மையில் அங்கம் 79 என்றிருக்க வேண்டும். தவறுதலாக 78 என்று போடப்பட்டுள்ளது. 21.5.95ல் மகாபாரதம் ஒளிபரப்பாகும் போது 101 முரசில் இடம்பெற்றுள்ள அங்கம் 80, 28ம் திகதி மகாபாரதம் ஒளிபரப்பாகும் போது உதவும்.

4.06.95 ல் வெளிவரும் 104 வது முரசில் 81 வது அங்கம் பிரசுரமாகும், அது 4ம் திகதி ஒளிபரப்பாகும் மகாபாரதம் பார்க்கும்போது உதவியாக இருக்கும்.

### எதைத்தான் கண்டு பிடித்தார்கள்?

நடிகர் சங்கத் தலைவர் ராதாரவி பேசியதில் இருந்து:

"நான் நடிகர் திலகத்தின் இரசிகன். அவருக்கு தேசிய விருது கிடைக்கவில்லை என்றார்கள். இந்தியாவில் எதைத்தான் கண்டுபிடித்தார்கள்? அதுமாதிரித்தான் இதுவும். சிவாஜியும் வெளிநாட்டில்தான் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறார்.

### பசும்பொன்

சிவாஜி நடித்து சமீபத்தில் வெளியான 'பசும்பொன்' படத்தில் ஒரு காட்சி.

சிறுவன்:- என்ன தாத்தா உங்களை எல்லோரும் கும்பிடுறாங்களே நீங்க என்ன அவ்வளவு பெரிய ஆளா?

தேவர் அய்யா(சிவாஜி)- அப்படித்தானப்பா ஊரிலே எல்லோரும் சொல்லிக்கிறாங்க."





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அருள் ஜுவலர்ஸ்

436331
வண்ண நகைகளின் கூடம்
எண்ணம் முழுதும் அதை நாடி
3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11
தருவது லியோடெ

Kala

JEWELLERY
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
433686
61 SEA STREET, COLOMBO 11
61 செட்டியார் தெரு, கொழும்பு 11



# ஆனாலும் போதாது

இந்திய கிரிக்கெட் அணியில் கபில்தேவ் விட்டுச் சென்ற இடத்தை நிரப்பும் உத்வேகத்தோடு பயிற்சிகளில் ஈடுபடுகிறார் ஸ்ரீநாத்.

ஒரே இடத்தில் ஆறு பந்துகளையும் 'பிச்ட்' செய்யும் முறையிலும் கடின பயிற்சி எடுக்கிறார்.

1991ல் இந்திய கிரிக்கெட் அணியில் சர்வதேச போட்டிகளில் நுழைந்தார்.

அணியில் தனக்கு போதிய வாய்ப்பு [illegible]ரப்படுவதில்லை என்று குமுறிக் கொண்டிருந்[illegible]க்கு தற்போது வாய்ப்புக்கள் கிடைக்கின்றன. [illegible]ந்திய சார்ஜா போட்டிகளில் அதிக ரன்களை [illegible]க் கொடுத்த குற்றச்சாட்டு இருக்கிறது. இனிவரும் போட்டிகளில் அந்தக் குற்றச்சாட்டை காணாமல் போகச் செய்வதே ஸ்ரீநாத்தின் குறி.

# நம்பிக்கையான வீச்சு

இந்திய கிரிக்கெட் அணியில் நம்பகமான பந்துவீச்சாளர் அனில் கும்ளே.

துடுப்பாட்டத்தில் தூள் கிளப்பும் வீரர்கள் இருந்தாலும் பந்து வீச்சு விடயத்தில் இந்தியா அணி திணறத்தான் செய்கிறது.


அசாருதீன்
அனில்கும்ளே



மனோஜ் பிரபாகரின் திறமையும் சமீபத்தில் மங்கிவருவதால் அனில் கும்ளேயைத்தான் இந்திய அணி நம்பியிருக்கிறது. சமீபத்தில் சார்ஜாவில் பந்துவீச்சில் திருப்தி தரும் விதமாக புகுந்து விளையாடினார் கும்ளே.

தன்மீதான நம்பிக்கைகள் அதிகரித்துள்ளதால் இனிமேல் கும்ளேயின் பொறுப்பும் அதிகம்தான். நம்பிக்கையைக் காப்பாற்ற வேண்டுமல்லவா.



வாரமலர் தினமுரசு

# முக்காலா முக்காபலா

மேற்கிந்தியத் தீவு அணியை அதன் கோட்டைக்குள் புகுந்தே திணறடித்துவிட்டு திரும்பியது அவுஸ்ரேலிய அணி.

வெற்றிக்கு வித்திட்ட நாயகர்களில் அனைவரையும் கவர்ந்தவர் ஷேன் வோர்ன்.

அபாரமாய் பந்துவீசிவிட்டு திரும்பியவருக்கு 'முக்காபலா' சந்தோசம் காத்திருந்தது. அந்த சந்தோசம் அவரது காதலிதான். சுற்றிலும் கமராக்கள் கவனிப்பதையும் கண்டு கொள்ளாமல் ஒருவரை ஒருவர் சிறைப்படுத்திக் கொண்டனர்.

பந்து வீச்சாளருக்கு ஏற்ற-பந்தாகும் பாவை!

பந்தை மட்டுமல்ல பாவையையும் கெட்டியாய் பிடித்துவிட்டார் ஷேன்வோர்ன்.

# அழகின் வேகம்



மேரி பியர்ஸ் - டென்னிஸ் உலகில் மூன்றாம் இடத்தில் இருக்கிறார். ரசிகர்களின் மனதைக் கவருவதில் அதைவிட வேகம். முதலாமிடம்தான்!

கவர்ச்சியான மேரி பியர்ஸ் மனதில் நிறையக் கவலை. கவலைக்கு காரணம் அவரது அப்பாதான்!

ஆட்டத்தில் தோல்வி கண்டால் அப்பா பின்னி எடுத்துவிடுவார். பொறுத்துப் பொறுத்து பார்த்த மேரி இப்போது தனியாக வந்துவிட்டார். தந்தையின் தொல்லையைத் தடுக்க தனியான ஒரு மெய்க்காப்பாளர் படையும் வைத்திருக்கிறார். அழகின் வேகத்தை முடும் சோகம்!


அமீர் சோகைல்
சாயிட் அன்வர்

# தொடங்கும் போதே அசத்தலாமா?

பாகிஸ்தான் அணிக்கு 'சார்ஜா' தோல்வி மீளாத கவலைதான். தனது திறனை மீண்டும் நிரூபிக்க தயாராகி வருகிறது அணி.

பாகிஸ்தான் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் அமீர் சோகைல், சயிட் அன்வர் இருவரும் ஆரம்பத்தில் அசத்தியே ரசிகர்களின் கரகோசத்தை அள்ளிக் கொள்பவர்கள். சார்ஜாவில் இந்த ஆரம்ப ஜோடி அமர்க்களப்படுத்தத் தவறிவிட்டதாக ரசிகர்களின் குறை. இனிவரும் ஆட்டங்களில் ரசிகர்களின் திருப்திக்கு மேலாகவாகவே ஆடுவோம் என்று கூறியுள்ளனர் இருவரும்.



இப்பத்திரிகை கொழும்பு [illegible] 28, வெலிபார, [illegible] மே மாதம் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்